32°c
கூடிய வெப்பநிலை 41 c
குறைந்த வெப்பநிலை 25 c
தெளிவான, வரண்ட காலநிலை காணப்படும்.

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

புத்தாண்டு அதிரடி விலைக் கழிவு
hp SAMSUNG DELL LapTopகள்
1 year parts Warranty, 2 years service free
HP Pavilion 15 (i3, i5) Dell 3521 (i3)
HP 450, 4540 Pro Book Dell 5521 (i3, i5)
Samsung Dual Core
Free
HSPA Dongle (E-173), 4Gb Pen drive, 1 Year Antivirus Licence, Laptop Bag, Cooler Pad, Mouse, Headphone.
021 222 1121
021 224 2222
No. 195/4, Parameswara Junction, Palaly Road.
Branch: No.116G, K.K.S. Road, Chunnakam.


விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=
சுடர்: 29 ■ கதிர்: 127 ■ வள்ளுவர் ஆண்டு: 2045
பங்குனி 19, புதன் 02.04.2014

# மீன்பிடி பாஸ் முறை மீண்டும் வடக்குக்கு

## பயங்கரவாதிகள் ஊடுருவி விடுவர் என்பதால் வருகிறதாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2
வடக்கே உள்ள மீனவர்கள் இனிமேல் கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு கடற்படையினரிடம் அல்லது இராணுவத்தினரிடம் பாஸ் பெறும் நடைமுறை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட உள்ளதாகத் தெரிகிறது. போர் முடிவுக்கு வந்தன் பின்னர் படிப்படியாகவே - மிக மெதுவாகவே - மீன்பிடிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இப்போது ஜெனிவாவில் இலங்கை அரசு மீது ஐக்கிய நாடுகள் சபை விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படுவதற்கான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படுகையில் மீன்பிடிக்கான பாஸ் நடைமுறையை மீண்டும் நடைமுறைப்படுத்தப் போவதாகப் படையினர் தம்மிடம் தெரிவித்தனர் என்று மீனவர்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

இதற்குக் கட்டியங்கூறும் வகையில் நேற்றுமுன்தினம் இரவு முதல் கரையோரப் பகுதிகளில் படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அதேவேளையில் கரையோரப் பகுதிகளில் காவலரண்களை மீண்டும் நிறுவும் பணிகளில் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.


கோப்புப்படம்

பண்ணையில் இவ் வாறு உயரமான கண்காணிப் புக் கோபுரங்களைக் கடந்த சில நாள்களாகப் படையினர் அமைத்து வருகின்றனர்.

இந்த நிலையில் அரியாலை மற்றும் மாதகல் பகுதிகளில் வசிக்கும் மீனவர்களிடம், மீண்டும் பாஸ் நடைமுறையைக் கொண்டு வரப்போகிறார்கள் என்று படையினர் தெரிவித்துள்ளனர். மாதகல் பகுதி மீனவர்களை நேற்றுப் படையினர் சந்தித்துக் கலந்துரையாடினர். அப்போது, மீனவர்க

21ஆம் பக்கம் பார்க்க

## மீனவர்கள் நேற்றும் விடுதலை

யாழ்ப்பாணம், ஏப்.2
இலங்கை இந்திய மீனவர்கள் நேற்றும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.
கடந்த இரு தினங்களாக இருநாடுகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருந் மீனவர்கள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

21ஆம் பக்கம் பார்க்க

**மூளை விருத்தி குன்றிய குழந்தைகள் குறித்து விழிப்பாக இருங்கள்**

இன்று மூளை விருத்தி குன்றிய குழந்தைகள் நோய்க்கான ஐ.நா. விழிப்புணர்வு தினமாகும்

பக்கம் 13

## ஐ.நா. தீர்மானத்தை செயற்படுத்த ஐ.தே.க. ஆதரவு வழங்கத் தயார்

### தற்கொலைக் குண்டுதாரி போல் செயற்படவேண்டாம் என்றும் அரசுக்கு அறிவுரை கூறுகின்றது

கொழும்பு, ஏப்.2
ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை ஏற்று தம்மால் இயன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும். அதற்கு அரசு பச்சைக்கொடி காட்டும் பட்சத்தில் அதற்கு நாம் ஆதரவு வழங்குவோம். அதைவிடுத்து தற்கொலைக் குண்டுதாரி போன்று சர்வதேசத்துடன் மோதக் கூடாது.- என்று தெரிவித்துள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

ஜெனிவா தீர்மானத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன என்று அரச தரப்பால் முன்வைக்கப்படும் வாதங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ஐ.தே.கவின் தலைமைத்துவ சபை உறுப்பினரும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

21ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு இலங்கை இடம்கொடாது

### வெளிவிவகார அமைச்சு திட்டவட்டம்


நியோமல் பெரேரா

கொழும்பு, ஏப்.2
உள்நாட்டுப் பொறிமுறையில் உருவான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் மாத்திரமே சர்வதேசத்தினதும், ஐ.நாவின் கீழியங்கும் அமைப்புகளினதும் ஒத்துழைப்பு பெறப்படும். அனைத்துலக விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இலங்கை ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது என்று நேற்றுத் திட்டவமாகத் தெரிவித்துள்ளது.

21ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் மீது தாக்குதல்

இராமநாதபுரம், ஏப்.2
கச்சதீவுக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினர் போத்தல் ஒடுகள் மற்றும் கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தினர் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இந்தத் தாக்குத

21ஆம் பக்கம் பார்க்க

## தீர்மானம் நடைமுறையாவதற்கு பிரிட்டன் தொடர்ந்து உழைக்கும்

### பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு



லண்டன், ஏப்.2
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்கு பிரிட்டன் தனது சர்வதேச பங்காளர்களுடன் இணைந்து தொடர்ந்தும் உழைக்கும். குறித்த தீர்மானத்துக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, மக்களின் நலனுக்காக சர்வதேச சமூகத்துடன் ஒத்திசைவாக செயற்

21ஆம் பக்கம் பார்க்க

## சொந்த இடங்களை விட்டுக்கொடுக்க வலி. வடக்கு மக்கள் தயாராயில்லை

### 4000 குடும்பங்களில் 200 மட்டுமே மாற்று இடம் செல்வதற்குச் சம்மதம்

யாழ்ப்பாணம், ஏப்.2
பலாலி மற்றும் காங்கேசன்துறைமுகத்தை அண்டி இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் வேறு இடங்களில் சென்று குடியேறுவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் 4,000 குடும்பங்கள் தற்போது வசித்து வருகின்றபோதும் அவற்றில் 200 குடும்பங்கள் மட்டுமே தமது சொந்த இடத்தைவிட்டு வளலாயில் குடியேறுவதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களில் மிகப் பெரும்பாலானவர்களை மீளவும் அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதாக இராணுவம் அண்

21ஆம் பக்கம் பார்க்க

**16 தமிழ் அமைப்புகளை தடை செய்கிறது இலங்கை**

(விரிவான தகவல்கள் 02 ஆம் பக்கத்தில்)

## 'டெம்பஸ்ட் எக்ஸ்பிரஸ் - 24' கலதாரியில் நேற்று ஆரம்பம்

### அமெரிக்க - இலங்கை அதிகாரிகள் பங்கேற்பு

கொழும்பு, ஏப்.02
அமெரிக்க இராணுவ அதிகாரிகள் மற்றும் இலங்கை பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்தவர்கள் பங்கெடுக்கும் 'டெம்பஸ்ட் எக்ஸ்பிரஸ்-24' எனப்படும் பாதுகாப்பு சார் சர்வதேச பயிற்சிக் கருத்தரங்கு நேற்று கொழும்பு

21ஆம் பக்கம் பார்க்க

## புதுவருடத்தை முன்னிட்டு வடக்கு-தெற்கு உறவு பாலம்

### கலாசார நிகழ்வுகளுக்கு மாவட்ட செயலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.2
தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு வடக்கு, தெற்குக் கலைஞர்களை இணைத் துப் பாரம்பரிய கலாசார மற் றும் விளையாட்டுப் போட்டி கள் எதிர்வரும் ஏப்ரல் 29 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இடம் பெறவுள்ளன.

இது தொடர்பாக யாழ். மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் தலைமையில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மருதனார்மடத்திலுள்ள இராமநாதன் கல்லூரியில் நடத்தப்

21ஆம் பக்கம் பார்க்க

## சுகாதார தொழிலாளர் பணிப் புறக்கணிப்பு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஏப்.2
சுகாதாரத் தொழிலாளர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதை அடுத்து டெங்கு ஒழிப்பு வாரத்துக்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாதுள்ளது என்று உள்ளூராட்சிமன்றத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

டெங்கு ஒழிப்பு வாரம் இன்று முதல் எதிர்வரும் 8 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது. இந்த வாரத்தினுள் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றங்களின்

21ஆம் பக்கம் பார்க்க

## முள்ளியவளை கைது; ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.2
முல்லைத்தீவில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டவர் தொடர்பில் அவரது உறவினர்களால் வவுனியா மனித

21ஆம் பக்கம் பார்க்க




ஜப்பான் கடற்படைக்குச் சொந்தமான இரு போர்க் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் நேற்று நங்கூரமிட்டுள்ளன. இரு நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தும் வகையிலேயே Inazuma d 105, Umigiri d 158 என்ற பெயருடைய போர்க் கப்பல்கள் இலங்கை வந்துள்ளன. அவற்றுக்கு இலங்கை கடற் படையினரால் சம்பிரதாயபூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது. (ற)

# தமிழர் பிரச்சினையில் பா.ஜ.க. நிலைப்பாடு

## 48 மணி நேரத்தில் விளக்குமாறு மாணவர் அமைப்புகள் காலக்கெடு

சென்னை, ஏப்.2

தனி ஈழத்துக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும், இலங்கைக்கு எதிராகத் தனித் தீர்மானத்தை இந்தியா அடுத்த ஆண்டு ஐ.நா அமர்வில் கொண்டு வர வேண்டும். இவை தொடர்பில் பா.ஜ.கவின் பிரதம வேட்பாளர் நரேந்திரமோடி தனது நிலைப்பாட்டை 48 மணிநேரத்துக்குள் தெரிவிக்க வேண்டும். இதற்கு ஆதரவாக பா.ஜ.க தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க மறுத்தால் தமிழகம் முழுவதும் பா.ஜ.கவுக்கு எதிரான போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்று தெரிவித்துள்ளன தமிழக முற்போக்கு மாணவர் முன்னணி மற்றும் தமிழ் இளைஞர்கள் மாணவர் கூட்டணி.

இது தொடர்பில் பாலசந்திரன் மாணவர் இயக்கப் போராட்டக் குழுவின் மாறன் 'உதயனுக்குத்' தெரிவிக்கையில்,

"ஒன்றுபட்ட இலங்கையை ஆதரிக்கிறோம் என்று தமது தேர்தல் அறிக்கையில் தெரிவித்த பா.ஜ.க.வை கண்டிக்கின்றோம். ஈழப் பிரச்சினையில் பா.ஜ.கவின் கொள்கையை மாற்றி தனி ஈழத்துக்கு ஆதரவு என்று அறிவிக்க வேண்டும்.

அடுத்த ஆண்டு ஐ.நா கூட்டத் தொடரின் போது, பா.ஜ.க ஆட்சியில் இருந்தால் இலங்கைக்கு எதிரான இனப்படுகொலை தீர்மானத்தை இந்தியா முன்மொழிய வேண்டும். பா.ஜ.க ஆட்சிக்கு வந்தால் தமிழக மீனவர்கள் தாக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தையும் கச்சதீவை மீட்டுத் தருவதற்கான உத்தரவாதத்தையும் வழங்க வேண்டும்.

இந்திய அரசு வெளியுறவு கொள்கையை வகுக்கும் பொழுது தமிழகத்தையும் மற்ற மாநிலங்களையும் கலந்து ஆலோசனை செய்து முடிவெடுக்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவை தமிழக பா.ஜ.கவினரிடம் தமிழக மாணவர்களின் சார்பாக நேற்றுக் கையளித்துள்ளோம். இது தொடர்பில் பா.ஜ.கவின் பிரதம வேட்பாளர் நரேந்திரமோடி 48 மணி நேரத்துக்குள் முடிவை அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கத் தவறும் பட்சத்தில் தமிழகம் முழுவதும் பாரதிய ஜனதாக் கட்சிக்கு எதிராக மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தில் குதிப்பார்கள்" - என்று தெரிவித்தார். (ற-5)

# 16 அமைப்புகளுக்கு இலங்கையில் தடை

## புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தனவாம்

கொழும்பு, ஏப்.2

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் நோக்கங்களுக்காக வெளிநாடுகளில் இருந்து இயங்குகின்றது என்று நம்பப்படும் 16 அமைப்புகளை தடை செய்வதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலேயே இலங்கை அரசு இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அமெரிக்காவில் 28.09.2001 அன்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் எண் 1373க்கு அமைவாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று தெரிவிக்கிறது. அந்தத் தீர்மானத்தின் படி வெளிநாடுகளில் இருந்து தீவிரவாத அமைப்புகளைத் தடை செய்யமுடியும். அதன் அடிப்படையில் இலங்கை அரசு அமெரிக்கா உட்பட கனடா, பிரிட்டன், நோர்வே, இத்தாலி, சுவிட்ஸர்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து இயங்கும் விடுதலைப்புலிகள் ஆதரவு அமைப்புகளைத் தடைசெய்யவுள்ளது. அவற்றில் நியூயோர்க்கிலிருந்து செயற்படும் நாடு கடந்த தமிழீழ அரசு, அருட்தந்தை இமானுவேலின் அகில உலக தமிழ் முன்னணி, நெடியவனின் விடுதலைப்புலிகள் அமைப்பு, விநாயகம் என்று அழைக்கப்படும் விநாயக மூர்த்தியின் புலிகள் ஆதரவு இயக்கம் ஆகியவையும் அடங்குகின்றன.

இவ்வாறு தடை செய்யப்படும் அமைப்புகளுடன் இலங்கையிலிருந்து இந்த இயக்கங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்பவர்களும் அவற்றின் நிதி உதவிகளை பெறுவோரும் குற்றவாளிகளாக காணப்படுவார்கள். இதுகுறித்த முழு விவரங்கள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸால் இந்த வாரம் வெளியிடப்படும் என்று தெரிகின்றது.

### தடைசெய்யப்படவுள்ள அமைப் புக் கள்

தமிழீழ விடுதலை புலிகள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழர் ஒருங்கிணைப்பு குழு, பிரித்தானிய தமிழர் பேரவை, உலக தமிழர் இயக்கம், கனேடிய தமிழ் காங்கிரஸ், ஆஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ், உலக தமிழ் மன்றம், கனேடிய தமிழர்களுக்கான தேசிய பேரவை, தேசிய தமிழ் பேரவை, தமிழ் இளைஞர் அமைப்பு, உலக தமிழர் ஒருங்கமைப்பு குழு, தமிழீழ நாடு கடந்த அரசு, தமிழீழ மக்கள் கூட்டம், உலக தமிழ் நிவாரண நிதியம், தலைமை காரியாலய குழு. (ற)

# குடும்ப நல உத்தியோகத்தர்கள் தொடர் பணி புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

தாதியர்களுக்கான பிரசவம் தொடர்பான பயிற்சிகளை உடன் நிறுத்தக் கோரி குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் இன்று முதல் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். அகில இலங்கை அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கம் இந்தப் பணிப் புறக் கணிப்புக்கான அழைப்பை விடுத்துள்ளது.

இந்தத் தொடர் பணிப்புறக் கணிப்பில் வட மாகாணத்தில் கடமையாற்றும் சகல குடும்ப சுகாதார சேவை உத்தியோகத் தர்களையும் இணைந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கத் தலைவர் கேட்டுள்ளார். கடந்த காலங்களில் பெண்களுக்கான பிரசவம் தொடர்பான மருத்துவ சேவைகளை குடும்பநல சுகாதார உத்தியோகத்தர்களே மேற்கொண்டுவந்தனர் என்றும் தற்போது இதனை தாதியர்களிடம் கையளிக்க திட்டமிட்டே குறித்த பயிற்சியை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த குடும்ப நல உத்தியோகத்தர்கள் அவ்வாறு வழங்கப்படும் பயிற்சியை உடன் நிறுத்த வேண்டும் எனக் கோரியே போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர். (ஐ-400)

# இந்திய தேர்தலின் பின்னரே மீனவர் பேச்சு

சென்னை, ஏப்.2

இலங்கை - இந்திய மீனவர் கள் இடையேயான பேச்சு இந்திய நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரே இடம்பெறும் என்று கூறப்படுகின்றது.

எதிர்வரும் 7ஆம் திகதி முதல் 19 ஆம் திகதிவரை இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது இந்தநிலையில் அந்தக் காலப்பகுதியில் மீனவர் பேச்சு நடைபெறுவது சாத்தியமில்லை என்று கூறப்படுகின்றது. மீனவர்கள் இடையிலான பேச்சு பல்வேறு காரணங்களால் தொடர்ச்சியாகத் தடைப்பட்டு வருகின்றது. (ற)

# குறைகளை நீக்குமாறு கோரி அதிபர் ஆசிரியர் போராட்டம்



அச்சுவேலி, ஏப். 2

கொழும்பு கல்வி அமைச்சுக்கு முன்பாக அதிபர்கள் ஆசிரியர்கள் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிபர் ஆசிரியர்களின் பதவி உயர்வு, சம்பள சீராக்கம், சம்பள நிலுவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுமாறு கோரி, இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட முற்போக்கு அதிபர், ஆசிரியர் தொழிற் சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்துக்கான ஏற்பாடுகளை செய்துள்ளன.

இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த தரம் 3 தரம் 2 -II அதிபர்களுக்கான பதவி உயர்வுகளையும், ஆசிரியர் சேவையை சேர்ந்தோரது பதவி உயர்வுகளையும், உரிய காலப் பகுதியில் வழங்காமை, ஆசிரியர் சேவையில் இருந்து அதிபர் சேவைக்கு பதவி உயர்வு பெற்றோருக்கான சம்பள உயர்ச்சி சீராக்கம், அதற்கான நிலுவை வழங்காமை ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கான சம்பள நிலுவைகள் மற்றும் கொடுப்பனவுகளையும் உரிய காலப் பகுதியில் வழங்காமை போன்றவற்றைக் கண்டித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-11)

# பஸ்ஸில் மாயமான பணம் பொலிஸ் சோதனையிலும் துலங்கவில்லை

அச்சுவேலி, ஏப்.2

யாழ்.நகரில் இருந்து பருத்தித்துறையை நோக்கி பயணித்த 751 வழிப்பாதை மினி பஸ்ஸில் பயணம் செய்த யுவதி, 50 ஆயிரம் ரூபா பணத்தை காணவில்லை எனத் தெரிவித்ததை அடுத்து பஸ் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பயணிகள் அனைவரும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆனால் பணம் தொடர்பான துப்பு துலங்கவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

யாழ்.நகரில் இருந்து பருத்தித்துறையை நோக்கி நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.45 மணிக்கு புறப்பட்ட பஸ்ஸில் பயணம் செய்த யுவதி தான் கொண்டுவந்த 50 ஆயிரம் ரூபாவை காணவில்லை எனப் புகார் செய்தார்.

கோப்பாயில் தகவல் பஸ் சாரதிக்கு தெரியவந்தது. கோப்பாய் சந்திப் பகுதியில் நீண்ட நேரம் பஸ் நிறுத்தப்பட்டு பயணிகளிடம் 50 ஆயிரம் ரூபா பணத்தை தேடி விசாரணை நடத்தியதோடு, கோப்பாய் சந்திக்கு பின்னர் யாரையும் இறக்காமல் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டது.

பொலிஸ் நிலையத்தில் பயணிகள் யாவரும் தனித் தனியாக விசாரிக்கப்பட்டு பஸ்ஸுக்குள்ளும் தேடுதல் நடத்திய போதிலும் காணாமற் போன 50 ஆயிரம் ரூபா பணம் வெளிப்படவில்லை. இரவு 7.20 மணியளவில் பொலிஸார் பஸ்ஸை வெளியே செல்ல அனுமதித்தனர். (ஐ-11)

# தமிழ் அமைப்புகளை தடைசெய்தால் இலங்கையே நெருக்கடியில் சிக்கும்

## எச்சரிக்கின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

கொழும்பு, ஏப்.2

ஈழத்தமிழர்களின் நியாயமான தீர்வுக்காக சர்வதேச அரங்கில் அயராது குரல்கொடுத்து - ஜனநாயக வழியில் போராடி வரும் - தமிழர் அமைப்புகளை இலங்கை அரசு தடைசெய்தால் மேலும் நெருக்கடிகளை இந்த அரசு ஜெனீவாவில் சந்திக்கவேண்டி வரும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

ஜெனீவாத் தீர்மானத்துக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் சர்வதேச அரங்கில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டிய 15 புலம் பெயர் தமிழர் அமைப்புகளைத் தடை செய்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

மஹிந்த அரசின் இந்த நடவடிக்கை ஜனநாயகத்துக்கு விழுகின்ற இன்னொரு அடியாகும். இந்த அரசு தடைசெய்யத் தீர்மானித்துள்ள 15 புலம் பெயர் தமிழர் அமைப்புகளும் உலகளாவிய ரீதியில் பிரபல்யம் பெற்ற அமைப்புகளாகும். இவற்றில் முக்கிய சில அமைப்புகள் உலக நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து ஈழத்தமிழர்களின் இருப்பைக் கருத்தில்கொண்டு மாநாடுகளைக்கூட நடத்தி வருகின்றன.

இவற்றை இலங்கையில் புலிச் சாயம் பூசி மஹிந்த அரசு தடை செய்யலாம். ஆனால், இந்த அமைப்புகள் செயற்படும் நாடுகளில் அவற்றைத் தடை செய்ய முடியாது. 15 புலம் பெயர் தமிழர் அமைப்புகளைத் தடை செய்தால் மேலும் 15 அமைப்புகள் புதிதாக உருவெடுக்கும் என்பதை மஹிந்த அரசு உணர வேண்டும். எனவே, இந்த அரசு இந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு முதலில் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் வழியைத் தேட வேண்டும்" - என்று தெரிவித்தார். (ற-சி)

## வவுனியா, முல்லைத்தீவு மக்களுக்கு பனை உற்பத்தி உபகரணங்கள்

வலி. வடக்கு, ஏப் 2

வாழ்வெழுச்சி (திவிநெகும) திட்டத்தின் கீழ் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மக்களுக்கு பனை உற்பத்திப் பொருள்களை தயாரிப்பதற்கான உபகரணங்கள் இன்று புதன்கிழமை வழங்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட மாந்தை கிழக்கு பாண்டியன்குளத்தில் 28 பேருக்கும், மல்லாவி மத்தியில் 15பேருக்கும், புதுக்குடியிருப்பில் 10 பேருக்கும் மற்றும் ஒட்டுசுட்டான் பகுதியில் 7 பேருக்குமாக மொத்தம் அறுபது பேருக்கு இன்று காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் வைத்து இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இன்று பிற்பகல் 2 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தில் வைத்து மதியாமடுவைச் சேர்ந்த 8 பேர், மகா இலுப்பலாவைச் சேர்ந்த 7 பேர், புளியங்குளத்தைச் சேர்ந்த 6 பேர், வவுனியா நகரப் பகுதியைச் சேர்ந்த 4 பேருக்குமாக 25 பேருக்கு இந்த உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அமைச்சும், பனை அபிவிருத்தி சபையும் இணைந்து தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான இந்த உபகரணங்களை வழங்கவுள்ளன. குறித்த பயனாளிகள் அனைவரும் பனை உற்பத்திப் பொருள்களை தயாரிப்பதற்கான பயிற்சிகளை பெற்றவர்கள் என்றும். இதன் அடிப்படையில் அவர்கள் சுயமாக தொழில் முயற்சியில் ஈடுபடும் வகையில் இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்படு வதாகவும் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (வ-86)

# ஆசிரியர் சேவையில் உள்ளீர்த்து நியமனம் வழங்கிய பின்னர் இடமாற்றம் செய்க

***கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை நிறைவு செய்து மே மாதம் வெளியேறுவோர் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு கோரிக்கை***

அச்சுவேலி,ஏப்.2

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இரண்டு வருட ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்துகொண்டு மே மாதம் 15 ஆம் திகதி வெளியேறும் ஆசிரியர்கள் தங்களை இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பின்னர் பொருத்தமான இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக இடமாற்றம் செய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கையை வலியுறுத்தி வடக்கு மாகாண கல்வி அமைச்சருக்கும், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கும் மனு அனுப்பி வைத்துள்ளனர்.

இரண்டாம் தவணை தொடக்கத்தில் இருந்து 750 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வன்னிப் பெரு நிலப் பரப்பு பாடசாலைகளில் இருந்து விடுவிக்கப்படவுள்ளனர். அவர்களின் இடங்களுக்கு பதிலீடாக பயிற்சியை நிறைவு செய்து கொண்டு வெளியேறும் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளன. 480 ஆசிரியர்கள் வரையில் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறவுள்ளனர். வன்னிப் பெரு நிலப் பரப்புக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதால் தாங்கள் எதிர்கொள்ள விருக்கும் இடர்ப்பாடுகளைக் குறிப்பிட்டு- " விநயமான மனிதாபிமான வேண்டுகோள்" என்ற தலைப்பில் அனுப்பி வைத்துள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் ஆசிரியர் இடமாற்ற முன்னெடுப்புக்களால் பல பிரச்சினைகளையும் மன அழுத்தங்களையும் எதிர்நோக்கியுள்ளோம். இறுதிப் பரீட்சையை எதிர்நோக்கி இருக்கும் வேளையில் வெளிமாவட்டத்துக்குச் சென்று கடமையை ஆற்றுவது பரீட்சையில் கவனமெடுக்க முடியாத சூழலை உருவாக்கும். பரீட்சையில் சித்தியடைய முடியாத நிலையை ஏற்படுத்தும்.

தொண்டர் ஆசிரியர்களாக 10 வருடங்களுக்கு மேல் தொண்டு அடிப்படையில் கடமை புரிந்தோம். ஆசிரிய உதவியாளர்களாக நியமிக்கப்பட்ட எங்களுக்கு வழங்கப்படும் உதவு தொகை எவ்வித சம்பள வகுதிக்குள்ளும் அடக்கப்படவில்லை. இன்றைய வாழ்க்கைச் செலவு நிலையில் சிறு பகுதியைக் கூட ஈடு செய்ய முடியாது. இந்த நிலையில் இடமாற்றம் பெற்று வெளி மாவட்டத்தில் கடமையாற்றுவது சாத்தியப்பாடானதாக இல்லை.

எமது நிலையை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு உரிய சம்பளம் வழங்கப்படும் போது பொருத்தமான இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக மேற்கொள்ளும் இடமாற் றத்தை ஏற்றுக் கொள்கின்றோம்" - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

## மணல் அகழ்ந்து ஏற்றச் சென்ற வாகனங்களை தடுத்த மக்கள்

*அம்பன் கிராம மக்கள் அதிரடி*

வடமராட்சி, ஏப். 2

வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் கிராமத்தில் மணல் அகழ்ந்து ஏற்றச் சென்ற கனரக வாகனங்கள் மற்றும் டிராக்டர்களை குறித்த இடத்துக்குச் செல்ல விடாது காணி உரிமையாளர்கள் வேலி அடைத்து தடை போட் டனர்.

இதனால் சுமார் ஒரு மாத கால இடைவெளிக்குப் பின்னர் ஆரம்பமான மணல் ஏற்றும் நடவடிக்கை தடைப்பட்டுள்ளது.

அம்பன் கிராமத்திலிருந்து மணல் ஏற்றுவதற்கான அனுமதி சுமார் ஒன்றரை மாதத்துக்கு முன்னர் முடிவடைந்திருந்தது. மீண்டும் மணல் அகழ்ந்து ஏற்றும் நடவடிக்கை ஆரம்பமான போது, பிரதான வீதியில் இருந்து, கரையோரத்துடன் கூடிய மணல் அகழும் இடத்துக்கு தனியார் காணிகளுக்கு ஊடாக வழமையாகச் சென்று வந்த பாதையூடாக வாகனங்கள் செல்ல முற்பட்டன.

ஆனால் குறித்த பாதை அமைந்திருந்த காணிகளை அவற்றின் உரிமையாளர்கள் சுற்றி வேலி போட்டு தென்னை மரங்களை நடுகை செய்து காணிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

**குறித்த பாதை அமைந்திருந்த காணிகளை அவற்றின் உரிமையாளர்கள் சுற்றி வேலி போட்டு தென்னை மரங்களை நடுகை செய்து காணிகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.**

அதனையடுத்து மணலை அகழ்ந்து, ஏற்றச் சென்ற வாகனங்கள் வீதி ஓரம் தரித்து நின்றன.

அதேநேரம் மணலை அகழ்ந்து, ஏற்றும் நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்களும் தமது பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-173)

# பாஷையூர் கடற்கரை வீதியில் உலரவிடப்படும் வலைகள்

***வீதியால் பயணிப்போர் அசௌகரிய நிலையில்***



*வீதியின் குறுக்கே உலரவிடப்பட்ட மீன்பிடி வலை*

குருநகர், ஏப்.2

பாஷையூர் கடற்றொழிலாளர்கள் தமது வலைகளை உலரப் போடுவதற்காக பாஷையூர் கடற்கரைக்கு அருகாமையில் யாழ்.மாநகரசபையால் இடம் ஒதுக்கி வழங்கப்பட்டுள்ள போதிலும் ஒருசில கடற்றொழிலாளர்கள் தமது வலைகளை பாஷையூர் கடற்கரை வீதியில் தொடர்ந்தும் உலரவிடு கின்றனர்.

இதனால் குறித்த வீதியூ டாகப் பயணிப்போர் பெரும் சுகாதாரப் பிரச்சினை களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

உலரப்போட்டு காயவைக்கும் வலைகளில் பாஷையூர் கடற்றொழிலாளர்களுக்குரிய நீல நிறச் சாயத்தைப் பூசி காய விடுவதால் குறித்த வீதி நீல நிறம் நிரம்பிக்காணப்படுகிறது.

இதனால் காப்பெற் வீதியின் அழகும் அழிந்து வருவதால் மீனவர்களுக் குரிய இடத்தில் வலைகளை காயப்போட பாஷையூர் பொது அமைப்புக்கள் கடற் றொ ழிலாளருக்கு ஆலோசனை வழங்க வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-51)

## மாநகர சபை சுகாதார பரிசோதகர்கள் வெளிக்கள பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.2

யாழ்.மாநகர சபை பொது சுகாதார பரிசோதகர்கள் தமக்கான வெளிக்கள பணிகளை நேற்றுப் புறக்கணித்துள்ளனர்.

பிரதேச சபைகளுக்கான பொது சுகாதார பரிசோதகர்களை மீண்டும் அந்த இடங்களுக்கு நியமிக்கக் கோரியே மாநகர சபை பொது சுகாதார பரிசோதகர்கள் வெளிக்கள பணிகளை புறக்கணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் அவர்கள் அலுவலகத்துக்குள் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். (வ-7)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு அபராதம்

தென்மராட்சி, ஏப். 2

தென்மராட்சி தெற்குப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. வாகனத்தினுள் மணலை ஏற்றி அதற்கு மேல் சிமெந்துப்பைகள், கொங்றீற் கற்கள் என்பவற்றை அடுக்கிக் கொண்டு வந்தபோது வீதியில் பரிசோதனையில் ஈடுபட்ட பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

மறவன்புலோவைச் சேர்ந்த குறிப்பிட்ட வாகனச் சாரதிக்கு எதிராக சாவகச்சேரி பொலிஸார் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 45 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பணம் செலுத்த கால அவகாசம் கோரியதை அடுத்து எதிர்வரும் 8 ஆம் திகதி வரை கால நீடிப்பு வழங்கிய நீதிவான் சாரதியை 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார். (வ-9)

# காரைநகர் டிப்போ சாரதிகள் பயணிகளுக்கு உதவுவது எப்போது?

யாழ்ப்பாணம், ஏப் .2

காரைநகர் டிப்போவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான சேவையில் ஈடுபடும் 782, 785, 786 ஆம் இலக்க பஸ்கள் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு ஆஸ்பத்திரி வீதி- கஸ்தூரியார் வீதி- ஸ்ரான்லி வீதி- கே.கே.எஸ். வீதி- (சிவன் கோயில் முன் வீதி) வைத்தீஸ்வரா பாடசாலை வீதி ஆகியவற்றினூடாகச் சென்று மானிப்பாய் வீதியால் செல்வதுதான் வழமையாகும்.

ஆனால் சில பஸ் சாரதிகள் பஸ்ஸை மானிப்பாய் வீதியூடாகச் செலுத்துகின்றனர்.

இதனால் பயணிகள் பஸ்ஸைத் தவறவிடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகப் பயணிகள், டிப்போ முகாமையாளர், சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோரிடம் முறையிட்டும் எதுவித பயனும் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரச, தனியார் பணியாளர்கள், தனியார் வகுப்புகளுக்குச் சென்று வீடு திரும்பும் மாணவர்கள் எனப் பலரும் பஸ் மானிப்பாய் வீதியூடாகச் செல்வதால் அதனை தவறவிடும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. அதேவேளை தனியார் பஸ்கள் வழக்கமான பாதையில் சேவையில் ஈடுபடுவதைக் காண முடிகின்றது.

எனவே காரைநகர் செல்லும் போது சிவன் கோயில் முன் வீதியால் பஸ் சேவை இடம் பெற்றால் பயணிகள் அதிக பயன்களை அடைவார்க ளெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வேண்டுகோளை காரைநகர் டிப்போ முகாமையாளர் கவனத்தில் எடுத்து பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்க உதவுமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க)

## தவறணை முகாமையாளரை தாக்கி பணம் அபகரிப்பு

தென்மராட்சி, ஏப்.2

கள்ளுத் தவறணையை மூடி விட்டு வீடு திரும்பிய முகா மையாளரை வழி மறித்த நபர்கள் அவர் மீது தாக்குதல்நடத்திவிட்டு அவரிடமிருந்த பணத்தை அபகரித்துச் சென்றனர். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றது.

தாக்குதலில் காயமடைந்த மிருசுவில் உசனைச் சேர்ந்த மு.பாலேஸ்வரன் (வயது-56) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் மருதங்கேணி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் மணற்காடு தவறணை கிளை முகாமையாளராகக் கடமையாற்றி



வந்தார்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தீர்மானத்தைப் புறக்கணித்தமை இந்தியாவின் இராஜதந்திரமே

## இவ்வாறு கூறுகிறார் ஞானதேசிகன்

சென்னை, ஏப்.2
இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை புறக்கணித்தமை இந்தியாவின் ராஜதந்திரம் என்று தமிழ் நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் பி.எஸ். ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.
தமிழகத்தின் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சி செயல் வீரர்கள் கூட்டம் மற்றும் கட்சியின் வேட்பாளர் விஜய் இளஞ்செழியன் அறிமுக கூட்டம் ஆம்பூரில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'காங்கிரஸ் கட்சி சட்டமன்றத் தேர்தலில் தனித்துக் களம் காண வேண்டும் என்பதே அனைத்துத் தொண்டர்களின் விருப்பம் ஆகும். அதைவிட அதிகமான விருப்பம் எனக்கு இருக்கிறது.
காங்கிரஸ் மன்னிப்பு கேட்டால் ஆதரவளிக்க தயார் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருப்பது, கடுமையான வார்த்தைகளை அவர் உபயோகித்து இருப்பது வருத்தமளிக்கிறது.


ஞான தேசிகன்

கடந்த 10 ஆண்டு காலம் கூட்டணி ஆட்சியில் தி.மு.கவினர் 7அமைச்சுப் பதவிகளைக் கேட்டுப் பெற்றனர். ஆனால் தற்போது அத்தகையை வார்த்தைகளை பிரயோகித்திருப்பது வருத்தமளிக்கிறது. மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற நிலைப்பாடே காங்கிரஸ் கட்சிக்கு ஏற்படாது. காங்கிரஸ் கட்சியும் மன்னிப்புக் கேட்கும் நிலையில் இல்லை.
தேர்தலுக்கு பின்னர் காங்கிரஸ் ஆட்சி அமைக்க வாய்ப்பு ஏற்பட்டால் தி.மு.கவை கூட்டணியில் சேர்ப்பது குறித்து அன்றைக்கு இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்து அகில இந்திய காங்கிரஸ் குழு முடிவு செய்யும்.
இலங்கைக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தை இந்தியா புறக்கணித்தமை குறித்து மத்திய அமைச்சர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளது குறித்து அவர்களிடம்தான் கேட்க வேண்டும். ஆனால் இதற்கு முன்பு 2 முறை இந்தியா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்துள்ளது.
இது குறித்து நாடாளுமன்றத்தில் நான் பேசியுள்ளேன். காங்கிரஸ் நாடாளு மன்ற உறுப்பினர்களை அழைத்துச் சென்று பிரதமரை சந்தித்து ஆதரவளிக்கக் கோரினோம். ஆனால் தற்போது தீர்மானத்தை புறக்கணித்துள்ளமை இந்தியாவின் ராஜதந்திரமுறை. அதனால் தீர்மானத்துக்கு ஆதரவளிக்கவில்லை என்று மட்டும் எண்ணி விடக்கூடாது. ஏன் ஆதரவாக வாக்களிக்க வில்லை என்று வெளிவி வகாரத்துறை செயலாளர் விளக்கமளித்துள்ளார்.
இலங்கைத் தமிழர்களின் அரசியல் அமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். அங்கு நடக்கும் உதவிகள் தொடர்ந்து அவர்களுக்கு கிடைக்க உறுதி செய்ய வேண்டும் என்று வெளிவிவகாரத்துறைச் செயலர் கூறியிருக்கிறார். இதுதான் இந்தியாவின் அதிகாரபூர்வ நிலைப்பாடு.
தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்காததால், இலங்கைச் சிறையில் இருந்து மீனவர்கள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளனர்' - என்றார். (வ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல், 02
பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ். பிரதேச செயலக சங்கத்தின் வருடாந்த பொது கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
சென் பற்றிக்ஸ் வீதியில் உள்ள அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் காலை 9.30மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச பிரதேச செயலர் தெ. சுகுணரதியும் கௌரவ விருந்தினராக யாழ்ப்பாண பிரதேச செயலக நிதி உதவியாளர் பத்மினி லூயிஸ்ம் கலந்து கொள்வர். (ஐ-10)

## நுவரெலியாவில் வசந்தகால நிகழ்வுகள்

நுவரெலியா, ஏப்ரல், 02
நுவரெலியாவின் வசந்தகால நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின.
இந்த நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பி.ஜீ.குமாரசிரி, மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜராம் என பலர் கலந்து கொண்டனர்.
வருடந்தோறும் நடைபெறும் மலர் கண்காட்சி, விளையாட்டுப் போட்டிகள், இசை நிகழ்ச்சிகள் என பல நிகழ்வுகள் இதன்போது நடைபெறுகின்றமை குறிப்பிடதக்கது. (ஐ-10)

## 'ஓம் நமசிவாய' பிரார்த்தனை

தென்மராட்சி, ஏப். 02
சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் ஆலயத் தில் 'ஓம் நமசிவாய' அகண்ட நாம ஜெப பிரார்த்தனை இன்று புதன்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் காலை 6 மணி முதல் மதியம் 12 மணி வரை இடம்பெறவுள்ளது.
உலக உயிர்களின் நன்மைக்காக சிவசங்கமார்கள் ஒன்று சேர்ந்து இந்த பிரார்த்தனையை முன்னெடுக்கவுள்ளார்கள்.
இதில் சிவனடியார்களைக் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர் கள் கேட்டுள்ளனர். (ஐ-400-9)

## ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம்.ஏப்.2
யாழ்.செப்புத்தகட்டு புடைப்புச் சித்திரக் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பூநாறி மடத்தடி செல்வமகால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கழகத்தலைவர் எஸ்.இரத்தினகோபால் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண தொழில்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் கே.சிவகரன் கலந்து கொள்வார். (ஐ-14)

## எம்.ஜி. ஆரின் சிலை திறப்பு விழா இன்று

கல்வியங்காடு, ஏப். 02
நல்லூர் கல்வியங்காட்டில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு தமிழக முன்னாள் முதலமைச்சரும் புரட்சி நடிகருமான எம்.ஜி. இராமச்சந்திரனின் சிலை திறந்து வைக்கப்படவுள்ளது.
கோப்பாய் தெற்கைச் சேர்ந்த இராசையா சுந்தரலிங்கத்தின் நிதியில் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.
யாழ். மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா எம்.ஜி. ஆரின் சிலையைத் திறந்து வைப்பார். (ஓ)

# சுன்னாகத்தில் வாள்வெட்டு மூன்று பேர் காயம்

வலி.வடக்கு, ஏப்.2
சுன்னாகம் மதவடி ஒழுங்கையில் உள்ள பூதவராயர் ஆலயத்துக்கு அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் மூன்று பேர் காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.
ஆலயத்தில் இடம்பெற்ற அன்னதான நிகழ்வு முடிந்து குறிப்பிட்ட மூவரும் வந்துகொண்டிருந்தபோதே, மறைந்திருந்திருந்தவர்கள் அவர்கள் மீது வாள்கள் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த சம்பவத்தில் சிவனடியார் சிவலிங்கநாதன் (வயது-53), சுவாமிநாதன் அரசதாசன் (வயது-44), இ.இராமேஸ்வரன் (வயது-64) ஆகியோரே காயங்களுடன் மருத்துமனையில் சேர்க்கப்பட்டவர்களாவர்.
தனிப்பட்ட விரோதமே இந்தச் சம்பவத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு வந்துவிசாரணைகளை மேற்கொண்ட சுன்னாகம் பொலிஸார், சந்தேகத்தின்பேரில் சுன்னாகம் தெற்கு சிவில் பாதுகாப்புக் குழு உறுப்பினர் ஒருவரை கைது செய்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற-86)

# வேலூர் சிறையில் 19 ஆவது நாளாக இலங்கை அகதி உணவு தவிர்ப்பில்

வேலூர், ஏப்.2
தம்மைச்சாதாரண முகாமுக்கு மாற்றக் கோரி வேலூர் சிறையில் 19 ஆவது நாளாக இலங்கை அகதி தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.
செங்கல்பட்டு சிறப்பு முகாமில் அடைக்கப்பட்டிருந்த இலங்கை அகதி செந்தூரன், தன்னைத் தனது குடும்பத்தினருடன் வசிக்கும் வகையில் சாதாரண முகாமுக்கு மாற்ற வேண்டும் என்று உணவு தவிர்ப்பை மேற்கொண்டார்.
அதையடுத்து அவர் கைது செய்யப்பட்டு கடந்த 10 ஆம் திகதி வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அவர் அங்கு 13 ஆம் திகதி தொடக்கம் தொடர்ந்து 19 ஆவது நாளாக உணவு தவிர்ப்பில் ஈடுபட்டு வருகிறார். இது குறித்து சிறை அதிகாரிகள் கூறும்போது.


உணவு தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள அகதி

"செந்தூரனுக்கு தீவிர மருத்துவ பரிசோதனை நடைபெற்று வருகிறது. உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பது குறித்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது" என்றனர். (வ)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

## மரண அறிவித்தல்

### திருமதி கனகாம்பிகை துரைராஜசிங்கம்



மட்டுவில் வடக்கு, பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், இருபாலை பழைய தபாற்கந்தோர் வீதியில் வசித்தவருமான திருமதி கனகாம்பிகை துரைராஜசிங்கம் நேற்று (01.04.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் துரைராஜசிங்கத்தின் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அன்பு மனைவியும், மட்டுவில் வடக்கைச்சேர்ந்த காலஞ்சென்ற அதிபர் மு.சுப்பிரமணியம், அன்னப்பிள்ளை தம்பதியரின் மகளும், சுதர்சன், பாஸ்கரன், சுபாஸ், எழிலினி (ஆசிரியை விபுலானந்த வித்தியாலயம் தெமட்டகொட) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சரவணபவானந்தன் (ஓய்வுபெற்ற நில அளவையாளர்), குமாரசாமி (ஓய்வுபெற்ற கல்வித்திணைக்கள அதிகாரி), சிவராசா, சிவகுமாரன் (ஓய்வு பெற்ற உப அதிபர்), செந்திரு, சிவானந்தன் (ஆசிரியர், விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு), கோகிலம், சிவா, சுப்பிரமணியம், சிவசுந்தரம், சோதிநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 2 மணியளவில் செக்கடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
(அ-ரு)
தகவல்: அஸ்வினி (பேர்த்தி, யா/மாநகரசபை),
(46344) பிறேமதாஸன் (பேரன், C.T.B கோண்டாவில் சாலை)

# சுகாதார தொழிலாளர் பணிப் புறக்கணிப்பு

## உடுவில் பிரதேச சபையில்

வலி.வடக்கு, ஏப்.2
வலி.தெற்கு உடுவில் பிரதேச சபையின் சுகாதாரத் தொழிலாளர்கள், அலுவலர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகளின் கடமைகளில் இருந்து அகற்றப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைக்கப்பட்டதைக்கண்டித்தே இந்தப் பணிப் புறக்கணிப்பு நடத்தப் பட்டுள்ளது.
இது குறித்துக் கருத்துத் தெரிவித்த வலி.தெற்கு பிரதேச சபையின் தலைவர் தி.பிர காஸ்,
"சுகாதார பாசோதகர்களின் பணி பிரதேச சபைகளின் எல்லைக்களுக்குள் பாதிக்கப்பட்டுள்ள நிலைமை கடந்த மூன்று வாரங்களுக்கு மேலாக காணப்படுகின்றது.
இத்தகைய நிலைமை தொடர்வதை வட மாகாண சுகாதார அமைச்சரும் ஏனையவர்களும் அனுமதிக்கக் கூடாது. உடனடியாக குறிப்பிட்ட விடயத்தில் தலையிட்டு ஒரு சுமுகமான முடிவை எடுத்து பிரதேச சபைகளின் பணிகள் சீரான முறையில் நடைபெற வழி ஏற்படுத்த வேண்டும்" - என்று தெரிவித்தார்.
அதேவேளை, சுகாதார ஊழியர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக மருதனார்மடம் சந்தை, சுன்னாகம் சந்தைப் பகுதிகள் மற்றும் சுன்னாகம் மீன்சந்தை என்பன சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்டன. (ற-86)

# நடுநிலை வகித்தமைக்கு இந்தியா கூறும் காரணத்தை ஏற்க முடியாது

## அமைச்சர் சிதம்பரம் கருத்து

டில்லி, ஏப்.2
அமெரிக்காவின் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இந்தியா நடுநிலைமை வகித்தமைக்காக இந்திய தரப்பில் முன்வைக்கப்படுகின்ற காரணங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அமைச்சர் பி.சிதம்பரம் தெரி வித்துள்ளார்.
செய்தியாளர் சந்திப்பு ஒன்றின்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.
குறித்த பிரேரணைக்கு இந்தியா நடுநிலை வகிக்க வேண்டும் என்று இந்திய அமைச்சரவையிலோ மத்திய செயற்குழுக் கூட்டத்திலோ தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. இதனை இந்திய வெளிவிவகார அமைச்சே மேற் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தியா இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடம் இல்லை என்று அவர் கூறியுள்ளார். (வ)


பி.சிதம்பரம்

## இயற்றாலை பிரிவு மக்களுக்கு வாழ்வாதாரத் திட்டங்கள்

வரணி. ஏப்.2
வரணி இயற்றாலை கிராம அலுவலர் பிரிவில் வாழ்வாதார கொடுப்பனவுத் திட்டம் ஒன்றை 'வேள்விஷன்' நிறுவனம் நடைமுறைப்படுத்த உள்ளதாக வரணி இயற்றாலை விவசாய சம்மேளனம் தெரிவித்துள்ளது.
தோட்டச் செய்கை, பால்மாடு வளர்த்தல்; ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, கடை வியாபாரம், தையல் இயந்திரப் பயிற்சி, தும்புக் கைத்தொழில், விளக்குமாறு தயாரித்தல் போன்ற முயற்சிகளுக்கு வாழ்வாதாரத் திட்டங்களை குறித்த நிறுவனம் நடைமுறைப்படுத்த உள்ளதாகக் கூறப்பட்டது.
இந்தத் திட்டங்களில் இணைந்து கொள்ள விரும்பும் குடும்பஸ்தர்கள் குறித்த பிரதேச கிராம அலுவலர் ஊடாகத் தமக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறு பிரதேச விவசாய சம்மேளனத் தலைவர் கேட்டுள்ளார்.
விண்ணப்பங்களில் குடும்பத்தின் பூரண விவரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (வ-122)



யாழ்.நகரில் கோணாந்தோட்டம் பிரதான வீதியில் உள்ள வடிகால்வாய் சேதமடைந்துள்ளதால் வீதியூடாக பயணம் செய்வதில் மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். வடிகால்வாயில் சேதம் ஏற்பட்டுள்ள்தாலும் மற்றும் வடிகால்வாய் துப்புரவு செய்யப்படாததாலும் கழிவு நீர் தேங்கி துர்நாற்றம் வீசுவதாக அந்த வீதியால் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-17)

## பன்னிரு பஜனைப் பாடசாலைகள் வலி.மேற்கில் இதுவரை உதயம்




*வலி. மேற்கு பிரதேச சபை தவிசா ளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் உரையாற்றுகிறார். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் பிரமுகர்கள் அமர்ந்திருக்கின்றனர்.*

யாழ்ப்பாணம்,ஏப்.2
வலி.மேற்கில் 100 பஜனைப் பாடசாலைகளை ஆரம்பிக்கும் செயற்றிட்டத்தில் இதுவரை 12 பாடசாலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. குறித்த பிரதேச மாணவர்கள் இந்த செயற்றிட்டத்தினூடாக நன்மை அடைந்து வருகின்றனர்.
வசதி குறைந்த மாணவர்களது கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் ஆலயங்களில் உள்ள அறநெறிப் பாடசாலைகள் ஊடாக மாலை நேர கற்பித்தல் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
கடந்த வாரம் அராலி மத்திய பகுதியில் அமைந்துள்ள நாச்சிமார் ஆலயத்திலும், மூளாய் - தொல்புரம் மேற்கு பகுதியில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்திலும், வலி. மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரனால் 11 ஆவது மற்றும் 12 ஆவது பாடசாலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.
அராலி மத்திய பகுதியில் அமைந்துள்ள நாச்சிமார் ஆலயத்தில் பஜனைப் பாடசாலையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளை வழங்கினார்.
வலி.மேற்கில் 100 பஜனை பாடசாலைகளை ஆரம்பிக்கும் இந்த செயற்றிட்டத்தின் ஊடாக மாலை நேரக் கல்வியை பெற முடியாத சூழலில் இருந்த மாணவர்கள் பெரும்நன்மையடைந்துள்ளனர்.
இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்களான த.நடனேந்திரன், த.சசிதரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-14-21)

## கஞ்சாவுடன் கைதான நாவற்குழி வாசிக்கு ரூ. 50 ஆயிரம் அபராதம்

தென்மராட்சி.ஏப்.2
போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்த நாவற்குழி வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி மதுவரி நிலையத்துக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நாவற்குழி ஐந்து வீட்டுத்திட்டத்திலுள்ள வீடொன்றில் சோதனையிடப்பட்ட போது ஒரு தொகுதி கஞ்சா கைப்பற்றப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய நபரைக் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.
வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரி குற்றத்தை ஒபபுக் கொண்டதை அடுத்து 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் ஆறுமாத சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிடப்பட்டது. (வ-9)

## நெல்லிய்டியில் கலந்துரையாடல்

வடமராட்சி. ஏப். 2
பாடசாலை மட்டத்தில் இருந்து தேசிய மட்டத்துக்கு மாணவர்களைத் தயார் படுத்தலுக்கான செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடலொன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
விளையாட்டு அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் ஆசிய இளைஞர் விளையாட்டுவிழா தொடர்பாக மாகாணசபைத் திணைக்களத்தினால் பாடசாலை மட்டத்திலிருந்து தேசிய மட்டத்துக்கு மாண வர்களை தயார்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டோரைக் கலந்து கொள்ளுமாறு வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.இரவீந்திரன் அறிவித்துள்ளார். (ஓ-173)

## வலி.கிழக்கில் 5 வீதிகளைப் புனரமைக்க ரூ.80 மில்லியன்

அச்சுவேலி. ஏப்.2
வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஐந்து வீதிகள் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் இந்த வருடம் திருத்தி அமைக்கப்படவுள்ளன. இந்த வீதிகள் திருத்த வேலைக்கு 80.4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
திருத்த வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளரினால் கோரப்பட்டுள்ளது.
திருத்தி அமைக்கப்படவுள்ள வீதிகளின் விவரம் வருமாறு:-
- அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதி 21.16 மில்லியன் ரூபா- திருத்தி அமைக்கப்படவுள்ள தூரம் (2.24 கிலோ மீற்றர்)
- கோப்பாய் இலக்கடி வீதி 11.58 மில்லியன் ரூபா- தூரம் (1.22 கிலோ மீற்றர்)
- உரும்பிராய் வாகையடி வீதி 5.95 மில்லியன் ரூபா- தூரம் 0.62 கிலோ மீற்றர்.
- அச்செழு வேவிபுரம் குறுக்கு வீதி 23.29 மில்லியன் ரூபா- (2.46 கிலோ மீற்றர்)
- உரும்பிராய் மயான வீதி 18.42 மில்லியன் ரூபா- (1.95 கிலோ மீற்றர்) நீண்ட காலமாகத் திருத்தி அமைக்கப்படாமல் இருந்து வந்த மேற் குறிப்பிட்ட வீதிகள் இந்த வருடம் திருத்தி அமைக்கப்படவுள்ளன. (ஓ-11)

# 65 வயதுக்கு மேற்பட்ட வயோதிப நோயாளருக்கு முன்னுரிமை

## வரணி மருத்துவமனையில்

வரணி.ஏப்.2
வரணி பிரதேச மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் 65 வயதுக்கு மேற்பட்ட நோயாளருக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் தனியாக அமர்ந்திருக்க இருக்கை வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பிரதேச வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்ட 101 நாள் வேலைத் திட்டம் தொடர்பான சுற்றறிக்கைக்கு அமைவாக குறித்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.
குறித்த மருத்துவமனையில் தற்போது ஏராளமான நோயாளிகள் சிகிச்சைக்கு நாளாந்தம் வருகை தருகின்றனர். இந்த நிலையில் குறித்த வயது வந்தோர் தமக்கு இத்தகைய உதவிகளை ஏற்படுத்தித் தந் துள்ளமை தொடர்பில் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.
குறித்த மருத்துவமனை தற்போது 24 மணி நேரமும் இயங்கி வருவதுடன் மீள் நியமனம் செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரே இங்கு முழு நேர சேவையில் உள்ளார்.
கடமை புரிந்த மருந்தாளரும் இடமாற்றம் பெற்றுச் சென்று ஒரு மாதம் கடந்த நிலையிலும், பதிலீட்டு மருந்தாளர் இதுவரை கடமைக்கு சமுகமளிக்கவில்லை. இதுதொடர்பில் தாம் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தி உள்ளதாக வைத் தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (வ-122)

## மூத்த நயினார் ஆலயக் கிணற்றுக்கு நல்ல தண்ணீருக்காகத் திரளும் மக்கள்

நவாலி. ஏப்.2
ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயக் கிணற்றில் நல்ல குடிதண்ணீரை எடுப்பதற்காகச் செல்லும் மக்கள் கூட்டம் தினமும் அதிகரித்து வருகின்றது.
தற்போது நிலவும் கடும் வறட்சி காரணமாக குறித்த பிரதேசத்தைச் சுற்றியுள்ள பல கிணறுகள் உவர் நீராக மாறிவருகின்றன. இதனால் தேநீர் தயாரிக்க பருக மற்றும் தேவைகளுக்கு தமது கிணற்று நீரைப் பாவிக்க முடியாத நிலையை இப்பகுதி மக்கள் எதிர்கொண்டுள்ளனர்.
இதன் காரணமாக அதிகாலையிலிருந்து இரவு ஒரு மணி வரை பல மைல் தூரத்திலிருந்து சிறுவர் முதல் பெரியோர் வரை ஆண்களும் பெண்களும் பிளாஸ்ரிக் கான்கள், போத்தல்கள், வாளிகள் என்பவற்றுடன் கால் நடையாகவும் மோட்டார்சைக்கிள், சைக்கிள் ஆகியவற்றிலும் வந்து இந்த ஆலயக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்கின்றனர்.
மேலும் அந்தியேட்டி, திருமண நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்வுகள், ஆலயங்களில் இடம்பெறும் விழாக்களில் தண்ணீர்ப் பந்தல் அமைப்பதற்கும் ட்ராக்டர்கள், லான்ட் மாஸ்டர் என்பவற்றிலும் வருகை தந்து பெரிய பரல்களில் குறித்த கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச்செல்கின்றனர்.
குறித்த கிணற்றின் நீர்மட்டம் அருகில் உள்ள பெரிய குளத்துடன் தொடர்புபட்டு இருப்பதால் தேவையானளவு நீரைப் பெற்றுக் கொள்ள வசதியாக உள்ளது.
மக்களின் நன்மை கருதி வசதி படைத்தவர்களோ பொது நிறுவனங்களோ முன்வந்து இந்தக் கிணற்றிலிருந்து நீர்க் குழாய்களைப் பொருத்தி சகல மக்களும் நீண்ட நேரம் காத்திருக்காது தண்ணீரை எடுத்துச்செல்ல உதவினால் அதுநல்லதொரு கைங்கரியமாக அமையும் என்று பலராலும் அபிப்பிரா யம் கூறப்படுகிறது. (வ-100)

## தொலைபேசி விற்பனை நிலையம் உடைத்து திருட்டு

**இரண்டு வார காலங்களுக்கு விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிடப் பட்டுள்ளது.**

வலி.வடக்கு. ஏப். 2
மல்லாகம் சந்தியில் இருந்த விற்பனை நிலையத்தை உடைத்து பல லட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் உபகரணங்கள் திருடப்பட்ட வழக்கில் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்த நிலையில் மேலும் இரண்டு வார காலங்களுக்கு விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிடப்பட்டுள்ளது.
விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். குறிப்பிட்ட நபர்களைப்பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணியால் கோரிக்கை முன்வைக்கப் பட்ட போதிலும் பொலிஸார் அதற்கு எதிர்ப்புத் தெரி வித்ததால் நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (வ-86)

# ராஜீவ் கொலையாளிகளின் தூக்கு ரத்துக்கு எதிரான மத்திய அரசின் மனு நேற்று நிராகரிப்பு

புதுடில்லி, ஏப்.2

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், பேரறிவாளன் உட்பட 3 பேரின் தூக்குத் தண்டனை நிறுத்தப்பட்டதற்கு எதிரான மத்திய அரசின் மறு ஆய்வு மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதில் கால தாமதம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, ராஜீவ் கொலைக் குற்றவாளிகளான முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத் தண்டனையை உயர் நீதிமன்றம் நிறுத்தியது.

23 ஆண்டுகளாகச் சிறையில் இருக்கும் அவர்களை, உரிய சட்ட நடைமுறைகளைப் பின்பற்றி விடுவிப்பதற்குத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தது.

இதன் தொடர்ச்சியாக, கருணை மனு மீது முடிவு எடுக்க ஏற்பட்ட தாமதம் காரணமாக, ராஜீவ் காந்தி கொலை வழக்கு குற்றவாளிகளின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து பிறப்பித்த தீர்ப்பை மறு ஆய்வு செய்யக் கோரி மத்திய அரசு உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது.



பேரறிவாளன்



முருகன்



சாந்தன்

அந்த மனுவில், 'தலைமை நீதிபதி ப.சதாசிவம், நீதிபதிகள் ரஞ்சன் கோகோய், எஸ்.கே.சிங் ஆகியோர் அடங்கிய 3 நீதிபதி அமர்வு இந்த வழக்கின் தன்மையை பரிசீலிக்கவில்லை. மேலும் இந்த வழக்கில் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து அரசின் அதிகார வரம்புக்குள் நுழையத் துணிந்திருக்கிறது.

பெப்ரவரி 18ஆம் திகதி பிறப்பித்த இந்த தீர்ப்பு அதற்கான அதிகாரம் இல்லாத 3 நீதிபதி அமர்வால் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வழக்கு, அரசமைப்புச் சட்டத்தின் பல்வேறு அம்சங்கள் மற்றும் சட்டம் சார்ந்த பல்வேறு விளக்கங்கள் தொடர்புடையது என்பதால் 5 நீதிபதி அமர்வு விசாரித்திருக்க வேண்டும்.

இந்த தீர்ப்பு முற்றிலும் சட்டத்துக்குப் புறம்பானது என்றே மரியாதையுடன் நாங்கள் தெரிவிக்கிறோம். இந்த நீதிமன் றம் வகுத்துள்ளதும் மற்றும் அரசமைப்புச் சட்டம் மற்றும் இதர சட்டங்களில் இடம்பெற்றுள்ளதுமான காலம் காலமாக நடைமுறையில் உள்ள சட்டக் கோட்பாடுகள் மீறப்பட்டுள் ளன.

கருணை மனுவை குடியரசுத் தலைவர் நிராகரித்து உத்தரவு பிறப்பித்த நிலையில் அதில் தலையிட அதிகாரம் இல்லாத போதும் உயர்நீதிமன்றம் தலையிட்டுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 72ஆவது பிரிவு கொடுத்துள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, குடியரசுத் தலைவர் நிராகரித்து பிறப்பித்த உத்தரவில் உயர் நீதிமன்றம் தலையிட்டது அதன் அதிகாரத்துக்கு அப்பாற்பட்டதாகும். .

குடியரசுத் தலைவர் கருணை மனுவை நிராகரித்துவிட்டால், அந்த உத்தரவில் தலையிட உயர் நீதிமன்றத்துக்கு வரம்புக்குட்பட்ட அதிகாரமே இருக்கிறது. கருணை மனுமீது உரிய பரிசீலனை தரப்படவில்லை என உயர் நீதிமன்றம் கருதி இருந்தால் மறு பரிசீலனைக்காகக் குடியரசுத் தலைவருக்குத் திருப்பி அனுப்பி இருக்க வேண்டும். தாமதம் பிரச்சினையாக இருந்திருந்தால், அந்த மனு மீது விரைந்து முடிவு எடுக்கும்படி குடியரசுத் தலைவரின் கவனத்துக்கு கொண்டு சென்றிருக்கலாம். 3 குற்றவாளிகளின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து தீர்ப்பு பிறப்பிக்கும் போது மத்திய அரசு வைத்த வாதங்கள் உரிய வகையில் பரிசீலிக்கப்படவில்லை' என்று அந்த மனுவில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதனை விசாரித்து வந்த உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் தலைமையிலான அமர்வு மத்திய அரசின் மனுவை தள்ளுபடி செய்து நேற்று உத்தரவு பிறப்பித்தது. (த)



இந்தியாவில் நாணயத் தாள்களைக் காகிதத்தில் அச்சடிப்பதைத் தவிர்த்து பிளாஸ்டிக் இழை களில் அச்சடிக்க ரிசர்வ் வங்கி 2010ஆம் ஆண்டு தொடக்கத்தில் முடிவு செய்திருந்தது. இந்த பிளாஸ்டிக் நாணயத் தாள்களை இந்தியா முழுவதும் ஒரே சமயத்தில் வெளியிடாமல், சோதனை முயற்சியாக சில நகரங்களி[illegible] மட்டும் செயற்படுத்த ரிசர்வ் வங்கி திட்டமிட்டுள்ளது.

முதற்கட்டமாக 10 ரூபா நாணயத் தாள்களை அச்சடிக்க உள்ளது. பிளாஸ்டிக் நாணயத் தாள்[illegible] முதன் முதலில் 1968ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் அச்சடிக்கப்பட்டன. ஆஸ்திரேலியாவைத் தொடர்ந்து கனடா, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் பிளாஸ்டிக் நாணயத் தாள்களைப் பயன்படுத்த ஆரம்பித்தன.

இவை தவிர, உலகின் 30 நாடுகள் பிளாஸ்டிக் நாணயத் தாள்களைப் பயன்படுத்தி வருகின்றன. இவற்றைப் பயன்படுத்தும் பெரும்பாலான நாடுகள் குளிர் பிரதேசங்களாகும். இந்நிலையில், ஆசியாவின் தட்பவெப்ப நிலைக்கு பிளாஸ்டிக் நாணயத் தாள்கள் தாக்குப்பிடிக்குமா என்பதையும் சோதித்து அறிய வேண்டியுள்ளது. (த)

## கப்பல்களில் பணம் வந்தது உண்மையா?

### அதிகாரிகள் மீண்டும் சோதனை

சென்னை, ஏப் 2

தூத்துக்குடித் துறைமுகத்துக்கு வந்த கப்பல்களை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் ம.ரவிக்குமார் மற்றும் பொலிஸார் மக்களவைத் தேர்தலில் பயன்படுத்த, வெளிநாடுகளில் இருந்து கப்பல்கள் மூலம் பெருமளவில் பணம் கடத்தப்படுவதாகத் தகவல் வெளியானதைத் தொடர்ந்து, தூத்துக்குடித் துறைமுகத்தில் கப்பல்களில் அதிகாரிகள் கடந்த திங்கட்கிழமை மீண்டும் சோதனை நடத்தினர்.

மக்களவைத் தேர்தலில் பயன்படுத்த, வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டுள்ள கறுப்புப் பணம் மற்றும் தங்கம், போதைப் பொருள்கள், கள்ள நோட்டுகள் கப்பல்கள் மூலம் தூத்துக்குடித் துறைமுகத்துக்குக் கடத்தி வரப்படுவதாகச் சென்னை தேர்தல் அலுவலகத்துக்குத் தகவல் கிடைத்தது.

மொத்தம் ரூபா 5,600 கோடி ரொக்கம் மற்றும் பொருள்கள் கடத்தப்படுவதாக மர்மத் தொலைபேசி அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கப்பல்களில் சோதனை**

இது குறித்து, சென்னையில் உள்ள தேர்தல் அலுவலர்கள் தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் பொலிஸுக்குக் கடந்த சனிக்கிழமை காலை தகவல் தெரிவித்தனர். அதன்பேரில், கூடுதல் பொலிஸார் கந்தசாமி, வட்டாட்சியர் கிருஷ்ணன் தலைமையில் இரண்டு குழுவினர் சுங்கத்துறை, மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர், கடலோரக் காவல் படையினர் உதவியுடன் சோதனை மேற்கொண்டனர்.

**மீண்டும் சோதனை**

இந்நிலையில், வருவாய் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் திங்கட்கிழமை காலை மீண்டும் 3 கப்பல்களிலும் சோதனை நடத்தினர். காலை 10 மணிக்கு தொடங்கிய சோதனை சுமார் 2 மணிநேரம் நீடித்தது. மேலும், இந்தோனேஷியாவில் இருந்து நிலக்கரி ஏற்றி வந்த பியூட்டிபுள் ரெனா என்ற கப்பலிலும் கடந்த திங்கட்கிழமை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இந்த சோதனையிலும் எதுவும் சிக்க வில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். (த)

## ராகுலை எதிர்த்து ஸ்மிரிதி ராணி; சோனியாவை எதிர்த்து அகர்வால்

புதுடில்லி, ஏப் 2

அமேதி தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் ராகுல் காந்தியை எதிர்த்து பா.ஜ.கவைச் சேர்ந்த ஸ்மிரிதி இராணி போட்டியிடுவார் என்று பா.ஜ.க. அறிவித்துள்ளது. பாரதிய ஜனதா சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் 7ஆவது பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி போட்டியிடும் அமேதி தொகுதியில் அவருக்குப் போட்டியாக நடிகை ஸ்மிரிதி ராணி அறிவிக்கப்பட்டுள்ளார்.

இதேபோல் ரேபரெலி தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் தலைவர் சோனியாவை எதிர்த்துப் பாரதிய ஜனதா சார்பில் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் அஜய் அகர்வால் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. இதனை அடுத்து வாரணாசியில் நரேந்திர மோடிக்கு எதிராக வலுவான வேட்பாளரை காங்கிரஸ் கட்சி அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## சேது சமுத்திரத் திட்டத்துக்கு அ.தி.மு.க அரசு முட்டுக்கட்டை

### வாசன் குற்றச்சாட்டு

சென்னை, ஏப் 2

சேது சமுத்திரத் திட்டத்துக்கு அ.தி.மு.க அரசு முட்டுக்கட்டை போட்டுவருகிறது என ஜி.கே. வாசன் குற்றம் சாட்டியுள்ளார். திருவள்ளூர் நாடாளுமன்றத் தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடும் விக்டரி ஜெயக்குமாரை ஆதரித்து, அக்கட்சி சார்பில் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. இதில் இந்தியாவைப் பொருளாதார ரீதியில் உயர்த்தக் கூடிய திட்டமான சேது சமுத்திரத் திட்டத்துக்கு அ.தி.மு.க அரசு முட்டுக் கட்டை போட்டு வருகிறது என ஜி.கே.வாசன் கூறினார்.

ஜி.கே.வாசன் மேலும் பேசியதாவது:-



ஜி.கே. வாசன்

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு செயற்படுத்தி வரும் திட்டங்களை நாம் எந்த கட்சியுடனும் பங்கு போட்டுக்கொள்ளாமல், தனித்து எடுத்துக்கூறி பிரசாரம் செய்யக் கூடிய வாய்ப்பு நமக்குக் கிடைத்துள்ளது. சமூகத்தின் அனைத்துத் தரப்பு ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, காங்கிரஸ் அரசு பல திட்டங்களைச் செயற்படுத்தியுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளில் மருத்துவம், வீட்டுவசதி, வேலைவாய்ப்பு ஆகியவை அனைவருக்கும் கிடைக்கும் வகையில் பல திட் டங்களைக் கொண்டு வரவுள்ளது.

13 கோடி மாணவர்கள் பயன் பெறுகிற, உலகிலேயே மிகப் பெரிய திட்டமான மதிய உணவுத் திட்டத்துக்கு 13,215 கோடி ரூபாயும், அனைவருக்கும் தரமான மருத்துவ வசதி கிடைப்பதற்காக ரூபா 37, 300 கோடியும் ஒதுக்கியுள்ளது. 5 கோடி விவசாயிகள் பயன் பெறும் வகையில் ரூபா 72 ஆயிரம் கோடி விவசாயக் கடனை தள்ளுபடி செய்துள்ளது.

காங்கிரஸை எதிர்க்கும் அணிகள் எல்லாம் சந்தர்ப்பவாதக் கூட்டணியாகும். இந்தியாவைப் பொருளாதார ரீதியில் உயர்த்தக் கூடிய திட்டமான சேது சமுத்திரத் திட்டத்துக்கு அ.தி.மு.க அரசு முட்டுக்கட்டை போட்டு வருகிறது என்றார். (த)

## காங்கிரஸுக்கு 365 நாளும் முட்டாள்கள் தினம் தான்

### மோடி கடுமையாகச் சாடல்

தேர்தல் நேரத்தில், வாக்குக்காக ஏழை மக்களிடையே சென்று ஏழ்மைப் பாட்டு பாடுவதாகக் காங்கிரஸ் கட்சியை பா.ஜ.க பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கடுமையாகச் சாடினார்.

மேலும், காங்கிரஸ் 365 நாளும் முட்டாள்கள் தினத்தைக் கொண்டாடுகிறது என்பது மக்களுக்குத் தெரியும் என்று அவர் குறிப்பிட்டார். உத்திரப் பிரதேசம் மாநிலம் பரேலியில், குஜராத் முதல்வரும், பா.ஜ.க பிரதமர் வேட்பாளருமான நரேந்திர மோடி நேற்றுப் பிரசாரம் மேற்கொண்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற வேண்டும் என்று பிரார்த்தனை செய்வது போல, காங்கிரஸ் தேர்தல் நேரத்தில் 'ஏழை', 'ஏழை', 'ஏழை' என்ற மந்திரத்தைப் பாடுகிறது. ஆனால், ஏழை மக்கள் உணர்ந்து விட்டனர். காங்கிரஸ் 365 நாளும் முட்டாள்கள் தினத்தை கொண்டாடுகிறது என்று அவர்களுக்குத் தெரியும்.

ராகுல் ஏழைகளின் மீது அக்கறை உள்ளது போல பாவனை செய்து வருவதை மக்கள் ஏற்க மாட்டார்கள். செல்வந்தராகப் பிறந்த ராகுலுக்கு ஏழை என்றால் தெரியுமா அல்லது வறுமை என்றால் புரியுமா?

காங்கிரஸ் கட்சி 2009 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று கூறியது. ஆனால், அவர்கள் அதனைச் செய்யவில்லை. ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின்போது விவசாயிகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகிறது - என்றார் மோடி. (த)

## 3.3 பில்லியன் அமெ. டொலர் பேஸ்புக் மூலம் வருமானம்

நியூயோர்க்.ஏப் 2
பேஸ்புக் சமூக வலைத்தள ஸ்தாபகர் மார்க் ஸுக்கர்பேக் 2013 ஆம் ஆண்டுக்கான பங்கு விற்பனை மூலம் 3.3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாகப் பெற்றுள்ளார்.
இதன்போது, புதிய ஒழுக்காற்று விதிமுறைகளும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.
பொது பங்கு வழங்கலின் அடிப் படையில் மார்க் தமது பங்குகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.
இதுதவிர, மார்க் 60 மில்லியன் பங்குகளை வரி செலுத் தலுக்காக பயன்படுத்தியுள்ளார்.
2012 ஆம் ஆண்டுடன் ஒப் பிடுகையில் கடந்த வருடம் பங்கு வழங்கலில் வீழ்ச்சி ஏற் பட்டுள்ளதாகவும், தெரிவிக் கப்பட்டுள்ளது. (கு)



தாய்வான் - சீனா இடையேயான வர்த்தக உடன்படிக்கைக்கு எதிராகத் தாய்வானில் மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று தாய்வானின் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக லட்சக்கணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (கு)

# ஆயுத ஏற்றுமதிக் கட்டுப்பாட்டை தளர்த்திக்கொள்ள ஜப்பான் முடிவு

ரோக்கியோ.ஏப் 2
இராணுவத் தளபாடங்களை ஏற்றுமதி செய்தாலும் டாங்கி போன்ற தாக்குதல் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யப்போவதில்லை என அந்த நாடு தெரிவித்துள்ளது
இராணுவத் தளபாடங்களை ஏற்றுமதி செய்தாலும் டாங்கி போன்ற தாக்குதல் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யப்போவதில்லை என அந்த நாடு தெரிவித்துள்ளது.
ஆயுதங்கள் ஏற்றுமதி செய்வதில்லை என ஜப்பான் பல காலமாக கடைப்பிடித்துவருகின்ற சுய கட்டுப்பாட்டைத் தளர்த்திக் கொள்ள அந்த நாடு முடிவெடுத்துள்ளது.
தமது ஆயுத உற்பத்தி தொழில் துறையை வலுப்படுத்துவதற்காகவும், கூட்டாளி நாடுகளுடன் தமது உறவை மேம்படுத்திக்கொள்வதற்காகவும் இந்த முடிவைத் தாம் எடுத்துள்ளதாக ஜப்பான் கூறுகிறது.
ஜப்பானின் இந்த நகர்வை தாம் உற்றுக் கண்காணிப்பதாகச் சீனா உடனடியாக தெரிவித்துள்ளது.
டாங்கிகள், குண்டுவீச்சு விமானங்கள் போன்ற தாக்குதல் ஆயுதங்களை ஏற்றுமதி செய்யும் திட்டம் தமக்கு இல்லை என ஜப்பான் கூறுகிறது.
போர்களே கூடாது என்று தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கு இசைவாக, ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதில்லை என்ற சுய கட்டுப்பாட்டைக் கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன் ஜப்பான் கடைப்பிடிக்க ஆரம்பித்தது.
தனது ஆயுதப் படைகளை வலுப்படுத்தவும், காத்திரமாகச் செயல்பட ஆரம்பித்துள்ள சீனா விடுக்கும் சவால்களை முகங்கொடுக்கவும் ஜப்பான் நடவடிக்கைகளை எடுத்துவருகின்ற சூழ்நிலையில் அது இந்த அறிவிப்பைச் செய்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (கு)



வீதிகளில் குவிந்துள்ள பொலிஸார்.

## ஏதென்ஸில் போராட்டத்துக்கு கிரேக்கப் பொலிஸார் தடை


ஏதென்ஸ்.ஏப் 2
கிரேக்கத் தலைநகரில் ஆர்ப் பாட்டங்ககளை நடத்துவதற்கு அந்நாட்டுப் பொலிஸார் தடை விதித்துள்ளனர் .
கிரேக்க தலைநகர் ஏதென்ஸின் மத்திய பகுதியில் நடைபெறவுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பொருளாதார அமைச்சர்களின் மாநாட்டை முன்னிட்டு அந்த நாட்டுப் பொலிஸார் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதித்துள்ளனர்.
சின்டகாமா சதுக்கத்தில் இடம் பெற்றுவரும் அரசின் கடும் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கும் தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
பொருளாதார அமைச்சர்களின் சந்திப்பில், கிரேக்கம் எதிர் நோக்கியுள்ள பொருளாதார சிக்கல்களுக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என எதிர்ப்பார்க் கப்படுகின்றது.
கிரேக்கம் தற்போது உயர் கடன் மற்றும் வேலையில்லாப் பிரச்சினை போன்றவற்றினால் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (கு)

## உக்ரைன் அபிவிருத்தி குறித்து நேட்டோ அமைச்சர்கள் பேச்சு

பிரசல்ஸ், ஏப். 2
உக்ரைன் மீளமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் நேட்டோ நாடுகளின் வெளிவிவகார அமைச் சர்கள் கலந்துரையாடி வருகின்றனர்.
இந்தச் சந்திப்பு பிரசல்ஸ்ஸில் இடம்பெற்று வருகின்றது.
ரஷ்யா மற்றும் கிரைமியா தொடர்பில் முதன்முறையாக 28 உறுப்பு நாடுகளின் அமைச் சர்கள் சந்திக்கின்றனர்.
இதேவேளை ரஷ்யா தமது படைகளை உக்ரைன் எல்லையில் இருந்து பகுதியளவில் விலக்கிக் கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.
இது தவிர, நேட்டோ தமது வருடாந்த வான்படைப் பயிற்சிகளை போல்டிக் நாடுகளுக்கு மேலாக எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளும் என அறிவித்துள்ளது.
ஜேர்மனி தூதுவர் அஞ்சலா மோர்கல் உடன் இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலின் போதே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.
இருந்தபோதும், தேவையேற்படின் உக்ரைன் எல்லைப் பகுதிக்குப் படையினரை அனுப்பத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (கு)

## மலேசிய விமான கடைசி வார்த்தை 'ஓல் ரைட், குட் நைட்' இல்லையாம்

கோலாலம்பூர்.ஏப் 2
மலேசிய விமானம் ரேடாரில் இருந்து மறையும் முன்பு விமானி கடைசியாகக் கூறிய வார்த்தை என்று புதிதாக ஒன்றை மலேசியா தெரிவித்துள்ளது.
கடந்த 8ஆம் திகதி 239 பேருடன் மாயமான



மலேசிய விமானம் எம். எச். 370 இரண்டு வார தேடலுக்குப் பிறகு தெற்கு இந்தியப் பெருங்கடலில்வீழ்ந்துவிட்டதாக மலேசிய அரசு அறிவித்தது.
இந்நிலையில், மலேசிய அரசு புதிய தகவலொன்றைத் தெரிவித்துள்ளது.
மலேசிய விமானத்தின் துணை விமானி, விமானப் போக்கு வரத்துக் கட்டுப்பாட்டு அறையைக் கடைசி முறையாகத் தொடர்பு கொண்ட போது 'ஓல் ரைட், குட்நைட்' என்ற வார்த்தைகளைத் தெரிவித்ததாக முன்பு கூறப்பட்டது.
மலேசிய விமானத்தின் விமானி அறையில் இருந்து விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறைக்கு கடைசியாக தெரிவிக்கப்பட்ட வார்த்தை குட்நைட் 'மலேசியன் 370' எனத் தற்போது மலேசிய போக்குவரத்துத் துறை அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.
விமானிகள் அறையில் கடைசியாகப் பதிவான உரையாடல்களை பயணிகளின் உறவினர்களுக்குத் தெரிவிக்குமாறு மலேசிய போக்குவரத்துத் துறை அமைச்சர் ஹிஷாமுத் தீன் ஹுசைன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
'குட் நைட் மலேசியன் 370' என்று கூறியது மலேசிய விமானத்தின் கேப்டனா, துணை விமானியா என்று விசாரணை நடந்து வருகிறதாம்.
முன்னதாக 'ஓல் ரைட் குட் நைட்' என்ற வார்த்தைகளை துணை விமானி பாரிக் அப்துல் ஹமீது தான் தெரிவித்ததாக மலேசியா எயார்லைன்ஸ் குறிப்பிட்டிருந்தது. (கு)

## வெடிப்புச் சம்பவத்தினால் நைரோபியில் 6 பேர் சாவு



காயமடைந்தவர் வைத்தியசாலைக்கு

நைரோபி.ஏப் 2
கென்யாவின் தலைநகரான நைரோபியில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர்
நைரோபியின் புறநகர்ப் பகுதியில் இடம்பெற்ற இந்த வெடிப்புச் சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது
சிறிய சோமாலியா என அழைக் கப்படும் இந்தப் பகுதியில் சோமாலியர்கள் அதிகம் வசிக் கின்றனர்
கிரனேட் ஒன்றே வெடித்திருக் கலாம் என அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்
அண்மைக் காலமாக குறித்த பகுதியில் அண்மைக்காலமாக கிரனேட் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றமை குறிப் பிடத்தக்கதாகும். (கு)


## சவால்களிடையே விமானத் தேடல்

பேர்த்.ஏப் 2
காணாமல் போன மலேசிய விமானத்தை தேடும் பணிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பில் இருக்கும் அதிகாரி அந்தப் பணியை மிகப்பெரும் சவால் என்று கூறியுள்ளார்.
ஆஸ்திரேலியக் கடற்பரப்புக்கு அப்பாலுள்ள பகுதிகளில் இந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளவர்களை ஒருங்கிணைக்கும் அதிகாரியான ஆக்னஸ் ஹுஸ்டன் தனது வாழ்க்கையில் இதுவரை சந்தித்துள்ள மிகப்பெரிய சவால் இதுதான் எனத் தெரிவித்துள்ளார்.
இந்தப் பணியில் 11 விமானங்கள், 9 கப்பல்கள் ஆகியவை இந்தியப் பெருங்கடலின் தெற்குப் பகுதியில் ஈடுபட்டிருந்தாலும் இதுவரை எந்தவிதமான காத்திரமான தகவல்களும் கிடைக்கவில்லை என்று ஆஸ்திரேலிய பாதுகாப்புப் படைகளின் முன்னாள் தலைவரான ஆக்னஸ் ஹுஸ்டன் கூறுகிறார். (கு)

# மேல் மாகாண சபைத் தேர்தலில் தமிழ் வேட்பாளர் பலர் தோல்வி

## ஐ.தே.கவின் சார்பில் தமிழர் எவரும் தெரிவாகவில்லை

கொழும்பு, ஏப்.2
மேல்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் பலர் தோல்வியடைந்துள்ளனர்.
ஐ.தே.க. சார்பில் போட் டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் எவருமே வெற்றிபெறவில்லை.
கொழும்பு மாவட்டத்தில் இந்தக் கட்சியின் சார்பில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான சி. வை. பி.ராம் , பிரமிளஸ் கொஸ்தா ஆகியோரும் -கொழும்பு வர்த்தக சங்கத் தலைவர் சுந்தரம் கே.பழனியாண்டி, சட்டத்தரணி விஷ்ணு காந்தன் ஆகிய நால்வர் போட்டியிட்டிருந்தனர்.
இவர்களில் எவருமே வெற்றி பெறவில்லை. முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சி.வை.பி. ராம் 16,500 வாக்குகளைப் பெற்றிருந்தார். ஆனால் அவர் தெரிவாகவில்லை.
குருபரன், ராஜேந்திரனும் தோல்வி
இதேவேளை ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் மேல் மாகாண சபை உறுப்பினர்களாக இருந்த கட்சியின் பிரதித் தலைவர் நல்லையா குமரகுருபரன், தேசிய அமைப்பாளர் எஸ்.ராஜேந்திரன் ஆகியோரும் இந்தத் தேர்தலில் தோல்வியடைந்தனர்.
ஆளும் கட்சியான ஐ.ம.சு. முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளரான கந்தசாமி கருணாகரன், கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ். விஜயகுமார் ஆகியோரும் தோல்வியுற்றனர். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் மாகாணசபைஉறுப்பினர்நவுஸர் பௌஸியும் தோல்வியடைந்தார். மொஹமட் மன்சீனுக்கும் இடம் கிடைக்கவில்லை. (ஒ)



கண்டிய நடன விரிவுரை யாளர் குருதகன உபநந்தகல கெதரவிடம் ஆசிபெறுகிறார் மாணவி

# கண்டிய நடனத்தில் தமிழ் மாணவி

வலி. வடக்கு, ஏப்.2
முதன்முதலாகப் பாரம்பரிய கண்டிய நடனத்தைப் பயின்று தேர்ச்சிபெற்ற தமிழ் மாணவியொருவரின் நடன அரங்கேற்றம் இன்று புதன்கிழமை கண்டி நுண்கலைப்பீடத்தில் நடைபெறவுள்ளது.
கண்டி நுண்கலைப் பீடத்தில் கண்டிய நடனம் பயின்ற யாழ்ப்பாணம் மல்லாகத்தைச் சேர்ந்த வியானி என்ற மாணவியே கண்டிய நடனத்தைக் கற்று அரங்கேற்றம் செய்யும் முதலாவது தமிழ்ப் பெண் என்ற பெருமையைப் பெறுகிறார்.
இவர் கண்டியில் அமைந்துள்ள பெல் பேட் நுண்கலைப் பீடத்துக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் தெரிவு செய் யப்பட்டு மூன்று ஆண்டுகால டிப்ளோமா சான்றிதழைப் பெற்ற ஒருவராவார். கண்டிய நடன விரிவுரை யாளர் குருதகன உபநந்தகல கெதரவின் மாணவியான இவர் தமது குருவிடம் ஆசி பெற்றுக் கொள்கிறார். (ஒ-86)

## வல்லப்பட்டை வைத்திருந்த நபர் கைது

கொழும்பு,ஏப்.2
பேராதனை பகுதியில் வல்லப் பட்டைகளுடன் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.
சந்தேகநபர் வசமிருந்து 850 கிராம் வல் லப்பட்டைகள் கைப் பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நேற்றுமுன்தி னம் பேராதனை பொலி ஸாருக்கு கிடைத்த தகவல் அடிப்படையிலேயே அவர் கைதாகியுள்ளார்.
சந்தேகநபர் இரத்தோட்டை பகுதியைச் சேர்ந்த ஒருவர் என்று பொலிஸார் கூறினர்.
சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த பேராதனைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ச)

# அடுத்த தேர்தல் ஊவா மாகாணசபைக்கு

## அமைச்சர் டலஸ் கூறுகிறார்

ஊவா மாகாண சபைக்கு அடுத்து தேர்தல் நடத்தப்படும் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.
ஜேவிபியின் புதிய தலைமைத்துவத்தால் அக் கட்சியில் சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சுதந்திர கட்சியின் பொதுச் செயலர் அமைச்சர் மைத்திரி பால சிறிசேன உரையாற்றிய போது:
2009 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்த லுடன், கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலை ஒப்பிடுவது நியாயமானதல்ல. 2009 ஆம் ஆண்டில் நாட்டில் போர்ச் சூழல் நிலவியது. ஆனால் இன்று நிலைமை மாறியுள்ளது. நாட்டின் இன்றைய அரசியல் நிலைமைகள் வித்தியாசமானது-என்றார். (ச)

# கொழும்பில் சர்வதேச கருத்தரங்கு

## பதினாறு நாடுகள் பங்கேற்பு

கொழும்பு,ஏப்.2
அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தலைமையகம், இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு பிரதானி அலுவலகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ள டெம்பஸ்ட் எக்ஸ்பிரஸ் - 24 என்னும் சர்வதேச கருத் தரங்கு நேற்று கொழும்பில் ஆரம்பமாகி நடை பெற்று வருகிறது.
எதிர்வரும் 9 ஆம் திகதி வரை கொழும்பு, கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ள இந்தச் சர்வதேச கருத்தரங்கில் அமெரிக்கா உட்பட 16 நாடுகளைச் சேர்ந்த 46 பேர் கலந்து கொண்டுள்ளனர்.
இந்த கருத்தரங்கில் வியட்நாம், கனடா, பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ், நியூஸிலாந்து, நேபாளம், மாலைத்தீவு, கம்போடியா, இந்தோனேஷியா, மலேசியா, மொங்கோலியா, சிங்கப்பூர், தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளைப் பிரதி நிதித்துவப்படுத்தி 26 பேரும் அமெரிக்காவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 20 பேரும் கலந்துகொண்டுள்ளனர்.
இதேவேளை, இலங்கையின் முப்படைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் 23பேரும் கலந்து கொண்டுள்ளனர். (ச)


## உதவி வேண்டுமா?

5 வயது முதல் 18 வயது வரையுள்ள மாணவர்களின் கல்வி மந்த நிலைக்குத் தீர்வு பெற விரும்பினால்......
தொழில் வாய்ப்பின்மையால் ஏற்பட்ட விரக்திக்குத் தீர்வு பெற விரும்பினால்......
உத்தியோகத்தினால் ஏற்பட்ட மன அழுத்தத்துக்குத் தீர்வு பெற விரும்பினால்.......

எமது நிறுவனம் வாரத்தில் 30 நபர்களை மாத்திரமே தெரிவு செய்து சிறந்த உளவியல் ஆற்றுப்படுத்தலை இலவசமாகத் தர முன்வந்துள்ளது...
எனவே இவ்வுதவி தேவைப்படும் பெற்றோர்களும் மற்றும் யாவரும் தங்கள் விண்ணப்பக் கடிதத்தை சரியான*தொலைபேசி எண்ணைக் குறிப்பிட்டு தபால் மூலம் உடன் அனுப்புங்கள்.
(46324)

**CROWN** Professional Development & Marketing,
No.04, Mount Carmel Road,
Jaffna

## JOB OPPERTUNITY

**Assistant Area Manager**

Earn up to 40K

**Requirements:**
- Age below 30
- Minimum A/L
- Good in Public Relation

Note:
Marketing experience will be the special consideration

Closing Date: 5th April 2014

(46323)

Please send your CV to below address

**CROWN** Professional Development & Marketing,
No.04, Mount Carmel Road,
Jaffna

## காரைநகர் பிரதேச சபை
## காணி கொள்வனவு அறிவித்தல்

காரைநகர் பிரதேச சபையின் அபிவிருத்திக்காக Dr.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்னாலுள்ள பிரதேச சபைக் காணிக்குத் தெற்குப் பக்கமாக செல்வி சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை என்பவரது 10 பரப்புக் காணியைப் பிரதேச சபை கொள்வனவு செய்யவுள்ளதால் இந்த ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் இவ் விளம்பரம் பிரசுரமாகும் திகதியிலிருந்து (இன்றிலிருந்து) 14 நாள்களுக்குள் எமக்கு அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆதன விவரம் - வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தீவுப்பகுதி க்காரைதீவுக் கோவிற்பற்று, காரைதீவு கிழக்கு இறை ஆத்தியடி.

உறுதி இல. 4878, இதன் எல்லை

| | | |
|---|---|---|
| வடக்கு | : | பிரதேச சபைக்குரிய ஆதனம் |
| கிழக்கு | : | சிதம்பர அம்பலவாணர் சுவாமி கோயில் ஆதனம் |
| மேற்கு | : | மொந்திபுலம் ஒழுங்கை |
| தெற்கு | : | செல்லையா செல்லத்துரையின் உரித்தாளரின் ஆதனம் |

வே.ஆனைமுகன், தவிசாளர்,
காரைநகர் பிரதேச சபை,காரைநகர்.
01.04.2014 (சி/18124)(2.6.3)

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்கல கரமான விஜய வருஷம் பங்குனித் திங்கள் 19 ஆம் நாள் இன்று (02.04.2014) புதன்கிழமை முற்பகல் 10.10.மணி தொடக்கம் 11.20 மணி வரையுள்ள பரணி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்



wedding
திரு.திருமதி சாந்தலிங்கம் தம்பதியரின் புத்திரன் திருநிறை செல்வன்
**குகசீலன்** அவர்களுக்கும்

wedding
திரு.திருமதி தர்மராஜா தம்பதியரின் புத்திரி திருநிறை செல்வி
**அனுஷா** அவர்களுக்கும்

(46249)(2.6.3)

இறைவன் திருவருள் கொண்டு **கோண்டாவில் ஸ்ரீ வல்லிபுரநாதர் மருங்கமைந்த திருக்கல்யாண மண்டபத்தில்** திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

திரு.திருமதி சாந்தலிங்கம்
இராஜகுமாரி குடும்பத்தினர்
ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் வீதி,
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.

திரு.திருமதி தர்மராஜா
மல்லிகாதேவி குடும்பத்தினர்
நாராயணன் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

(இரு வீட்டார் அழைப்பு)

## UNIVERSITY OF JAFFNA
## ALLIED HEALTH SCIENCES UNIT
## FACULTY OF MEDICINE

**COMMENCEMENT OF ACADEMIC ACTIVITIES**
B.Sc.in Medical Laboratory Sciences, B.Sc. in Nursing and Bachelor of Pharmacy

The Orientation Programme for the newly admitted first year students to the Allied Health Sciences Unit, Faculty of Medicine, University of Jaffna for the Academic Year 2013/2014 will commence on Wednesday, 9th of April 2014 at 8.45 am at the **Faculty of Medicine, Adiyapatham Road, Kokuvil East, Kokuvil.**

The new students are requested to participate in the Orientation Programme without fail.


Registrar,
University of Jaffna.
01.04.2014.
(சி13120)
(12.3.6)

## முருகானந்தாவின் பவளவிழா

கிளிநொச்சி, ஏப்.2
கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் பவளவிழா மே மாதம் 10 ஆம் திகதி இடம்பெற வுள்ளதாக கல்லூரியின் அதிபர் தி.வரதன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
கல்லூரியின் பழைய மாண வர்களினால் இந்த விழா ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்படவுள் ளது. இந்த விழாவின்போது பவள விழா மலர் வெளியீடு, பவள விழாவை நினைவு கூரும் முகமாக மண்டபம் ஒன்றைத் திறந்து வைத்தல், மற்றும் போட்டி நிகழ்வுகள் உட்படப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன. (க-18)

## வங்காலையில் சிறுவர் இருவர் துஷ்பிரயோகம்

நபரொருவர் இரு சிறுவர்களை பற்றைக்குள் அழைத்துச்சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியசம்பவம்ஒன்றுமன் னார் வங்காலை கிராமத் தில் கடந்தவாரம்இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வந்ததாவது:-
வங்காலை பஸ்ரியன்புரி கிரா மத்தைச் சேர்ந்த ஒருவர் அவ ரது வீட்டுக்கு அருகில் வசிக்கும் இரண்டுசிறுவர்களுக்குதோசை வாங்கித்தருவதாக கூறி அழைத்துச் சென்றுள்ளார். அவரது ஆசை வார்த்தைகளை நம்பிய 9 மற்றும் 11 வயதுடைய இரு சிறுவர்களும் அவருடன் சென்றுள்ளனர்.
தோசையை வாங்கி அவர் களுக்கு உண்ணக்கொடுத்த பின்னர் குறிப்பிட்ட அந்த நபர், அருகிலிருந்த பற்றைக்குள் அவர்களை அழைத்துச்சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுவர்கள் பெற்றோருக்கு தெரிவித்ததையடுத்து இந்த விடயம் தொடர்பாக அவர்கள் உடனடியாக மன்னார்பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் தனர். இந்த நிலையில் மன் னார் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்து மன்னார் நீதி மன் றில் முன்னிலைப் படுத்தினர்.
இதன் போது குறித்த வழக்கை விசாரணை செய்த பதில் நீதி வான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-56)




கிளிநொச்சி கனகபுரம் புனித யூதா முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா சிறுவன் ஒருவனுக்குப் பரிசில் வழங்குகின்றார். (க-18)

# உரிய நியதிகளின் பிரகாரம் இடம்பெறாத நிர்மாணப் பணிகள்

### பூநகரிப் பிரதேச சபைத் தவிசாளர் கவலை தெரிவிப்பு

பூநகரி.ஏப்.2
பூநகரிப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பகுதி களில் இடம்பெறும் நிர்மாணப் பணிகள் உரிய நியதிகளின் பிரகாரம் இடம்பெறவில்லை யென பூநகரிப் பிரதேச சபை யின் தவிசாளர் பொ.சிறீஸ் கந்தராசா சுட்டிக் காட்டியுள் ளார்.

**தற்போது இந்தப் பிரதேசத்தில் குளங்கள், சந்தைகள், மருத்துவமனை, நூலகம், வீதிகள் உட்படப் பல்வேறு நிர்மாண வேலைகள் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் இவை உரிய நியதிகளின் பிரகாரம் இடம்பெற வில்லையென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.**

தற்போது இந்தப் பிரதேசத்தில் குளங்கள், சந்தைகள், மருத் துவமனை, நூலகம், வீதிகள் உட்படப் பல்வேறு நிர்மாண வேலைகள் இடம்பெறுவதாக வும் அவர் தெரிவித்துள்ளார். ஆனால் இவை உரிய நியதி களின் பிரகாரம் இடம்பெற வில்லையென அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.
மேலும் தமது கோரிக்கையின் பிரகாரமே குறியீட்டுப் பலகை கள் பல்வேறு இடங்களில் பொருத்தப்பட்டதாக அவர் தெரி வித்தார்.
அத்துடன் ஒப்பந்தங்கள் தொடர் பாக விளம்பரப்படுத்தப்பட வில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதனால் இங்கு இடம்பெறும் வேலைகள் தொடர் பாகப் பொதுமக்கள் தம்மிடம் முறைப்பாடு தெரிவிப்பதாக வும் அவர் தெரிவித்தார்
சில ஒப்பந்தங்கள் மேற்கொள் ளப்படாத வீதிகள் புனரமைக் கப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.
எனவே பிரதம பொறியியலா ளருக்கு அங்கு இடம்பெறும் வேலைகளை அடிக்கடி மேற் பார்வை செய்யுமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (க)

## குரங்குகளால் பாதிப்பு

முல்லைத்தீவு.ஏப்.2
முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பெருகிக் காணப்படும் குரங்கு களால் தாம் பல்வேறு பாதிப் புக்களை எதிர்கொண்டு வருவ தாக இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.
இந்தக் குரங்குகள் இங்கு செய்கை பண்ணப்பட்டுள்ள நிலக்கடலை, மரவள்ளி, மிள காய் போன்ற சிறு பயிர்களை அழித்து நாசம் செய்கின்றன.
அத்துடன் மாமரங்களில் காணப் படும் மாங்காய்களைப் பெரு மளவில் அழித்து வருகின்றன.
புளியமரங்களையும் விட்டு வைக்காத இந்தக் குரங்குகள் அங்கு காய்த்துத் தொங்கும் புளியங்காய்களுக்குச் சேதம் விளைவித்து வருகின்றன.
மேலும் வீடுகளின் கூரைகளில் ஏறி இவை துள்ளிக் குதிப்பதால் வீட்டின் கூரைகளில் பொருத் தப்பட்டுள்ள ஓடுகள் சேதமடைந்து வருகின்றன. இதனால் செய் வதறியாத நிலையில் இந்தப் பகுதி மக்கள் திகைத்து நிற் கின்றனர்.
அதுமட்டுமல்லாது கிணற்றுக் கட்டுகளின் மீது அமர்ந்து கொள் ளும் இந்தக் குரங்குகள் தாம் வெளியிடுகின்ற கழிவுகளால் கிணற்று நீரை அசுத்தம் செய் கின்றன. தற்போது கடும் வறட்சி நிலவுவதால் தண்ணீர்த் தட் டுப்பாட்டை எதிர்கொள்ளும் மக்கள் குரங்குகளின் இத்த கைய செயற்பாடுகளால் மேலும் இடர்களை எதிர் கொண்டு வருகின்றனர்.
எனவே இந்தக் குரங்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து தம்மைப் பாதுகாக்குமாறு இந்தப் பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-500)

## பொழுதுபோக்கு மையமாக மாறும் வன்னேரிக்குளம்

கிளிநொச்சி, ஏப்.2
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குளத்தைப் பொழுதுபோக்கு மையமாக உருவாக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சு.தயாபரன் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து இந்தப் பணிகளை ஆரம் பித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இரண்டு இடங்கள் பொழுதுபோக்கு மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
பச்சிலைப்பள்ளியில் உள்ள கரந்தாய்க்குளமும், வன்னேரிக் குளமுமே இவையிரண்டும் ஆகும். கரந்தாய்குளத்தைக் கிளிநொச்சி அரச செயலகம் தெரிவு செய்த போதிலும் இது தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.
கரைச்சிப் பிரதேச சபையினால் வன்னேரிக்குளம் பொழுது போக்கு மையமாகத் தெரிவு செய்யப்பட்டது. இது தொடர்பான பணிகள் இடம்பெற்று வருகின்றன.
திருமுறிகண்டியிலிருந்து வன்னேரிக்குளம் வரையான 20 கிலோ மீற்றர் நீளமான வீதியைப் புனரமைப்பதன் மூலமாக வன்னேரிக்குளம் பொழுதுபோக்கு மையமாக மாறும் போது மக்கள் இலகுவாகச் சென்று வரக்கூடிய நிலை உருவாகுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## அரச பஸ் சேவையை ஒழுங்காக நடத்துமாறு பயணிகள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.2
யாழ்ப்பாணத்திலிருந்து முத்து ஐயன்கட்டுக் குளத்துக்கான சேவையில் ஈடுபடும் அரச பஸ்களை கற்சிலைமடுப் பாட சாலை வரை ஒழுங்காக இயக்குமாறு இப் பகுதி மக்கள் தெரிவிக் கின்றனர்.
தற்போது திங்கள் மற்றும் வெள் ளிக்கிழமைகளில் கற்சிலை மடு பாடசாலை வரை இந்தப் பஸ் சேவைஇடம்பெற்றுவருகின்றது.
சில நாள்களில் கற்சிலைமடு வராமலேயே ஒட்டுசுட்டான் ஊடாக பஸ்கள் திரும்பிச் செல்வ தும் உண்டு. இதனால் பயணி கள் பஸ்ஸுக்காக காத்திருந்து ஏமாற்றம் அடைவதுடன் சிரமங் களுக்கும் ஆளாகின்றனர்.
எனவே இந்த பஸ் சேவையை திங்கள், வெள்ளி ஆகிய இரு நாள்களாவது ஒழுங்காக இயக் குமாறு பயணிகள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (க-500)

## புத்தாண்டு தொடர்பான கலந்துரையாடல் மன்னார் செயலகத்தில்

மன்னார், ஏப்.2
தமிழ், சிங்கள புத்தாண்டு நிகழ்வுகளை மன்னார் மாவட் டத்தில் கொண்டாடுவது தொடர் பான முன் ஆயத்த அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத் தின் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமை யில் இடம் பெற்றது.



மன்னார் மாவட்டச் செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது.

மன்னார் மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்கள், மன் னார் மாவட்ட அரச திணைக் களங்கள் மற்றும் முப்படை யினரையும் இணைத்து மன் னார் மாவட்டத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி மாபெரும் தமிழ், சிங்கள புத்தாண்டு கொண் டாட்டம் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.
இந்த நிகழ்வில் சிறியவர்கள் முதல் அனைவருக்கும் ஏற்ற வகையில் பல்வேறு விளை யாட்டுப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.
மன்னார் முருங்கன் மகா வித்தியாலய பாடசாலை மைதா னத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி குறித்த நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன.
இந்த நிலையில் குறித்த தமிழ், சிங்கள புத்தாண்டையொட்டி இடம் பெறவுள்ள நிகழ்வுகள் குறித்து முன் ஏற்பாடு தொடர் பாக ஆராயும் அவசர கலந்து ரையாடல் ஒன்று இடம் பெற் றது.
குறித்த கலந்துரையாடலில் மன்னார் மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல், உதவி மாவட்ட செயலாளர் எம்.பரமதாசன், பிரதேச செய லர்கள், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், திணைக் கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.
இதன் போது எதிர் வரும் 5 ஆம் திகதி இடம் பெறவுள்ள நிகழ்வுகள் குறித்தான பொறுப் புக்கள் திணைக்கள அதிகாரி களிடம் பகிர்ந்தளிக்கப்பட்டன.
இதன்போது அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய கருத்து வெளியிடும் போது:
குறித்த நிகழ்வு சிறந்த முறை யில் இடம் பெற வேண்டும். எமது மாவட்டத்தில் இடம் பெற வுள்ள தமிழ், சிங்கள புத் தாண்டு நிகழ்வு இனங்களுக் கிடையில் ஒற்றுமையை ஏற் படுத்தும் வகையில் அமைய வேண்டும். இதற்கு அனைத்து அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (க-56)

## குளவிகளின் பெருக்கம்

முல்லைத்தீவு, ஏப்.2
முல்லைத்தீவு மாவட்டத்தில் குளவிகளின் பெருக்கம் அதி கரித்துக் காணப்படுகின்றது.
இதற்கு மழை பெய்யாமையும் ஒரு முக்கிய காரணமென மக்கள் தெரிவிக்கின்றனர்.
ஆங்காங்கு பனைகளில் காணப் படும் குளவிக் கூடுகள் காய்ந்த ஓலைகளுடன் சேர்ந்து கீழே வீழ்வதால் மக்கள் குளவி களால் தாக்கப்படுகின்றனர்.
அண்மையில் பண்டார வன் னிக் கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் குளவிகளின் தாக்குதலுக்கு ஆளாகியுள் ளார். இவர் மாஞ்சோலை மருத் துவமனையில் அனுமதிக் கப்பட்டதால் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.
இதனால் இங்குள்ள மக்கள் குளவிக் கூடுகளைக் கண்டதும் அச்சமடைந்து அந்த இடத்தை விட்டு அவசரமாகத் தூர வில கிச் செல்வதைக் காணமுடிகின் றது. (க-500)

# சிராஸ் மீராசாகிப் பதவி விலகினாலும் சாய்ந்தமருது புறக்கணிக்கப்படாது

## உறுதியளித்தார் கல்முனை முதல்வர்

அம்பாறை, ஏப்.2

'கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாகிப் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து விலகி வேறு கட்சியுடன் இணைந்தாலும் சாய்ந்தமருது பிரதேசத்தை கல்முனை மாநகர சபை எந்த வகையிலும் புறக்கணிக்காது. அத்தகைய எண்ணம் என்னிடம் இல்லை'

இவ்வாறு கல்முனை மாநகர முதல்வர் எம்.நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாகிப் வேறு கட்சியுடன் இணைவதால் அவரது சொந்த ஊரான சாய்ந்தமருது பிரதேச நிலைமையைச் சுட்டிக் காட்டி எமது மாநகர சபையின் சேவைகள் அங்கு கிரமமாக , திருப்திகரமாக இடம்பெறவேண்டுமென சில உறுப்பினர்கள் இங்கு உரையாற்றும் போது சுட்டிக்காட்டினர்.

முன்னாள் முதல்வர் சிராஸ் மீராசாகிப் முஸ்லிம் காங்கிரஸை விட்டு வேறு கட்சிக்குப் போனாலும் சரி, போகாவிட்டாலும் சரி சாய்ந்த மருது பிரதேசத்தை கல்முனை மாநகர சபை ஒருபோதும் புறக்கணிக்கப் போவதில்லை.

அவ்வாறு சாய்ந்த மருது பிரதேசத்தையோ, சாய்ந்த மருது மக்களையோ சிராஸ் மீராசாகிப் கட்சி தாவிவிட்டார் என்பதற்காகப் புறக்கணிக்கும் அல்லது மாநகர சபை சேவையில் ஓரம் கட்ட வேண்டும் என்ற எண்ணம் எம்மிடம் இல்லை.



நிஸாம் காரியப்பர்

இன்று கல்முனை மாநகர சபையின் ஆட்சி அதிகாரம் இலங்கை முஸ்லிம் காங்கிரஸிடம் உள்ளது என்றால் அதற்காக சாய்ந்தமருது மக்கள் பெரும் பங்களிப்புச் செய்தவர்கள் என்பதை எளிதில் மறந்துவிட முடியாது.

அவ்வாறு நன்றி மறந்து செயற்பட முடியாது. நாமோ எமது கட்சியான முஸ்லிம் காங்கிரஸோ சாய்ந்த மருது மக்களை ஒரு போதும் கைவிடப் போவது இல்லை.

கல்முனை மாநகர சபையின் சேவைகளிலும் அபிவிருத்தியிலும் சாய்ந்தமருது பிரதேச மக்களுக்கான பங்கு எவ்வித தடையுமின்றி எதிர்காலத்தில் கிடைக்கும்.

என்னைப் பொறுத்தவரை நான் நேர்மையென்பதை முதன்மையாகக் கொண்டு பேசுபவன். அதன்படி செயற்படுபவன்.

கல்முனை மாநகர முதல்வர் என்ற வகையில் மாநகர பிரதேசங்கள் சகலவற்றையும் எத்தகைய பாகுபாடுமின்றி அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்குடன் எனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றேன்.

கல்முனை மாநகர சபைப் பிரிவிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்கு உரிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் எவ்வித தயக்கமும் காட்டப்பட மாட்டாது. கல்முனை மாநகரம் இன ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டானதாக மிளிர வைப்பதுடன், தமிழ், முஸ்லிம் நல்லுறவு மேலோங்குவதற்கு உழைப்பதும் எனது குறிக்கோளாகும் - என்றார். (ச-30)

# ஈச்சந்தீவில் முதியோர் பராமரிப்பு நிலையம்

கிண்ணியா, ஏப்.2

ஆலங்கேணி ஈச்சந்தீவில் முதியோர் பராமரிப்பு நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈச்சந்தீவு விநாயகர் முதியோர் சங்கம் என்ற பெயரில் இயங்கி வரும் இந்தச் சங்கத்தில் சுமார் 65 முதியவர்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த முதியோர் சங்கம் சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் கிண்ணியா பிரதேச செயலகத்தினால் மேற்பார்வை செய்யப்பட்டு வருகின்றது. இந்த முதியோர் இல்லத்தில் 46 பெண்களும், 19 ஆண்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

கிண்ணியாவில் இயங்கி வரும் முதலாவது முதியோர் பராமரிப்பு நிலையம் இதுவாகும். பகல் நேர பராமரிப்பு நிலையமாக இயங்கிவரும் இந்த நிலையத்துக்கு முதற் கட்ட நிதியாக ரூபா 25 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ச)

# கழிவுநீர் வாய்க்காலுக்கு அருகில் மாட்டின் எலும்புகள்

## சட்டநடவடிக்கை எடுக்க கோருகின்றனர் மக்கள்

சாய்ந்தமருது பழைய வைத்தியசாலை வீதியில் உள்ள கழிவு நீர் வாய்க்காலுக்கு அருகில் செல்லும் வீதிக்கு மத்தியிலும் ஓரங்களிலும் மாட்டின் கழிவுகளுடன் கூடிய எலும்புகள் வீசப்பட்டுள்ளதால் பிரதேசவாசிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நூற்றுக்கணக்கான பாதசாரிகளும் வாகனங்களும் நாளாந்தம் பயணம் செய்யும் இந்த வீதியில் இந்தக் கழிவுகள் வீசப்படுவதனால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான நாகரிகமற்ற செயற்பாடுகள் திருட்டுத் தனமாக வீடுகளில் மாடுகளை அறுப்பவர்களாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய நாகரிகமற்ற செயற்பாடுகளைச் செய்கின்றவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க கல்முனை மாநகர சபையும், பொலிஸாரும் முன்வர வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.



வீதியில் வீசப்பட்ட மாட்டு எலும்புகள்.

மாநகர சபைக் கழிவுகளை சேகரிப்பதற்காக கழிவுகள் அதிகம் சேரும் இடங்களை இனங்கண்டு விசேட நடைமுறையின் ஊடாக தினமும் அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# ரூ.10 கோடி செலவில் காப்பெற் வீதி அமைப்பு

கிண்ணியா, ஏப்.2

தோப்பூரில் 10 கோடி ரூபா செலவில் காப்பெற் வீதி ஒன்றை நிர்மாணிப்பதற்கான வேலைத் திட்டத்தை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 1.2 கிலோமீற்றர் நீளமான தோப்பூர் சென்றல் வீதியே இவ்வாறு காப்பெற் வீதியாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எச்.ஹரீஸ், உதவித் தவிசாளர் ஹாஜா முகையதீன், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலர் முஹம்மது சனூஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிர்மாணப் பணி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



விபத்துக்குள்ளாகி மோசமாகச் சேதமடைந்த கார்

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்தில் சிக்கியது கார்

களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செட்டிப்பாளையம் பிரதான வீதியில், முருகன் கோயிலுக்கு முன்பாக நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை விபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் மட்டக்களப்பில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள முருகன் கோயில் கட்டடத்தில் மோதுண்டதால் விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்த சாரதி உட்பட பயணிகளுக்கு எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

திருமதி அருளம்மா சண்முகநாதன்



மலர்வு 16★06★1924

உதிர்வு 03★03★2014

இணையில்லாத துணைவியாய்
எண்மக்களின் தாயாகி,
எளிமையின் உருவமாய்,
பண்பான மாமியாய்,
பாசத்தின் உறைவிடமாய்
அன்பான பேர்த்தியாய்
அடக்கத்தின் இலக்கணமாய்
பூட்டர்களின் பூட்டியாய்

பூமியிலே வாழ்ந்த எம் தெய்வமே!
உள்ளம் உருகி கண்ணீர் மல்கி நிற்கின்றோம்
ஓலமிட்ட எங்களது உள்ளக்குமுறல்கள் ஓயவில்லை இன்னும்
எங்களது நெஞ்சங்களில் நீங்காது என்றென்றும்
நிறைந்து நிற்கும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

கடந்த 03.03.2014 சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிரியைகள் இன்று (02.04.2014) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

39, நல்லூர் குறுக்குத்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
இராஜசிறி (பேரன்)

(46222)(3.6.4)



16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26.12.1942

உதிர்வு 30.03.1998

திதி: 02.04.2014

"வாழ்நாள் இறுதிவரை வாழ்ந்திருப்பீர் எம்மனதில்"

அமரர் சுப்பிரமணியம் இரத்தினராசா
(முன்னாள் கல்விப்பணிப்பாளர் - வலயம் I)

(46204)(12.3.6)

"மாணிக்கம்",
கொக்குவில் மேற்கு.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கொழும்பில் ஹிருணிகாவுக்கே அதிகூடிய விருப்பு வாக்குகள்


ஹிருணிகா

கொழும்பு, ஏப்.2

மேல் மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்குகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட ஹிருணிகா பிரேமச்சந்திர பெற்றுள்ளார்.

இவருக்கு ஒரு லட்சத்து 39 ஆயிரத்து 34 விருப்பு வாக்குகள் கிடைத்துள்ளன.

அதே சமயம் கொழும்பு மாவட்டத்தில் ஐ.ம.சு.முன்னணியின் சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட ஜாதிக ஹெலஉறுமயவின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மாகாண அமைச்சருமான உதய கம்மன்பில ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 638 வாக்குகளையும் பெற்றுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிட்ட எஸ்.எம். மருக்கார் சுகி அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளார். அவருக்குக் கிடைத்த வாக்குகள் 67 ஆயிரத்து 243 அந்தக் கட்சியில் மஞ்சுசிறி அரங்கல 45,564 வாக்குகளும் முஜிபுர் ரஹ்மான் 42,126 வாக்குகளும் ஏ.பைரூஸ் ஹாஜி 32,242 வாக்குகளும் பெற்று வெற்றி பெற்றுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் ஜே.வி.பியின் சார்பில் கே.டி லால்காந்த 45,460 வாக்குகளைப் பெற்று முதலாம் இடத்தில் வெற்றி பெற்றுள்ளார். ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஊடகவியலாளர் சுசில் கிந்தல்பிட்டிய 32,918 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

### மனோவுக்கு 28,558 விருப்பு வாக்குகள்

கொழும்பு மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்ட ஜனநாயக மக்கள் முன்னணி 44,156 வாக்குகளைப் பெற்று இரண்டு ஆசனங்களைக் கைப்பற்றி இருந்தமை தெரிந்ததே.

அந்தக் கட்சியின் தலைவரான மனோகணேசன் 28,558 விருப்பு வாக்குகளையும்- கட்சியின் உப செயலாளரான சண். குகவரதன் 14,888 விருப்பு வாக்குகளையும் பெற்று மாகாண சபைக்குத் தெரிவாகியுள்ளனர். (ஓ)


வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் நடப்பட்ட முருங்கை மரத்திலிருந்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முருங்கைக் காய்களைப் பறிக்கின்றார். (ச)

# தனியார் வங்கியில் பணம் கொள்ளை

இனந்தெரியாத நால்வர் சீதுவையிலுள்ள தனியார் வங்கியொன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை 2.30 மணிக்கு கொள்ளையிட்டுள்ளனர். அந்த நால்வரும் முகத்தை மூடிதலைக்கவசம் அணிந்திருந்தனர் என்று பொலிஸார் கூறினர். இந்த கொள்ளைச் சம்பவம் 24 மணிநேரம் சேவையில் ஈடுபடும் கொமர்ஷல் வங்கியிலேயே இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு சேவையில் ஈடுபட்டிருந்த முகாமையாளரை அவர்கள் கத்தியால் குத்திவிட்டு வங்கியிலிருந்த 1000 ரூபா பெறுமதியான நாணயத்தாள்கள் 50 ஐ கொள்ளையிட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர். படுகாயமடைந்த முகாமையாளர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

# வைக்கோல் பொம்மையை போன்று செயற்படும் தேர்தல் ஆணையாளர்

## பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக அவர் செயற்படவில்லை என்கிறார் ஜனநாயகக் கட்சித் தலைவர் சரத் பொன்சேகா

கொழும்பு,ஏப்.2

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய ,அண்மைய தேர்தல்களில் வைக்கோல் பொம்மை போன்று செயற்பட்டுள்ளார் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.


சரத் பொன்சேகா

அண்மையில் இடம்பெற்ற தேர்தல் நடவடிக்கைகளின் போது, நாட்டின் தேர்தல்கள் ஆணையாளர் வைக்கோல் பொம்மை போன்று செயற்பட்டமையையே அவதானிக்க முடிந்தது என்று அவர் தெரிவித்தார்.

வாய்த் தர்க்கங்களை மாத்திரம் வெளிப்படுத்தி, பொறுப்புகளில் இருந்து அவர் நழுவ முனைகிறார். பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்ற வகையில் அவர் தமது கடமைகளை நிறைவேற்ற வில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார். (ச)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா சின்னையா



பிள்ளையார் கோயிலடி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லம்மா சின்னையா 31.03.2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்தார் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான சரவணை-கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னையா (முன்னாள் யாழ் மாநகரசபை இறைவரிப் பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், அன்னலட்சுமியின் (கனடா) பாசமிகு சகோதரியும், சிவஞானமூர்த்தியின் (கனடா) மைத்துனியும், நித்தியானந்தன்(ஜேர்மனி), சரவணபவன்(கனடா), தேவகி(துளசி), யசோதா(ஆசிரியை-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), கிருஷ்ணகுமாரி (போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்துமதி(ஜேர்மனி), ஜெகதீஸ்வரி(கனடா), காலஞ்சென்ற விஜயரத்தினம் மற்றும் முரளிதரன்(அதிபர், யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்), முருகதாஸ்(போதனா வைத்தியசாலை- யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிமலராஜி(நோர்வே), ஜனகன்(ஜேர்மனி), நளினி(ஜேர்மனி), விபுஷன்(பிரான்ஸ்), கோப்பாயில் வசிக்கும் பிரதீஸ், மதுரிக்கா, சதுர்ஜா, பிருந்திக்கா, திவியா, விதுஷா, பிரனேஸ், கனடாவில் வசிப்பவர்களான மயூரதன், லியானா, மிலா, யசிந், மருஷா, அஸ்வின், கனிஷ், அபிராமி, கஜிபன், மகிஷ், சுபானு ஆகியோரின் அன்புப் பாட்டியும், இளங்கோ (நோர்வே), பாரதி (நோர்வே), ராகுல்(ஜேர்மனி), அனுஜா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியும், கனடாவில் வசிப்பவர்களான அனுராதா- பவானந்தன், அனுகீதா- புவிதரன், அனுபாமா-ரவீந்திரன், வித்தியா ஆகியோரின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.04.2014) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிள்ளையார் கோயிலடி,**
**கோப்பாய் மத்தி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

(46317)(3.6.4)

# தேர்தலில் வாக்களிப்பதற்கு தவறிய 19,76,816 வாக்காளர்

## 1,61,011 நிராகரிக்கப்பட்ட வாக்குகள்

கொழும்பு,ஏப்.2

மேல் மற்றும் தென் மாகாண சபைக்காக கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற தேர்தலில் மொத்தமாக 19 லட்சத்து 76 ஆயிரத்து 816 பேர் வாக்களிக்கத் தவறிவிட்டனர். இது மொத்த வாக்காளர்களில் 33 சத வீதத்துக்கும் கூடுதலாகும்.

மேல் மாகாணத்தில் 13 லட்சத்து 55 ஆயிரத்து 308 பேரும், தென் மாகாணத்தில் 6 லட்சத்து 21 ஆயிரத்து 508 பேரும் இவ்வாறு வாக்களிப்பதற்குத் தவறியிருக்கின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் 5 லட்சத்து 31 ஆயிரத்து 546 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 5 லட்சத்து 44 ஆயிரத்து 411 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 2 லட்சத்து 79 ஆயிரத்து 351 பேரும், காலி மாவட்டத்தில் 2 லட்சத்து 78 ஆயிரத்து 857 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 2 லட்சத்து 2 ஆயிரத்து 384 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1 லட்சத்து 52 ஆயிரத்து 716 பேரும் வாக்களிக்கத் தவறியுள்ளனர். இதே வேளை நடைபெற்று முடிந்த மேல் மற்றும் தென் ஆகிய இரண்டு மாகாண சபைத் தேர்தலில் வாக்களித்தவர்களில் 1 லட்சத்து 61 ஆயிரத்து 11 பேர் அளித்த வாக்குகள் நிராகரிக்கப்பட் டுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் வாக்களித்தவர்களின் 1 லட்சத்து 13 ஆயிரத்து 285 வாக்குகளும், தென் மாகாணத்தில் வாக்களித்தவர்களின் 47 ஆயிரத்து 726 வாக்குகளும் இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் 43 ஆயிரத்து 762 வாக்குகளும், கம்பஹா மாவட்டத்தில் 40 ஆயிரத்து 713 வாக்குகளும், களுத்துறை மாவட்டத்தில் 28 ஆயிரத்து 810 வாக்குகளும், காலி மாவட்டத்தில் 21 ஆயிரத்து 135 வாக்குகளும், மாத்தறை மாவட்டத்தில் 15 ஆயிரத்து 712 வாக்குகளும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 10 ஆயிரத்து 879 வாக்குகளும், வாக்காளர்கள் வாக்களித்ததில் ஏற்பட்ட தவறுகளினால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன என்று தேர்தல் செயலகம் குறிப்பிட்டுள்ளது. (ச)

# மரண அறிவித்தல்

## கந்தன் முத்துவேலு



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் முத்துவேலு 31.03..2014 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2014) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துரைவீதி,**
**இணுவில்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**மு.சற்குணநாதன்.**

(2.6.3)(46318)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு, கிழக்கை முன்னிறுத்தி புதுவகைச் சித்தாந்தப் போக்கா...?

கிழக்கில் பொது மக்களின் வீடுகளுக்குள் இராணுவத்தினர் திடீர் திடீரெனப் புகுந்து தேடுதல்களை நடத்துகின்றனர். அங்கு விசாரணை என்ற பேரில் நீண்ட நேரமாக மக்களைத் தடுத்து வைத்திருக்கும் சம்பவங்கள் கிழக்கில் அதிகரித்து வருகின்றன. தமிழ் மக்களைப் பதற்ற நிலையில் வைத்திருப்பதற்கான மறைமுகமான நடவடிக்கை இதுவாகும்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தமது பிரதேச மக்களின் இப்போதைய நிலையை மேற்போந்தவாறு வெளிப்படுத்தி உள்ளார்.

வடக்கில் அளவுக்கு அதிக எண்ணிக்கையான படையினரை நிலைநிறுத்தி இருப்பதனை, அனைத்துலகத்துக்கு நியாயப்படுத்துவதற் காகவும்-

விடுதலைப் புலிகள் மீண்டும் இங்கு புத்துயிர் பெறுவதாக, தேடுதல்களை நடத்தி வருவதனை நியாயப்படுத்துவதற்காகவும் , வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் சுற்றி வளைப்புகளும், திடீர்ச் சோதனைகளும் நடத்தப்படுகின்றன.

அந்த வகை சார்ந்தே கிழக்கிலும் திடீர் சுற்றி வளைப்புகள்,வீட்டுக்கு வீடு சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டி உள்ளார்.

கிழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொது மக்களுடன் சந்திப்புக்களை நடத்திச் சென்ற பின்னர், படையினர் அங்கு சென்று மக்களிடம் விசாரணை நடத்துகிறார்கள் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வெளிப்படுத்தி உள்ளார்; குற்றஞ்சாட்டி உள்ளார்.

வடக்கில், திடீர்ச் சோதனைகள், சுற்றி வளைப்புகள், தேடுதல்கள், இரவு நேரக் கைதுகள் போர்க்காலம் போன்று கட்டவிழ்க்கப்பட்ட கையோடு, கிழக்கிலும், சமகாலத்தில் அவை களமிறக்கப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், அரசுக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட கையோடு, அல்லது அதனை அண்டி முன்னரும் பின்னருமாக -

வடக்கிலும் கிழக்கிலும், போர்க் காலம் போன்று அப்போதைய போக்குகளை ஒத்த பலவகை சார்ந்த நடவடிக்கைகள், மேலோட்டமாகப் புலப்படாத வகையிலும், மனப் பாதிப்புகளை உண்டுபண்ணும் விதத்திலும் அதிகாரத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

மிகக் குறிப்பாக, கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரிப்பதும், இராணுவ முகாம்களைப் பலப்படுத்துவதும் அரசின் இரட்டை இலைச் செயற்பாடுகளாக ஒன்றித்து உயர்ந்து நிற்கின்றன.

வடக்கில் , வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் கரையோரங்களில், ஏற்கெனவே அமைந்திருந்த கடற்படையினரின் சோதனைச் சாவடிகளில் இப்போது இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு, தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் விவரங்கள், அவர்கள் பயன்படுத்தும் படகுகளின் விவரங்கள் இராணுவத்தினரால் திரட்டப்பட்டு வருகின்றன. இந்த ஏற்பாடுகள் அல்லது நடைமுறைகள் அப்பகுதி மக்கள் மத்தியில் அச்சத்தை தோற்றுவித்திருக்கின்றன.

கிளிநொச்சியில் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் மற்றும் தேடுதல் நடவடிக்கைகள், இனிமேல் வடக்கில் எந்த வகையில் பூதாகரமாக உருவெடுக்குமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்றிவரும் சம காலத்தில் -

கிழக்கிலும் தமிழ் மக்கள் மத்தியில் பதற்றத்தையும் பாதிப்புகளையும் உண்டாக்கும் போக்கு மேல் எழுகிறது.

ஜெனிவாத் தீர்மானம் போன்றவை, ஆட்சித் தலைமைத்துவங்களுக்குத் தலையிடியைத் தரும்போது, தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் இவற்றை எதிர்பார்க்க வேண்டும்; அனுபவித்தாக வேண்டும் என்ற “சித்தாந்தம்” இலங்கை அரசியலின் அழிக்க ஒண்ணாத, 'பிசின்' போன்று ஒட்டிப் பிடித்திருக்கும் நிலை தொடரும் என்று எதிர்பார்க்கலாம். ஆள்வோரின் இயல்பு அதனையே அழுத்தித்தொட்டுக் காட்டுகிறது.

# இந்தியா-பாகிஸ்தான் நெருக்கம் நிலைக்குமா?

சேரலாதன்



இந்தியாவையும், பாகிஸ்தானையும் ஒரே அணியில் இணைத்த மேலுமொரு பெருமை இலங்கைக்குக் கிடைத்துள்ளது. இந்தியாவின் இணைந்த பகுதியாகக் காணப்பட்ட பாகிஸ்தான் ஆங்கிலேய ஆட்சியாளரால் தனி நாடு என்னும் அந்தஸ்தைப் பெற்ற நாளிலிருந்து இந்தியாவும் பாகிஸ்தானும் விரோதிகளாகவே செயற்பட்டு வந்துள்ளன. இந்தியா இந்துக்களைப் பெரும்பான்மையாகக் கொண்டதொரு நாடு. பாகிஸ்தானோ முஸ்லிம் மக்களையே முழுவதுமாகக் கொண்டுள்ளது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து சென்றதற்கு இந்து, முஸ்லிம் களுக்கு இடையில் அடிக்கடி இடம் பெற்று வந்த மதக் கலவரங்களே காரணமாக அமைந்தன. ஆங்கிலேயர் இந்தியாவுக்குச் சுதந்திரத்தை வழங்க முன்வந்த போது நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட முகம்மது அலி ஜின்னா பாகிஸ்தான் என்ற பெயரில் நாடொன்றைப் பிரித்துப் பெற்றுக் கொண்டார். ஆனால் இந்த இரு நாடுகளும் ஒற்றுமையாக இருந்ததாகச் சரித்திரம் கிடையாது. போர்கள் தான் அடிக்கடி இடம்பெற்று முடிந்துள்ளன. இவற்றுள் 1971 இல் இடம்பெற்ற வங்காளதேசத்தின் பிரிவினைக்கான போர், கார்கில் போர் என்பன நினைவில் நிற்கின்றன. மேலும் மத விடயத்தில் மட்டுமல்ல விளையாட்டு, அரசியல் என்பவற்றிலும் இந்த இரு நாடுகளும் முறுகல் நிலையைப் பின்பற்றி வருகின்றன.

ஆனால் இலங்கையுடன் நெருக்கமான பிணைப்புக்களைக் கொண்டிருப்பதில் இந்த இரு நாடுகளும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்பதைப் பார்க்கும் போது ஒரு புறம் வியப்பும் மறுபுறம் எரிச்சலும் ஏற்படுகின்றன. அதிலும் இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது தமிழர்களுக்கு எதிராக இந்த நாடுகள் முழு அளவில் ஈடுபட் டதை எளிதில் மறக்க முடியாது. இந்தப் போரின்போது குற்றங்கள் இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையில் இவ்விரு நாடுகளும் அதற்குப் பொறுப்புக் கூறித்தான் ஆக வேண்டும்.

ஜெனிவாவில் அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபோது அதனைப் படித்துப் பார்க்காமலேயே தமது எதிர்ப்பைத் தெரிவித்த நாடுகளில் பாகிஸ்தானும் அடங்கியிருந்தது. வழக்கம் போலவே அமெரிக்க எதிர்ப்புக் கொள்கைகளையுடைய சீனா, ரஷ்யா, கியூபா, வியட்நாம் ஆகிய நாடுகளுடன் பாகிஸ்தானும் தன்னை இணைத்துக் கொண்டது. அந்த வேளையில் இந்தியா நயவஞ்சகமான வகையில் தனது எண்ணத்தை வெளிப்படுத்தாது மதில் மேல் பூனை போன்று பதுங்கியிருந்தது. ஆனால் பிரேரணையின் வாசகங்களில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித் தமை இந்தியா ஆதரவு நல்கும் என்ற நம்பிக்கையை அமெரிக்காவுக்கு ஏற்படுத்தியிருந்தது. பாகிஸ்தான் ஒருபடி மேலே போய் உப்புச்சப்பில்லாத காரணங்களைக் கூறி பிரேரணையைத் தாமதப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டது. இந்த வேளையில்தான் இந்தியாவின் முகமூடி கிழிந்தது. பிரேரணை நிறைவேற்றப்படுவதில் அந்த நாட்டுக்கு உடன்பாடில்லை என்பது தெட்டத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. இறுதியில் வாக்கெடுப்பு நடந்தபோது அதில் கலந்து கொள்ளாது நடுநிலை வகித்தது. அதனால் இந்தியாவின் சாயமும் வெளுத்தது.

> இன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் வரலாறு காணாத இன்னல் களை அனுபவிப்பதற்கு இந்தியாவே காரணமாக விளங்குகின்றது. அங்கேயும் போக முடியாமல் இங்கேயும் வர முடியாமல் இந்த மக்கள் தவிக்கும் நிலைமையை இந்தியாதான் உருவாக்கியது.

இன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் வரலாறு காணாத இன்னல்களை அனுபவிப்பதற்கு இந்தியாவே காரணமாக விளங்குகின்றது. அங்கேயும் போக முடியாமல் இங்கேயும் வர முடியாமல் இந்த மக்கள் தவிக்கும் நிலைமையை இந்தியாதான் உருவாக்கியது. ஆரம்பத்தில் இலங்கை அரசுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தியாவில் வைத்து இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்குப் பயிற்சிகள் வழங்கி ஆயுதங்களையும் தந்தது இந்தியாதான். இந்த இளைஞர்களின் மனங்களில் நம்பிக்கைகளைத் தூவிய இந்தியா, அவர்களை வேரோடு கருவறுப்பதற்கும் இறுதியில் முன்னின்றது- அப்போது பாகிஸ்தான், சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் வேறு பல நாடுகளும் இணைந்து இலங்கைக்குத் தேவையான உதவிகளை வழங்கின. இதன் காரணமாகவே விடுதலைப் புலிகளின் 30 ஆண்டு காலப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. இலங்கைத் தமிழர்களின் கனவுகளும் கலைந்து போயின.

ஆனால் விடுதலைப் புலிகள் ஒழிக்கப்பட்டாலும் தமிழர்கள் மீதான காழ்ப்புணர்வுகள் சிறிதும் குறைந்து விடவில்லை என்பது போருக்குப் பிந்திய சம்பவங்கள் மூலமாகத் தெரிகின்றது.

இறுதிப் போரின் போது போரை ஊக்குவித்த சக்திகள் இங்கு வாழும் தமிழ் மக்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதும் தற்போது வெட்ட வெளிச்சமாகியுள்ளன.

குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் நீதிமன்றத்தின் முன்தோன்றித் தாம் குற்றமற்றவர் என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்து தம் மீதான குற்றச் சாட்டுக் களிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதே நேர்மையானதும், நீதியானதுமான செயலாகும்.

இதைவிடுத்து குற்றஞ்சாட்டப்பட்ட வரைப் பாதுகாப்பதற்கு முனைவதும், அவர் மீதான விசாரணைகளைக் குழப்புவதும் எவ்வகையில் நியாயமாக முடியும் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஜெனிவாத் தீர்மானம் இங்கு இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச் செயல் கள் தொடர்பாக விசாரணைகள் இடம் பெற வேண்டுமென்றே கூறுகின்றது. இந்த விசாரணைகள் நியாயமான வகையில் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதற்கு கூட எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் பயங்கரவாதத்தின் ஊற்றுக்கள் என அழைக்கப்படும் ஒரு நாடாகும். இங்கு பயங்கரவாதச் சம்பவங்கள் இடம்பெறாத நாளே இல்லையெனக் கூறலாம். மேலும், இங்கு நிலை கொண்டுள்ள பயங்கரவாதக் குழுக்கள் உலகம் பூராகவும் வன்செயல்களில் ஈடுபட்டு வருகின்றமை உலகறிந்த விடயமாகும்.

இந்த நிலையில் இந்த நாடு பயங்கரவாதத்தை ஒடுக்கவெனக் கூறி அமெரிக்காவிடமிருந்து பெருந்தொகை நிதியை ஆண்டுதோறும் பெற்று வருகின்றது. ஆனால் அங்கு உருப்படியாக எதுவுமே இடம்பெறுவதாகத் தெரியவில்லை. ஒசாமா பின்லேடன் பாகிஸ்தான் நாட்டுக்குள் வைத்து அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டமை இதற்கொரு சான்றாகும்.

இந்தநிலையில் இந்தியாவும், பாகிஸ்தானும் கை கோர்த்துக் கொண்டு இலங்கைக்கு உதவி செய்யப் புறப்பட்டமையானது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில் எதிர்காலத்தில் அவர்களை எதிர்கொள்ளப் போகும் அவலங்களுக்குக் கட்டியம் கூறுகின்றது.

ஆனால் இலங்கை விடயத்தில் இணைந்திருக்கும் இவர்களின் உண்மைச் சொரூபம் விரைவில் தெரியவரத்தான் போகின்றது. ஜெனிவாவில் பாகிஸ்தானின் பின்னால் ஒட்டிக் கொண்டிருந்த இந்தியா இனியும் தன்னையொரு வல்லரசு என அழைப்ப தற்கான தார்மீக உரிமையை இழந்து வெட்கம் கெட்ட நிலையில் தலை குனிந்து நிற்கின்றது. அது சுமந்து நிற்கும் கடும் அவமானம் எளிதில் களைய முடியாதது என்பதுதான் உண்மை.

# மூளை விருத்தி குன்றிய குழந்தைகள் விழிப்பாயிருங்கள் குறித்து



*இன்று (ஏப்ரல் 2) மூளை விருத்தி குன்றிய குழந்தைகள் (Autism) நோய்க்கான ஐ.நா. விழிப்புணர்வு தினமாகும்.*

மருத்துவர்
கீதாஞ்சலி சத்தியதாஸ்,
*குழந்தை வைத்திய நிபுணர்,*
*யாழ். போதனா வைத்தியசாலை.*

ஆட்டிசம் (Autism) என்ற நோய் மூளையின் விருத்தி குன்றுதல் தொடர்பான ஒரு நோயாகும். இத்தகைய குழந்தைகளின் செயற்பாடு ஏனைய குழந்தையுடன் ஒப்பிடுகையில் வித்தியாசமானதாக இருக்கும். இந்தக் குறைபாடு குழந்தை பிறக்கும்போதே ஏற்படும் ஒன்றாகும். எனினும், குழந்தை வளர்ந்து வரும்போது தான் அதன் அறிகுறிகள் வெளியே தெரியவரும். ஆட்டிசம் உள்ள சகல குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியான குணங்குறிகள் இருக்கமாட்டாது. ஒவ்வொரு குழந்தையும் வெவ்வேறு தன்மைகளை வெளிப்படுத்தும்.

ஆரம்ப காலத்திலேயே இந்த நோயின் அறிகுறிகளைக் கண்டறிந்து உரிய சிகிச்சை முறைகளை கையாளுவதன் மூலம் இந்த நோயைக் கட்டுப்படுத்தலாம். இவர்களுக்குப் பேசும் திறன், சமூக செயற்பாடுகள் போன்றவற்றில் குறைபாடுகள் இருக்கலாம். விளையாடுவதில் பின்னடைவு. மீண்டும் மீண்டும் ஒரு செயலைச் செய்தல் போன்ற இயல்புகளும் காணப்படும்.

சாதாரணமாக ஒரு குழந்தை, மூன்று மாத அளவில் தாயின் முகத்தைப் பார்த்து கதை சொல்ல ஆரம்பிக்கும். ஏதேனும் ஒரு பொருளைக் காட்ட விரும்பும்போது பராமரிப்பவருடன் சேர்ந்து அதனைச் சுட்டிக்காட்டும் இயல்பு சாதாரணமான குழந்தைகளுக்கு 6-12 மாத அளவில் ஏற்படுகின்றது.

ஆட்டிசம் உள்ள குழந்தைகளிடம் சேர்ந்து செய்யும் ஆற்றல் காணப்படாது. இவர்களுக்கு சமூக இசைவாக்கத்துடனான பிரச்சினைகள் காணப்படும். உதாரணமாக

★ மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடுவதில் ஆர்வமின்மை.
★ சகோதர சகோதரிகளுடன் முரண் படுதல்.
★ உதவி தேவைப்படும் போது மற்றவர்களை அழையாது இருத்தல்.
★ பெற்றோர் வெளியே செல்லும் போது ஏற்படும் பிரிவை உணராதிருத்தல்.
★ பெற்றோரின் அரவணைப்பை நிராகரித்தல்.

மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாமையானது, ஒரு முக்கியமான அறிகுறி ஆகும். அதாவது சுற்றுச் சூழலை உணராது இருத்தல், உரையாடும் பொழுது கண்களைப் பார்ப்பதைத் தவிர்த்தல் ஒரு முக்கிய அறிகுறியாகும்.

சில தொழிற்பாடுகளை மீண்டும் மீண்டும் செய்ய எத்தனித்தல், தன்னைத் தானே சுற்றுதல், கண்களுக்கு முன்னால் விரல்களை அசைத்தல், காற்றாடியை முறைத்துப் பார்த்தல், விளையாட்டுப் பொருள்களை வரிசையாக அடுக்குதல், தொடர்ச்சியாக மின்சார ஆளியைப் போடுதலும் பின் நிறுத்தலும் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகள் ஆகும்.

உணவு தவிர்ந்த ஏனைய பொருள்களை உண்ணுதல், சாதாரண பிள்ளைகளைப் போல விளையாட்டுப் பொருள்களைப் பயன்படுத்தாமை என்பன தொழிற்பாட்டில் ஏற்படும் பிரச்சினைகளாகும்.

ஆட்டிசம் உள்ள குழந்தைகளுக்கு இயக்கம் தொடர்பான பிரச்சினைகளும் உண்டு. உதாரணமாக நுனிக்காலில் நடத்தல், நுணுக்கமான வேலைகளைச் செய்ய முடியாதிருத்தல், ஆழம், உயரம், பள்ளம் போன்வற்றின் ஆபத்தை உணராது இருத்தல் என்பவை அவற்றின் சிலவாகும்.

இவர்களுக்கு உணர்ச்சி தொடர்பான பிரச்சினைகளும் ஏற்படலாம். புதிய அனுபவங்களின் போதும், அவர்களது நாளாந்த செயற்பாட்டில் மாற்றம் ஏற்படும் போதும் கோபம் ஏற்படலாம். பெரிய சத்தம், இசை போன்றவற்றைச் சகிக்க முடியாமை. உடைமாற்றுவதிலும் புதிய உடை அணிவிப்பதிலும் சிரமம் ஏற்படுத்தல் போன்றவை உணர்ச்சி தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகளாகும்.

இந்தக் குழந்தைகளிடம் ஆபத்து வரும் போது தம்மைப் பாதுகாக்கும் திறன் இல்லாமற் போகின்றது. தமது உடலில் தாமே காயங்களை ஏற்படுத்தல். உதாரணமாக தன்னைத் தானே கடித்தல், தலை மயிரைப் பிடுங்குதல், காயம் ஏற்படும் வரை சொறிதல் போன்றவையாகும்.

மேற்குறிப்பிட்ட சமூக இசைவாக்கம், தொடர்பாடல், இயக்கம், உணர்ச்சி போன்றவற்றில் மேற்குறிப்பிட்ட அறிகுறிகள் இருப்பின் உடனடியாக குழந்தை நல வைத்தியரை நாட வேண்டும். இந்தக் குழந்தை வளரும்போது தானாகச் சரியாகிவிடும் என்று நினைக்க வேண்டாம்.

குழந்தைக்கு ஏற்பட்டுள்ளது இந்த நோய்தான் என்று தெரிந்ததும், பெற்றோரின் அடுத்த கேள்வி என்ன செய்வது என்பதே. இதற்குத் தெளிவான பதிலை எவராலும் கூற முடியாது. இம் மாதிரியான குழந்தைகளை நாளைய நற்பிரஜைகள் ஆக்கும் பொறுப்பு பெற்றோர்களுடையது. பெற்றோர்களும், ஆட்டிசம் நோய் பற்றி நன்கு அறிந்த நபர்களுடன் (Therapist) இணைந்து உங்கள் குழந்தைகளை நற்பிரஜைகள் ஆக்கலாம்.

குழந்தையின் திறமைகளை, தேவைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஏனையோரை விட பெற்றோருக்கே அதிகமாகத் தெரியும். எனவே பெற்றோர் அவதானமாக இருத்தல் வேண்டும். குழந்தைகளைக் கையாளும் முறைகள், அவர்களு டன் கதைக்கும் முறைகள், அவர்களை அவர்களது உலகத்திலிருந்து வெளிக்கொண்டு வருதல் போன்ற முறைகளை படிப்படியாக செய்ய வேண்டும். இதை ஆட்டிசம் பற்றி நன்கு அறிந்தவர்களுடன் சேர்ந்து செய்யலாம்.

ஆரம்ப காலத்தில் இந்த நோய் பற்றி பெற்றோர், ஆசிரியரிடம் விளக்கம் இல்லாதிருந்தது. தற்போது இந்த நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டு வருவதோடு, அதற்கான சிகிச்சை முறைகளும் கண்டறியப்பட் டுள்ளன.

ஆயினும் இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு இயன் மருத்துவ சேவையின் குறைபாடுகள் யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. வெகு விரைவில் நாடளாவிய ரீதியில் இதற்கு சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்படும்.

> “ சில தொழிற்பாடுகளை மீண்டும் மீண்டும் செய்ய எத்தனித்தல், தன்னைத் தானே சுற்றுதல், கண்களுக்கு முன்னால் விரல்களை அசைத்தல், காற்றாடியை முறைத்துப் பார்த்தல், விளையாட்டுப் பொருள்களை வரிசையாக அடுக்குதல், தொடர்ச்சியாக மின்சார ஆளியைப் போடுதலும் பின் நிறுத்தலும் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகள் ஆகும்.



## யாழ்.நகரில் இன்று மாலை சில இடங்களில் நீலநிற விளக்குகள் ஒளிர விடப்படும்

### *மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த*

ஆட்டிசம் நோய் உலகளாவிய ரீதியில் மிகவும் முக்கியமானதொன்றாக கருதப்படுகின்றது. ஏனெனில் 100 சிறுவர்களில் ஒருவர் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய் தொடர்பான விழிப்புணர்வு உலகளாவிய ரீதியில் முன்னேற்றமான நிலையில் காணப்பட்ட போதிலும் இலங்கையில் இது வரை காலமும் அது குறைவாகவே இருந்தது. ஆயினும் தற்போது இந்த நோய் பற்றிய அறிவு மக்களிடையே அதிகரித்து வருகின்றது.

இம்முறை யாழ்ப்பாணத்தில் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பல செயற்பாடுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இந்த நோய் பற்றிய மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக யாழ்.நகரத்தின் சில இடங்களில் இன்று புதன்கிழமை மாலை 6 மணியளவில் நீல நிற விளக்குகள் ஒளிர்விக்கப்படும். யாழ்.மருத்துவபீடம், யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் கார்கில்ஸ் சதுக்கம் போன்ற இடங்கள் இவ்வகையில் ஒளிர்விக்கப்படும்.

மேலும், இந்த நோய் பற்றிய விழிப்புணர்வுச் சுவரொட்டிகள் யாழ்.போதனா வைத்தியசாலையிலும், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் மற்றும் பல இடங்களிலும் காட்சிப்படுத்தப்படும். இன்று இந்த நோய் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் நடத்தப்படுகின்றது.

இந்த நோயை உரிய நேரத்தில் கண்டு பிடித்து முறையான சிகிச்சையை வழங்குவதன் மூலம் கட்டுப்படுத்த முடியும். இந்த வகையில் சிகிச்சை வழங்குவதற்கான முயற்சிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப் படுகின்றன.

***யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம்.***



## தவக்காலச் சிந்தனை



### உழைக்காதவன் உண்ணத் தகுதியற்றவன்

மனித வாழ்வில் உயர்வு என்பது அவனது உழைப்பின் ஊக்கத்திலும், தன்மையிலும், தங்கியுள்ளது. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, கடின உழைப்பினால் சம்பாதிக்கும் செல்வமே நிலைத்து நின்று உதவும். அதேபோன்று ஆன்மிக வளத்தைப் பெற சீரிய நெறி முறையிலான நேரிய வழிகள் பலம் சேர்க்கின்றன. "உழைக்காதவன் உண்பதற்கு தகுதியற்றவன்" என்கிறது வேதாகமம்.

லஞ்சம், திருட்டு, மோசடி, கொள்ளை, வழிப்பறி, ஏமாற்று உத்திகள் மலிந்து விட்ட இந்தக் காலத்தில் நாம் சம்பாதிக்கும் பணம் நேர்வழி சார்ந்ததா? இறைவனுக்கு ஏற்புடைய முறையிலானதா? என்று சிந்திக்க வேண்டும்.

வியர்வை சிந்தி உழைத்து உருவாக்கி வாழ்ந்துவந்த எத்தனை இல்லங்கள் நாட்டின் அசாதாரண நிலையால் அழிவுற்றன. உடைமைகள் அபகரிக்கப்பட்டன. எஞ்சியிருந்த எத்தனை சொத்துக்கள் பலராலும் திருடப்பட்டன. தனியார் சொத்துக்களையும் பொது உடைமைகளையும் சேதப்படுத்தி திருடிச் செல்லும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. போலியான பொருள் விற்பனை பண மோசடிகள், இயற்கை வளங்களின் துஷ்பிரயோகம் என குறுக்கு வழி உழைப்புக்கள் மலிந்து விட்டன.

இவற்றைச் செய்பவர்கள் ஒன்றை உருவாக்கிய களைப்பையோ அவற்றின் பெறுமதியையோ உணராதவர்கள் என்றே சொல்ல வேண்டும். சட்டமும் திட்டமும் மட்டும் திருட்டுப் பேர் வழிகளைத் திருத்திவிடாது. தத்தமது உடைமைகளுக்கு இவ்வாறு பாதிப்பு ஏற்பட்டால் உண்டாகும் தாக்கத்தை புரிந்து கொள்ளும் சுய உணர்வே திருட்டை நிறுத்த வழிகோலும். நேரிய வழியில் சம்பாதித்து தத்தமது உழைப்பில் உண்ணத் தகுதி பெற்றவர்களாக இறைவழியில் நடப்போம்.

***யே.சுபீட்சன், கொழும்புத்துறை***

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



தருபவர்: வித்யா



**மேடம்**: வெளிவட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உறவினர், நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். அரசாங்க விஷயம் தாமதமாகும். முக்கிய கோப்புகளைக் கவனமாக கையாளுங் கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும்.



**இடபம்**: பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்திலுள்ள வர்களிடம் மனம் விட்டுப்பேசுவீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.



**மிதுனம்**:தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதியைப் பெறுவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**கடகம்**: மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர் களால் மன நிம்மதி கிடைக்கும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச காரியங்களிலும் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும். வேலையாட்களின் ஆதரவு கிடைக்கும்.



**சிங்கம்**:பழைய கசப்பான சம்பவங்களைப் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. சிறுசிறு ஏமாற்றங்கள் வந்து செல்லும். விமர்சனங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம்.



**கன்னி**: சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.



**துலாம்**: நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகை யுண்டு. வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.



**விருச்சிகம்**:சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்க ளெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.



**தனுசு**: வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர் கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**மகரம்**: திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளைப் பொறுப்பாக வளர்க்க வேண்டும் என்று எண்ணு வீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**கும்பம்**: எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத் தில் நாட்டம் அதிகரிக்கும்.



**மீனம்**: எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடிய வில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசி னாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள்.

## நாளை

**பங்குனி-20 வியாழக்கிழமை | 03.04.2014**

திதி: சதுர்த்தி மு.இ.11.10 வரை
நட்சத்திரம்:கார்த்திகை
பி.இ.03.10 வரை

சுபநேரம்: 07.40-09.10 வரை
இராகுகாலம்:.01.40-03.10 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...




## மனம் குவிதல்

மனம் குவிதலே அறிவின் பயன். மனம் குவியாமல் எதுவும் செய்ய முடியாது. சாதாரண மனிதன் தனது எண்ண ஆற்றலில் தொண் ணூறு சதவீதத்தை வீணாக்குகி றான். ஆகையால், அவன் அடிக்கடி தவறு செய்கிறான். பயிற்சி பெற்ற மனமோ, மனிதனோ தவறு செய்வதில்லை. மனம் குவிந்து உள்நோக்கு ஏற்படும் போது புலன்கள் எல்லாம் நமது பணியாளர்களாகி விடுகின்றன. நமது எஜமானர்களாக இருப்பதில்லை. கிரேக்கர்களின் மனம் வெளியில் குவிந்தது. அதன் பலன்களை, இலக் கியம் முதலியவற்றில் தேர்ச்சி. இந்துக் களோ தங்கள் மனத்தை உள்ளே குவித்தார்கள். எளிதில் கண்டறியமுடி யாத ஆன்மாவைப் பார்த்தார்கள். யோகத்தை வளர்த்தார்கள். யோகம் என்பது புலனை அடக்குதல்; மனத்தை அடக்குதல்; சிந்தையை அடக்குதல். அடங்கிக் கிடப்பதற்குப் பதிலாக அடக்கி வாழப் பயிற்சி பெறுவதே இத னால் பெறும் பயன். மனம் எனப்படுவது ஒன்றன் மேல் ஒன்றாக, அடுக்கடுக் காக உள்ளது எனலாம். ஒன்றன் பின் ஒன்றாகக் குறுக் கிடும் இந்த அடுக்கு களை எல்லாம் கடந்து இறை வனைக் காண்பதே எமது குறிக்கோள். யோகத்தின் முடிவும் இலட்சி யமும் ஆண்டவனை அறிவதே. இதற்குத் தொடர் நிலை அறிவுக்கு (Relative Kno wledge) அப்பால் செல்ல வேண் டும். புலன் களைக் கடக்க வேண்டும். உலகம் புலன் வசப்பட்டது, அந்நிலையில் ஆண்டவனின் குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. நிலை பேறான பரம்பொருளைக் காணாமல் உலகம் தூங்குகிறது. ஆண்டவனின் குழந்தைகள் அந்நிலையில் விழித் திருக் கின்றன. இந்தக் குழந்தைகளே ஆண்டவனின் தெய்வீகப் புதல் வர்கள். புலன்களை வெற்றி காண்பதற்கு உள்ள ஒரே வழி மெய்ப்பொருளைக் காண்பதே. அப்போதே நாம் நமது புலன்களை வெற்றி கொள்ள முடியும்.

மனத்தைக் குவிப்பது என்பது படிப் படியாக மனத்தைச் சிறு எல்லைக்குள் கட்டுப்படுத்துதல். இவ்வாறு மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எட்டு வழிகள் உள்ளன. முதல் வழி இயமம், அதாவது வெளிப் பொருள்களைத் தவிர்த்தல். ஒழுக்கக் கோட்பாடுகள் அனைத்தும் இதில் அடங்கும். உயிர்களுக்குத் தீமையை எண்ணாதே. தீமை செய்யாதே. பன் னிரண்டு ஆண்டுகள் எவ்வுயிருக்கும் தீமை செய்யாதிரு. அப்போது சிங்கங் களும் புலிகளும் உனக்குப் பணியும். உண்மையைப் பேசு. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றாலும் பன்னிரண்டு ஆண்டுகள் ஒருவன் உண்மையைக் கடைப்பிடித்து வந்தால் அவன் எண்ணியவை எல்லாம் நடைபெறும். எண்ணம், சொல், செயல் ஆகிய மூன் றிலும் தூய்மையுடன் இரு. தூய்மையே எல்லா மதங்களுக்கும் அடிப்படை. உடல் தூய்மை முதன்மை யானது. அடுத்த வழி நியமம். அதாவது மனம் வெளியில் அலையாமல் கட்டுப் படுத்துவது. பிறகு ஆசனம். அதாவது உட்காரும் முறை. ஆசன முறைகள் எண்பத்து நான்கு. தங்களுக்கு இயல் பானதே ஒவ்வொருவருக்கும் சிறந் தது. அதாவது சுலபமாக நீண்ட நேரம் எந்த ஆசன முறை யில் அமர்ந்திருக்க முடி யுமோ அதுவே சிறந்தது. அதற்கு அடுத்தது பிராணாயாமம், அதாவது மூச்சைக் கட்டுப்படுத்துவது. அடுத் தது பிரத்தியா காரம் – புலன்களை புறப் பொருள்க ளிலிருந்து திருப்புதல். இதன் பின்னர் தாரணை – அதாவது மனம் குவிதல். அதற் கடுத்து தியானம். [யோக முறையின் உயிர் நாடி இதுவே] முடிவில் சமாதி.

# சினிமாவாகிறது ரஜனி வாழ்க்கை!





சாதாரண பஸ் நடத்துநராக இருந்து சூப்பர் ஸ்டார் ரஜனி காந்த் என உச்சம் தொட்டவர் தான் சிவாஜி ராவ் கெய்க்வாட். அவரது வாழ்க்கை குறித்த புத்தகம் ஏற்கெனவே வெளியாகி யுள்ளது. தற்போது அவரது வாழ்க்கை தமிழ் மற்றும் ஹிந் தியில் திரைப்படமாகிறது.

தமிழில் 'நானே ரஜனிகாந்த், ஹிந்தியில் 'மை ஹோ ரஜனி காந்த்' என்ற பெயரிலும் தலைப் பிடப்பட்டுள்ளது. வர்ஷா புரொ டக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிப் பில் பைசல் சைப் என்பவர் இந் தத்திரைப்படத்தை இயக்குகிறார். ரஜனி தனது வாழ்க்கையைப் பஸ் நடத்துநராக தொடங்கியது முதல், சினிமாவில் சாதித்து, ஆன்மிகத்தில் ஈடுபட்டது வரை அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கி இந்தப் படம் தயாராகிறது.

இரு மொழிகளிலும் ஆதித்யா மேனன் ஹீரோவாக நடிக்கி றார். அவர் தமிழ், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிக ளில் வில்லனாக நடித்துக் கொண் டிருப்பவர். தமிழில் வில்லு, பில்லா, அசல் போன்ற படங்க ளில் நடித்துள்ளார்.

பஸ் நடத்துநராக இருந்து பின் சினிமாவுக்குள் நுழைந்தது. சூப்பர் ஸ்டாராக உருவெடுத் தது. ஆன்மிகத்தில் ஈடுபாடு காட்டியது என ரஜனியின் வாழ்க்கை முழுவதும் பதிவு செய்யப்பட உள்ளதாம்.

ரஜனி வேடத்தில் நடிப்பது மிக வும் பெருமையாகவும், மகிழ்ச்சி யாகவும் இருக்கிறது என்று கூறியிருக்கிறார் இந்தப்படத்தின் ஹீரோ ஆதித்யா மேனன்.

படக்குழுவினர் இந்தப் படத்தை சூப்பர் ஸ்டார் ரஜனிக்கு அர்ப் பணிக்கிறோம் என்று தெரிவித் துள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | | 5 | 7 | | | |
| | | 5 | 4 | | | | 2 | 8 |
| | | 7 | 9 | 8 | 6 | 1 | | 4 |
| | | 1 | 8 | | 9 | | 6 | |
| | | | | 6 | | | | |
| | 9 | | 3 | | 4 | 8 | | |
| 4 | | 2 | 6 | 9 | 3 | 5 | | |
| 6 | 5 | | | | 8 | 2 | | |
| | | | 5 | 1 | | | 3 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 8 | 2 | 9 | 3 | 4 | 6 | 7 |
| 3 | 2 | 9 | 6 | 4 | 7 | 1 | 8 | 5 |
| 6 | 4 | 7 | 5 | 8 | 1 | 3 | 2 | 9 |
| 2 | 7 | 6 | 3 | 5 | 4 | 9 | 1 | 8 |
| 8 | 9 | 5 | 1 | 6 | 2 | 7 | 4 | 3 |
| 1 | 3 | 4 | 8 | 7 | 9 | 2 | 5 | 6 |
| 9 | 6 | 1 | 7 | 2 | 5 | 8 | 3 | 4 |
| 4 | 8 | 2 | 9 | 3 | 6 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 3 | 4 | 1 | 8 | 6 | 9 | 2 |



# கோடையில் அதிகளவில் தண்ணீர் குடித்தால் உடலுக்கு நல்லது

கோடைகாலத்தில் நாள்தோறும் 5 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்று வைத்தியர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். கோடை காலத்தில் பெரியவர்கள் முதல் குழந்தைகள் வரை அனைவருக்கும் பல்வேறு உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்தச் சூழலில் ஏற்படும் அதிக வெப்பம், குழந்தைகளைப் பாதித்து உடலில் பலவித மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

அதேபோல் வயதானவர்களுக்கு உடலில் நீர்ச்சத்துக் குறைந்து, மயக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது.

உடலில் அதிகரிக்கும் வெப்பத்தால் நோய்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது.

இவற்றைத் தவிர்க்க தினமும் 4 முதல் 5 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும். இளநீர், மோர், பழச்சாறு போன்றவற்றைக் குடிக்க வேண்டும். குழந்தைகள் தினமும் 2 முதல் 3 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

உடலில் வெப்பம் அதிகமாகும்போது, இதயத்துக்குச் செல்லும் ரத்த ஓட்டம் பாதிக்கப்படும். சுத்தமான குடிதண்ணீரைக் குடிக்க வேண்டும். குழந்தைகளுக்கு நீர்ச்சத்துள்ள உணவுகளை அதிகளவில் கொடுக்க வேண்டும். சுகாதாரமாக இருக்க வேண்டும். சுத்தமில்லாமல் தயார் செய்யப்படும் உணவு வகைகளை வாங்கிக் கொடுக்கக் கூடாது. குழந்தைகளைத் தினமும் இரு முறை குளிக்க வைக்க வேண்டும்.





# பதற்றத்தைத் தடுக்க கோபத்தை குறையுங்கள்

உடல் நலம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமெனில், பதற்றத்தைக் குறைக்க வேண்டும். ஒருசில செயற்பாடுகளை அடக்கி வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவரால் எதை அடக்கத் தெரிகிறதோ, இல்லையோ, கோபத்தை அடக்கத் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் கோபத்தால், ஒருவரது நட்புஎப்படிமுறிவடையவாய்ப்புள்ளதோ, அதேபோல் உடலிலும் பல பாதிப்புகளை அது ஏற்படுத்தும். கோபம் என்பது எந்த நேரத்திலும் வரும். ஆனால் அந்தக் கோபம் அளவுக்கு அதிகமானால், அவை உடலில் பல பாதிப்புக்களை ஏற்படுத்தும்.

கோபத்தால் மன அழுத்தம், இதய நோய், இரத்த அழுத்தம், தலைவலி, போதிய தூக்கம் இல்லாமை போன்றவை ஏற்படும். இத்தகைய பிரச்சினைகள் உடலில் வந்தால், பின்னர் உடல்நிலை மிகவும் மோசமாகி, உயிரிழப்பைச் சந்திக்க நேரிடும். எனவே கோபம் கொள்வதால், உடலில் எந்த மாதிரியான பிரச்சினைகள் வரக்கூடும் என்பதை நோக்குவோம்.

**மன அழுத்தம்**

கோபம் அதிகம் வந்தால், மன அழுத்தம் அதிகமாகும். மன அழுத்தம் அதிகமானால், நீரிழிவு, மன இறுக்கம், இரத்த அழுத்தம் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

**இதய நோய்**

கோபம் காரணமாக ஏற்படும் படபடப்பு மற்றும் அதிகப்படியான இதயத் துடிப்பு போன்றவை இதயத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். சில சமயங்களில் அவை இதயத்துக்கு மிகவும் ஆபத்தான விளைவைக் கூட ஏற்படுத்தும்.

**தூக்கமின்மை**

எப்போது கோபப்படுகிறோமோ, அப்போது உடலில் உள்ள ஹோர்மோன்கள் சுறுசுறுப்புடன் இருக்கும். அதனால் சரியான தூக்கம் கூட வராது. மேலும் உடலுக்கு வேண்டிய ஓய்வு கிடைக்காமல், எளிதில் நோய்களானது உடலைத் தாக்கும். சில சமயங்களில் தூக்கமின்மை ஒருவரைப் பைத்தியமாகக் கூட மாற்றிவிடும்.

**உயர் ரத்த அழுத்தம்**

உயர் ரத்த அழுத்தமானது பல காரணங்களால் நிகழ்ந்தாலும், அதில் கோபமும் ஒன்று. அதிலும் எப்போது கோபம் வருகிறதோ, அந்த நேரமே உடலில் ரத்த அழுத்தமானது உடனடியாக கூடிய அளவில் அதிகரிக்கும். அவ்வாறு உடனே அதிகரிக்கும் போது, இதயம் பெரும் அளவில் பாதிக்கப்படும்.

**சுவாசக்கோளாறு**

சுவாசக் கோளாறான ஆஸ்துமாவால் பாதிக்கப்பட்டவர்கள், கோபப்படும் போது அவர்களால் சரியாகச் சுவாசிக்க முடியாது. எனவே ஆஸ்துமா உள்ளவர்கள், அதிகம் கோபப்பட வேண்டாம். இல்லை யெனில் அது மூச்சடைப்பை ஏற்படுத்தி, உயிருக்கே ஆபத்தை ஏற்படுத் தும்.

**தலைவலி**

எப்போது கோபம் வருகிறதோ, அப்போது இரத்த அழுத்தம் அதிகமாவதால், மூளைக்குச் செல்லும் இரத்தக் குழாய் அதிக அளவில் மூளைக்கு வேகமாக இரத்தத்தைச் செலுத்தும் போது, மூளையில் ஒரு வித அழுத்தம் ஏற்பட்டு, தலை வலியை உண்டாக்கும். எனவே கோபத்தின் போது வரும் தலைவலியைக் குறைப்பதற்கு, உடனே அமைதியாகிவிடுவது நல்லது.

**மாரடைப்பு**

பொதுவாக ஒருவருக்கு மாரடைப்பு, அதிகப்படியாக உணர்ச்சிவசப்படுதல், ஆச்சரியப்படுதல் அல்லது கோபத்தின் காரணமாக ஏற்படும். இவற்றில் பெரும்பாலானோர் கோபத்தின் காரணமாகத்தான் மாரடைப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே தான், இதய நோயாளிகளிடம் எந்த ஓர் அதிகப்படியான மகிழ்ச்சியான விடயத்தையும் அல்லது அவர்களைக் கோபமூட்டும் விடயத்தையும் சொல்ல வேண்டாம் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

**மூளை வாதம்**

மூளை வாத நோய் ஏற்படுவதற்கு மூளையில் உள்ள இரத்தக் குழாய்கள் வெடிப்பது தான் காரணம். இந்த மாதிரியான இரத்தக் குழாய்கள் வெடிப்பதற்கு முக்கிய காரணம் கோபம். ஏனெனில் கோபத்தினால், இரத்த அழுத்தம் அதிகப்படியாக இருப் பதால், அவை இரத்தக் குழாய்களை சில சமயங்களில் வெடிக்கச் செய்து, உயிரைப்பறித்துவிடும். எனவே எப் போதும் அதிகப்படியான கோபம் கொள்ளக் கூடாது.




# சிரித்து வாழ்ந்தால் நோய் ஏதும் வராது

மனிதராய்ப் பிறந்த நாங்கள் எல்லோரும் சந்தோசமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும். இன்பம் வரும்போது சிரித்தும், துன்பம் வரும் போது கவலையுடனும் இருக்கக் கூடாது .

அந்தக் கவலையை மறக்க நினைக்க வேண்டும் . எல்லோருடனும் சிரித்துப் பேசிச் சந்தோசமாக வாழ வேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும் சரி சமமாக நோக்க வேண்டும் .

மனிதனின் ஆயுள் காலத்தில் அவன் பல இன்ப துன்பங்களை சந்திக்கின்றான். அதுபோல் பல நோய் நொடிகளில் இருந்து தப்பிக்கின்றான். அந்த நோய் நொடிகள் கூடுதலாக வராமல் இருப்பதற்கு அவன் சிரித்துச் சந்தோசமாக இருக்க வேண்டும். நாற்பது வயது வந்ததும் நோய்கள் ஒவ்வொன்றாகப் பீடிக்க ஆரம்பிக்கின்றன . சிரிப்பூட்டும் கதைகள், படங்கள், உங்களுக்கு பிடித்த பாட்டு என்பவற்றைக் கேளுங்கள். படியுங்கள் . தனிமையில் எப்போதும் இருக்காமல் மற்றவர்களுடன் சந்தோசமாக கதைத்து மகிழுங்கள் .





## நீங்கா நினைவலைகள்

32 ஆம் ஆண்டு



2 ஆம் ஆண்டு



எத்தனை ஆண்டுகள்
கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

காரைக்கால்
சிவன் கோவிலடி,
இணுவில் கிழக்கு.

அமரர் குட்டியர் கந்தையா

திருமதி சிவபாக்கியம் கந்தையா

(46272)(4.6.4)

## 90 ஆம் நாள்
## நினைவுக்கண்ணீர் அஞ்சலி



அமரர்
**ஐயம்பிள்ளை கற்பகவரன் (வரன்)**

அன்னையின் மடியில்
20 ★ 01 ★ 1965

காலன் பிடியில்
02 ★ 01 ★ 2014

கற்பகவரனே உனைக் காணவில்லையே! நீ எங்கு சென்றாய்?
கற்பக விநாயகர் அருளால் பிறந்த மைந்தனே! நீ எங்கு சென்றாய்?
பத்தினி மனைவியும் பாசமிகு பிள்ளைகளும் கலங்கியழ
பொல்லாத காலன் உனை சொல்லாமல் கவர்ந்தானோ?
குப்பிளானில் பிறந்து ஜேர்மனியில் வாழ்ந்து
மௌனமாக மறைந்தது ஏனோ?
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்,
செல்வமலர் (மனைவி), (4616)(3.6.4)
பிள்ளைகள்: சாய்சரன், சாத்விகன் (ஜேர்மனி)

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்

## மணவாளக் கோலம்

யாழ்ப்பாணம், ஏப்.2

தொல்புரம், உடையார் வளவு ஸ்ரீ மஹாசக்தி அம்பாள் தேவஸ்தானத்தில் மணவாளக் கோலம் இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருவாகிய சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்க நாதக் குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். (க)

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சிறுதொழில் நிறுவனத்துக்கு வேலைக்குப் பெண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(46323)
(12.3.6)
தொடர்பு: 071 902 2222

### வான் விற்பனைக்குண்டு

மிகவும் நல்ல நிலையில் உள்ள மாருதி சுசுக்கி வான் (KQ - XXXX) விற்பனைக்கு உண்டு. (19000km ஓடி உள்ளது)

தொடர்பு: 0777704457
யாழ்ப்பாணம்.
(46320)
(12.3.6)

### காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாழ் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் நாகர் கோயில் வீதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (43601) (2.6.3)

தொடர்பு: 077 969 0973

### தவறிவிட்டது

கர்சினி உதயகுமார் என்பவருடைய தே.அ.அட்டை (827554804V) யாழ்.ஆஸ்பத்திரிக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 375 1986 (46319) (2.6.3)

### மணமகள் தேவை

1962 இல் பிறந்த திருவோண நட்சத்திரம், சொந்தமாகத் தொழில் செய்பவருக்கு (விவாகரத்துப் பெற்றவர்) மணமகள் தேவை. பிள்ளைகள் அற்ற விவாகரத்துப் பெற்றவர்களும் தொடர்புகொள்ளலாம். தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

கௌதமன் திருமணசேவை,
T.P. 077 464 4753, 021 320 6019
தொடர்பு: R.மனோகரன், (46315) (2.6.3)
50, நாவலடி லேன், வண்ணார்பண்ணை.

## சாவகச்சேரிக்கு மேலும் ஐந்து மருத்துவர்கள்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மேலும் ஐந்து மருத்துவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டு நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர். மருத்துவமனையில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளைக் கருத்தில் கொண்டு மருத்துவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அதை அடுத்து வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் ஆகியவற்றில் கடமையாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நடேசு ஞானசீலன்**

அன்னை மடியில் 27.01.1982
ஆண்டவன் அடியில் 13.04.2013
திதி : 02.04.2014

மகனே! காலம் மைப்பீத்த நீளம் இன்று ஓராண்டு
காலனவன் கணத்தினிலே அன்று ஓர்ந்த கோளாறு
கண்ணே உனை மறக்க ஆயுள் ஒன்று போதாது
கனவு என்று களவுசெய்ய எம் மனம் கேளாது
என்றும் உன் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

கிளான், துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தங்கம்மா (செல்வமலர்) சின்னையா**

அன்னை மடியில்
05.03.1945

அரனடியில்
13.04.2013

திதி: 02.04.2014



ஓராண்டு ஆனாலும் ஓயுமோ உம் நினைவு – எம்
ஊனோடும் உணர்வோடும் ஒன்றாய்க்கலந்த உத்தமியே!
வேருடே நீர்சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்!
வேண்டுவன வெல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர்!
சீரான வாழ்வு தந்து சிறப்போங்கச் செய்த செல்வமலரே!
சேயர் நலம் செய்வதறியாது சிந்தை கலங்கி நொந்தோம்
தீராத நினைவலைகள் தினந்தினமும் வந்தெம்மைத்
தெருட்டுவதும் தெய்வமே அறியாயோ?
நீராடுங்கண்களுடன் நிதமும்மைப்போற்றி நின்றோம்
நேயமுடன் வாராயோ! நிம்மதியைத் தாராயோ!

"தம்பலடி"
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(35428)(45.6.3)

# தமிழ், முஸ்லிம் தேசியங்களை ஏற்றுக்கொள்ளும் மனோதிடம் பெரும்பான்மையினருக்கு உண்டா?

## அது இருந்தால் மட்டுமே தேசியப் பிரச்சினை தீரும் என்கிறார் வடக்கு முதலமைச்சர்

கொழும்பு, ஏப்.2
"பெரும்பான்மைமக்கள், தமிழ்த் தேசியத்தையும் - இஸ்லாமிய மக்களின் தேசியத்தையும் ஏற்றுக் கொண்டால்தான் விடிவை நோக்கி நாம் பயணிக்கலாம். தமிழ் மக்கள் சமாதானத்துக்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள். தேசியப் பிரச்சினையைத் தீர்க்கப் பெரும்பான்மையின மக்களும் அவர்களின் அரசியல் தலைவர்களும் ஆயத்தமாக இருக்கின்றார்களா? அதற்கான அரசியல் மனோதிடம் அவர்களுக்கு ஏற்படுமா?"- என்று கேள்வியெழுப்பியுள்ளார் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

புலிகள் வருகின்றார்கள் என்ற புருடாவைப் புனைந்துரைத்துப் புதிதாக மனித உரிமை மீறல்களைப் படையினரும், பொலிஸாரும் புரியத் தொடங்கியுள்ளார்கள். குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. குற்றம் இழைத்தவர்களைக் கூட்டில் நிறுத்தாது அவர்களுடன் அரசு கூடிக் குலாவி வருகின்றது என்றும் அவர் கடுமையாகச் சாடியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் பேனார்ட் சொய்சாவின் நூற்றாண்டு நினைவுக் கூட்டம் நேற்றுமுன்தினம் தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு 'தேசிய பிரச்சினை' என்ற தலைப்பில் உரையாற்றியபோதே முதலமைச்சர் க.வி.விக்னேஸ் வரன் இவ்வாறு தெரிவித்துள் ளார்.

இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

"தேசத்தை வருத்தும் பிரச்சினையே தேசிய பிரச்சினை என்று பலர் நினைப்பார்கள். ஆனால் எமது நாட்டில் உள்ள தேசியங்களை மதிக்காததால் ஏற்பட்ட பிரச்சினையே தேசிய பிரச்சினை. இந்த நாட்டில் இரு தேசியங்கள் பண்டைய காலந் தொடக்கம் இருந்து வருகின்றன. அவற்றுக்கு வேறுவேறான மொழி, மதம், இடம், கலாசாரம் என்பன இருந்து வந்துள்ளது என்பதை நாம் ஏற்காது போனதால்தான் இன்று அது ஒரு தேசிய பிரச்சினையாக எழுந்துள்ளது.

### நாடு பிளவடையும்

இதையுணர்ந்த காலஞ்சென்ற கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில், 'மொழிகளுக்கான சம அந்தஸ்தை வழங்குவதே நாட்டின் சுதந்திரத்துக்கும் மக்கள் சமூக குழுக்களுக்கிடையிலான ஒற்றுமைக்கும் வழி வகுக்கும். அவ்வாறில்லையென்றால் இந்த ஒரு சிறிய நாட்டினுள் இரத்தம் தோய்ந்த இரு மக்கள் குழாம்கள் இரு சிறிய நாடுகளை உருவாக்கும் நிலையேற்படலாம்.

அதாவது எமது நடவடிக்கைளால் ஒரு சமூக மக்கள் குழுவினரை நாமே தேசத் துரோகக் குற்றச்சாட்டுக்கு இலக்காகப் போகின்றோம். அண்மையில் பேரினவாதிகளிடம் இருந்து பெறப்பட்ட எங்கள் நாட்டை நாங்கள் மீண்டும் பேரினவாதத்தின் உள்ளீடலுக்குக் கையளிக்கப் பார்க்கின்றோம்.' என்று கூறியிருந்தார்.

இன்று வெளிநாட்டார் எம் விடயங்களில் தலையிடுவதாக முறையிடுபவர்கள் கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா அவர்களின் அன்றைய தூர சிந்தனையையும் சரித்திர ரீதியான நுண் பார்வையையும் கருத்தில் எடுக்க வேண்டும். இன்றைய வெளிநாட்டு அல்லது சர்வதேச உள்ளீடு அன்றைய பிழையான செயலின் பிரதிபலன் அல்லவா?

### ஆயுதப் போராட்டம் ஏன்?


இவ்வாறான பிரச்சினை எழாதிருக்க லங்கா சமசமாஜக் கட்சி மட்டுமல்ல, அப்போதைய சிங்கப்பூர் பிரதமர் லீ குவான் யு அவர்களும் எச்சரித்துச் சொன்னதை காலஞ்சென்ற பண்டாரநாயக்கா செவிமடுக்காது 'சிங்களம் மட்டும்' சட்டத்தை 1956 ஆம் ஆண்டில் கொண்டு வந்தமையே பின்னர் இரு தேசியங்களுக்கிடையிலான முரண்பாடுகளை வளர்த்தது.

மொழியால் தமிழ் மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிட்டு, அதே நேரத்தில் வேறு பல விதங்களிலும் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் தமிழ் பேசும் மக்களுக்கு அவலங்க ளையும் அல்லல்களையும் கொடுக்கத் தொடங்கினார்கள்.

கல்வியில் சமன்படுத்தல், பல வந்த வட-கிழக்கு மாகாணக் குடியேற்றங்கள், வட-கிழக்கை இராணுவ மயப்படுத்தல் போன்ற பலதிலும் பெரும்பான்மையின அரசியல்வாதிகள் ஈடுபட்டனர். இவற்றின் எதிர்த் தாக்கமாகவே எமது இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் எழுந்தது.

ஆகவே வன்முறைக்கு வித்திட்டவர்கள் யார் என்று அறியாமல் தேசிய பிரச்சினையைத் தீர்க்க வழிமுறைகளைத் தேட முடியாது. அதற்கான மார்க்க வழி என்ன? சுருங்கக் கூறின் இந்த நாட்டின் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வதே தீர்வுக்கான ஒரே வழி.

ஆனால் அதற்கான அரசியல் மனோதிடம் எமக்கில்லை. ஏனென்றால் எப்போதாவது ஒரு தீர்வு கிடைப்பது போல் இருந்த தருணத்தில் எல்லாம் ஒரு சில சமாதான விரோத சக்திகள் சேர்ந்து அத் தீர்வை நடைமுறைப்படுத்த விடாமல் தடுத்துள்ளன. அது தான் எமது அண்மையக் காலச் சரித்திரம்.


வடக்கு மாகாண முதலமைச்சர்

### வடக்கில் இராணுவ அதிகாரம்

போர் முடிந்த போது ஜனாதிபதி, ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ - மூனுடன் சேர்ந்து ஒரு கூட்டறிக்கையை வெளியிட்டார். அரசியல் தீர்வொன்றை வெகு விரைவில் காணப் போவதாகவும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாகவும், உள் நாட்டில் இடம்பெயர்ந்தவர்களைத் தத்தமது வசிப்பிடங்களில் குடியமர்த்தி அவர்களுக்கான தேவைகளை நிறைவேற்றித் தரப் போவதாகவும், மனித உரிமைப் பாதுகாப்பு சம்பந்தமான வழிமுறைகளைச் சர்வதேச நிலைக் கேற்றவாறு நடைமுறைப்படுத்தப் போவதாகவும், மனித உரிமைக் குற்றம் இழைத்தவர்களைத் தண்டிக்க ஆவன செய்யப் போவதாகவும் அதன் மூலம் உறுதி அளித்தார்.

ஆனால் நடந்தது என்ன? அரசியல் தீர்வைப் பெறுவதில் அரசு அசமந்தப் போக்கையே வெளிக்காட்டி வருகிறது. 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தரப்பட்டிருக்கும் ஒரு சில உரிமைகளையும் வட மாகாண சபைக்கு வழங்காதிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட் டுள்ளன.

உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களின் நிலை நாளாந்தம் மோசமாகிக் கொண்டு வருகிறது. வலி. வடக்கில் 6 ஆயிரத்திற்கும் மேலான ஏக்கர் வளமுடைய காணி மக்களிடம் இருந்து பறித்தெடுத்து இராணு வத்தினர் பயிர்செய்து பல மாளிகைகள் கட்டி, காணியின் சொந்தக்காரர்களின் எதிர்பார்ப்பைப் பகற்கனவாக்கி வைத்துள்ளார்கள். எங்கும் இராணுவத்தின் அதிகாரமே வடமாகாணத்தில் தலைவிரித்தாடுகின்றது.

### குற்றவாளிகளுடன் குலாவுகிறார்கள்

மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்போம்என்றஅரசு, மனித உரிமை மீறல்களில் அண்மைக் காலங்களில் ஈடுபட்டு வருகிறது. புலிகள் வருகின்றார்கள் என்ற புருடாவைப் புனைந்துரைத்துப் புதிதாக மனித உரிமை மீறல்களைப் புரியத் தொடங்கியுள்ளார்கள் படையினரதும் பொலிஸாரினதும். குற்றச் செயல்கள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன. குற்றம் இழைத்தவர்களைக் கூட்டில் நிறுத்தாது அவர்களுடன் அரசு கூடிக் குலாவி வருகின் றது.

பெரும்பான்மை மக்கள் தமிழ்த் தேசியத்தையும் வேண்டுமெனில் இஸ்லாமிய மக்களின் தேசியத்தையும் ஏற்றுக் கொண்டால் தான் விடிவை நோக்கி நாம் பயணிக்கலாம்.

தமிழ்ப்பேசும் மக்கள் சமாதானத்திற்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள். தேசிய பிரச்சினையைத் தீர்க்கப் பெரும்பான்மையின மக்களும் அவர்களின் அரசியல் தலைவர்களும் ஆயத்தமாகி இருக்கின்றார்களா ? அதற்கான அரசியல் மனோ திடம் அவர்களுக்கு ஏற்படுமா? காலம்தான் பதில் சொல்ல வேண்டும்."- என்று தெரிவித்துள்ளார். (ந-5)

> தேசிய பிரச்சினையைத் தீர்க்கப் பெரும் பான்மையின மக்களும் அவர்களின் அரசியல் தலைவர்களும் ஆயத்தமாகி இருக்கின்றார்களா? அதற்கான அரசியல் மனோ திடம் அவர்களுக்கு ஏற்படுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

**கார் விற்பனைக்கு**
மாருதி சுசிக்கி-ZEN ESTILO,
பதிவு-2011 KP-xxxx
தொடர்பு:077 358 1085
(46329) (3.6.4)

**வீடு விற்பனைக்குண்டு**
சுண்டுக்குளியில் 2 பரப்புக் காணியில் 3 அறையும், 2 ஹோல் உடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு:S.S.நாதன்
இல.16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் 077 614 6434
(45049) (3.6.4)

SALE SALE SALE
# மலிவு விற்பனை
புதுவருடத்தை முன்னிட்டு இன்று
[02.04.2014] முதல் - [14.04.2014] வரை
தம்ரோ, பியெஸ்ரா பொருள்களின் ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம் அலுமாரி வகைகள், கொம்பியூட்டர் ரேபிள்கள், பிளாஸ்ரிக் கதிரை வகைகளை 5% - 10% வரையிலான விற்பனைக் கழிவுகளில் பெற்றுக்கொள்ளலாம். இங்கு Stand fan, Rice cooker, Gas Cooker, Innovex TV போன்றவைகளும் பெற்றுக்கொள்ளலாம்.
✻ நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடன் 7000/= பெறுமதியான Coffee table - (Glass) ஒன்று இலவசம்.
✻ நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மெத்தைகளுடன் ஒரு பிளாஸ்ரிக் Teapoy இலவசம்.
25000/= பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்தால் இலவச விநியோக சேவை.
(C/13128)(2.6.3)






ஜமுனா பர்னிச்சர், 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 2829
ஜமுனா பர்னிச்சர், 181,நாவலர் வீதி,யாழ்ப்பாணம். 021 222 1092




கிளிநொச்சி, கண்டாவளை புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு கடந்த 17 ஆம் திகதி செலான் வங்கி கிளிநொச்சிக் கிளையின் அனுசரணையுடன் பக்தர்களின் நலன் கருதி தாகசாந்தி நிலையம் அமைக்கப்பட்டு குளிர்பானம் வழங்கப்பட்டது. இதன் மூலம் தொலைதூரத்தில் இருந்து ஆலயத்துக்கு வருகை தந்த பக்தர்கள் பயன் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-18)

# இலங்கை வங்கி நெல்லியடி கிளையின் புதிய கட்டடம் திறப்பு

வடமராட்சி, ஏப்.2

நெல்லியடி இலங்கை வங்கிக் கிளையின் புதியகட்டடம் நேற்று முன்தினம் மு.ப 10 மணியளவில் இலங்கை வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் எச்.எம்.முதியான்சேயினால் திறந்து வைக்கப்பட்டது.

பிரதம விருந்தினரான பிரதிப் பொது முகாமையாளரும், ஏனைய விருந்தினர்களான இலங்கை வங்கியின் வட மாகாண பிரதிப் பொது முகாமையாளர் வி.நந்தகுமார், யாழ்.மாவட்ட முகாமையாளர் எஸ்.மாணிக்கசிங்கி, கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, வடக்கு மாகாண கடற்றொழில், போக்குவரத்து அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் உள்ளிட்டோரும் மங்கல வாத்தியம் முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து பிரதிப் பொது முகாமையாளர் தேசியக் கொடியையும், பிரதேச செயலர் வங்கியின் கொடியையும் ஏற்றி வைக்க தேசிய கீதம், வங்கிக் கீதங்கள் இசைக்கப்பட்ட பின்னர் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

முதலாவது வைப்பிலிடுதலை நெல்லியடியைச் சேர்ந்த திருமதி சுகந்தி சண்முகசுந்தரத்திடமிருந்து பிரதிப் பொது முகாமையாளர் பெற்றுக் கொண்டார்.

நெல்லியடிக் கிளையில் கணக்கு வைத்துள்ள சிறுவர்கள், மாணவர்கள் நேற்றுமுன்தினம் பிறந்த நாளைக் கொண்டாடியோருக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (வ-173)



முதலாவது வைப்பிலிடுதலை வாடிக்கையாளரிடம் இருந்து பிரதிப் பொது முகா மையாளர் பெற்றுக் கொண் டார்.

## வயல் பகுதியில் கண்டபடி கொட்டப்படும் குப்பை கூளம்

வடமராட்சி, ஏப்.2

புலோலி, புற்றளை மாவில் வயல் பகுதியில் குப்பை கூளங்கள் கண்டபடி கொட்டப்படுவதால் வயல் வெளி குப்பை கூளங்களால் நிரம்பும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குப்பை கூளங்கள் நிரப்பப்படுவதால் எதிர்காலத் தில் வயலில் நெற் செய்கை மேற்கொள்வதில் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வருவதுடன், அயலில் வசிப்போரும் சுகாதார சீர்கேடுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயத்தில் பருத்தித்துறை பிரதேச சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுற்றுச்சூழலில் வாழும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-173)

## மாகாணமட்ட எழுத்தாக்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப்.2

அகில இலங்கை தமிழ் மொழித் தின வவுனியா தெற்கு வலய எழுத்தாக்கப் போட்டிகளில், வலய மட்டத்தில் வெற்றியீட்டியோருக்கான மாகாண மட்ட எழுத்தாக்கப் போட்டி எதிர் வரும் 5 ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பண்ணிசைப் போட்டி

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய திருநெறிய தமிழ்மறைக் கழகம் பண்ணிசைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. போட்டிகள் யாவும் அடுத்த மாதம் 18 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் ஆலயத்தின் மணி மண்டபத்தில் இடம்பெறும். விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்பதாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

எமது உள்ளத்தில் உறைந்துள்ள அன்புத்தெய்வத்தின்

### ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் முத்தையா பாலசுப்பிரமணியம்

(இளைப்பாறிய உப அதிபர்)



குழந்தையாய் மண்ணில்
25.07.1923

தெய்வமாய் விண்ணில்
08.04.2008

திதி: வளர்பிறை திருதியை
(02.04.2014) புதன்கிழமை

எங்கள் குடும்பத்தின் குல விளக்கு
அணைந்து ஆறு ஆண்டுகள்
கடந்து விட்டன ஆறாண்டு என்ன
ஆறாயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில்
நீங்காமல் நிலைத்துள்ளன
தெய்வமாய் நின்று எமை வழி
நடத்திய எமது குடும்பத்தலைவனே
என்றும் உங்கள் நினைவுகள்
நிலைத்திருக்கும் உங்கள்
ஆத்மாசாந்தி பெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கணேசு மகேந்திரன்

| பிறப்பு | திதி: திருதியை | இறப்பு |
|---|---|---|
| 11.02.1963 | (02.04.2014) | 13.04.2013 |



ஆண்டொன்று மறைந்து விட்டது
அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள்
நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய்
அநாதையாய்ப் பரிதவிக்க விட்டுவிட்டு
எங்கு சென்றீர்கள்?
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள்
நினைவுகளை எங்கள்
உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள்.
72/11, கடுக்காயடி லேன், நல்லூர்.

## சமய சந்நிதிகள்

யாழ்ப்பாணம், ஏப்.2

கோப்பாய் வடக்கு சித்திரவேலாயுத சுவாமி ஆலய பரிவார மூர்த்தியாகிய மஹா லக்ஷ்மி அம்பாளின் மண்டலாபிஷேக பூர்த்தியும் மஹா சங்காபிஷேகமும் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அன்னதானமும் இடம்பெறும். (வ)

◆ ◆ ◆

வரணி, ஏப்.2

சரசாலை இலந்தைத் திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய மணவாளக் கோலத் திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறும். அன்றைய தினம் கும்பாபிஷேகத் தினமாகிய ரோகிணி நட்சத்திரத்தன்று காலை 8.00 மணி முதல் ஸ்ரீவீரமாகாளி அம்மனுக்கு சகஸ்ட (1008) சங்காபிஷேகமும், விசேட பூசையும் அம்பாள் உள்வீதி உலாவும் இடம்பெறும். (வ-122)

## அதிபருக்கு இன்று மணி விழா

பருத்தித்துறை, ஏப்.2

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் அதிபர் செல்வமலர் சுந்தரேசனின் மணிவிழா இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. மணிவிழாக் குழுத் தலைவர் வ.கிருஷ்ணசிங்கம் தலைமையில் நிகழ்வு இடம்பெறும்.

விழா நாயகி கொட்டடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து மங்கல வாத்தியங்களுடன், மாணவிகள் புடைசூழ பாடசாலை கேட் போர் கூடத்துக்கு அழைத்து வரப்படுவார்.


வண.பிதா.கே.எம்.றெஜினோல்ட் ஈஸ்பரன், சிவஸ்ரீ தியாக சோமஸ்கந்தராஜக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள். தொடர்ந்து மணிவிழா மலர் வெளியீடு இடம்பெறும். மலராசிரியரான பரா.ரதீஸ் நூல் அறிமுக உரையாற்றுவார்.

யாழ்.பல்கலைக் கழக சட்டத் துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நயப்புரை வழங்குவார். நிகழ்வில் பெரியார்கள் பலர் விழா நாயகியைப் பாராட்டி உரையாற்றுவர். (ஓ)

### மரண அறிவித்தல்

**தில்லையம்பலம் செல்வரத்தினம்**



கோப்பாய் வில்வையடியைப் பிறப்பிடமாகவும், சோனெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் செல்வரத்தினம் 30.03.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் நவமணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கனகராசா, அரசபிள்ளை மற்றும் இராசலிங்கம், தவமலர் ஆகியோரின் சகோதரரும் பத்மநாதன், கிருஷ்ணபாமா, தில்லைநாதன், றங்கநாதன், கமலநாதன், மோகநாதன், பத்மப்பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயராணி, சிறீஸ்கந்தராஜா, சாந்தகுமாரி, வசந்தி, சுமதி, பிரபாகர் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணிக்கு கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சோனெழு,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (46309)(3.6.4)

தகவல்: செ. மோகநாதன் (மகன்)
021 3205227

எமது இயத்தில் என்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வத்தின்

### முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் லூக்
ஆரோக்கியசாமி (லூக்)
(பிரதான வீதி, மாதகல்)



மண்ணுலகில்
18.10.1937

விண்ணுலகில்
02.04.2013

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
அமைதியின்றி ஆதரவற்றுத் தவிக்கின்றோம்
எங்கள் வாழ்வில் என்றும் நினைத்துப் பார்க்க முடியாத
கொடிய நாள் ஏன் வந்தது சித்திரை 2 ஆம் திகதி
நாம் கடந்து வந்த பாதைகளைப் பார்க்கின்றோம்
நன்மைகளை நினைக்கின்றோம்
நமக்கு நல்லதே நடக்கும் என்று சொல்லுவீர்களே - ஆனால்
நல்லவனுக்கே குறைந்த ஆயுள் என்று சொல்லவில்லையே - டடா
நாங்கள் உங்களை நினைத்துக் கலங்குகின்றோம்
நீங்கள் இல்லாது எமக்கு நிம்மதி ஏது, வாழ்வு ஏது
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்து காட்டினீர்களே!
உங்களை எப்படி நாம் மறப்பது - டடா
மனைவிக்கு நல்ல கணவனாகவும்
பிள்ளைகளுக்கு நல்ல தகப்பனாகவும்
மருமக்களுக்கு நல்ல மாமனாகவும்
பேரப்பிள்ளைகளுக்கு நல்ல பேரனாகவும்
வாழ்ந்து காட்டினீர்களே - டடா
உங்களை நிதமும் நினைந்து தேடுகின்றோம்
உங்கள் இழப்பால் எம் இதயங்களில் காயங்கள் உண்டு
அது எப்போது மறையுமெனத் தெரியவில்லை - டடா
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதான வீதி, மாதகல்

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

## அறிவித்தல்
### பூநகரி வாடியடி சந்தைக் கடைத் தொகுதி பகிரங்க ஏலம் வழங்கல் - தொடர்பானது

பூநகரிப் பிரதேச சபை எல்லைப்பரப்பிற்குட்பட்ட பூநகரி, வாடியடி சந்தைக் கடைத் தொகுதி 2014ஆம் ஆண்டுக்கு குத்தகைக்கு விடுவதற்கு ஏலம் கூறுவ தற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 05.04.2014 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பிரதேச சபை பூநகரிக்கு வருகை தந்து ஏலத்தில் பங்கு பெற முடியும் என்பதனை தங்களுக்கு தயவுடன் அறியத் தருகின்றேன்.

ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா - 10,000/

பொ.சிறீஸ்கந்தராசா
தலைவர், பிரதேச சபை, பூநகரி.
(சி/13131) (5.6.3)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அமரர்
பொன்னையா கணபதிப்பிள்ளை
(குளபதி)



கடந்த 03.03.2014 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர்
**பொன்னையா கணபதிப்பிள்ளை** அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (02.04.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விடத்தல்பளை, மிருசுவில். குடும்பத்தினர்
(46332)(2.6.3)

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி நீதிமன்றத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (NGOக்கு உகந்தது)
தொடர்பு: 0776399352
0779379249

## ஒப்பந்த வேலையாள்கள் தேவை
### Pubada Constuction

காரைநகரில் கட்டடவேலை செய்யும் எமது நிறுவனத்திற்கு சட்டறிங் வேலை செய்வதற்கு ஒப்பந்தகாரர் தேவை.
தொ.பே. 0771375434
(46340)

## Phone விற்பனைக்கு

Apple 5S Phone
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:077 782 2757

## Soft View Computer Center
102, பிரதான வீதி, யாழ்ப்பாணம்(A9)

சிங்களம் மற்றும் ஆங்கில புதிய பிரிவு கள் ஆரம்பம். எழுத, வாசிக்க சிறந்த வழி முறைகளுடன் கற்பிக் கப்படும்.
விசேட இரவு நேர வகுப்புக்களும் நடைபெறும். E.C.கொலின் 077 905 3545
(சி/13086)(5.6)

## வேலையாள்கள் தேவை

பருத்தித்துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் விடுதியில் தங்கி நின்று வேலை செய்வதற்கு வேலை யாட்கள் தேவை.
பருத்தித்துறையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
கொழும்பில் கடையில் தங்கி நின்று வேலை செய்வதற்கும் ஆள்கள் தேவை
தொடர்புகளுக்கு: 0775736003
(46333)

## தேவை

உங்கள் வீடுகளில் உள்ள பழைய புத்தகங்கள், கொப்பிகள், பத்திரிகைகள் மற்றும் காட்போட் ஆகியவற்றை உங்கள் வீடுகளுக்கு வந்து பணம் தந்து பெற்றுக்கொள்கின்றோம்.
தொடர்பு: 0778790581

## KINGS ELECTRONICS
11A, Stanley Road, Jaffna,
T.P:- 021 222 3857

LED Bulbs
SALES SALES
for PLASTIC METRAL

| PLASTIC | METRAL |
|---|---|
| 5 W 230 /= | 5 W 300 /= |
| 7 W 280 /= | 7 W 400 /= |
| 9 W 360 /= | 9 W 600 /= |

4` LED Tube Light
16 W 1300 /=
SALES
(46184)(2.45.6.3)

## மரண அறிவித்தல்

காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட **திருமதி பொன்னம்மா சபாரத்தினசிங்கம்** அவர்கள் 31.03.2014 அன்று கொழும்பில் காலமானார்.
இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2014) புதன்கிழமை கல்கிஸை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

**தகவல்:** எஸ். மதிதரன், 148/7, காலி வீதி, தெஹிவளை.
தொ.பே. இல: 0112 723914 / 077 662 1234

## மரண அறிவித்தல்



### வயித்தி தருமர்

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயித்தி தருமர் 31.03.2014 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (02.04.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(46338)

## IMMEDIATE VACANCIES

Following positions are available throughout our branch network for immediate fulfilment. Qualified candidates should apply with a covering letter clearly stating the Post and Branch that you apply for. Successful candidates will receive an industry-leading take home salary.

### Academic Positions

#### LECTURER (IT)

Should be posgraduate qualified and have teaching experience in a similar capacity. Preference will be given to those with outstanding communication skills and a winning personality. Should also be capable in providing mentoring and pastoral support and supervision of undergraduate / postgraduate projects.

**Salary will higher than industry rates+ Lecture Fees**

#### PROGRAMME MANAGER

Ideal applicant should be a graduate in IT with postgraduate qualifications in Business with experience in a similar capacity. You would be responsible for managing one or more courses / programmes and also lead the lecturing team. Would be responsible for achieving set targets, and assigning lecturers and other resources. You should also be able to contribute in lecturing.

**Salary will higher than industry rates + Lecture Fees**

### Non Academic Positions

#### STUDENT COUNSELLOR / MARKETING COORDINATOR

Should be a fast learner to learn about our products and counsel students and / or parents on the best educational programmes to suit their requirements. Marketing, Business, or IT qualifications or similar experience would be an advantage. Should be able to work on weekends and have the self drive to achieve targets.

**Salary will higher than industry rates + Commission**

#### RECEPTIONIST

Shoud be a fast learner to learn about our products and counsel students and / or parents on the best educational programmes to suit their requirements. Similar experience would be an advantage. Should be able to work on weekends and have the self drive to achieve targets. Should be fluent in multiple language.

**Salary will be 10,000 to 20,000 + Commission**

**Mail your CV within 7 days to ESOFT, No.137, K.K.S Road, Jaffna. or Email to jaffna@esoft.lk**

ESOFT
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS -JAFFNA
Srilanka's Largest IT Education Network
TEL : 021 222 4142 HOTLINE : 077 309 9 308

## இரசாயனவியல் வினா - விடை பரீட்சை

ஜீ.சி.ஈ. (உ.த) மாணவர்களுக்கு வழமை போன்று இலங்கை இரசாயனவியல் கழகத்தினால் நடத்தப்படும் அகில இலங்கை இரசாயனவியல்வினா விடைப் பரீட்சை - 2014 இம்முறை யாழ். மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஒ)

## மரண அறிவித்தல்



### இரத்தின சபாபதி நாகராஜா
(ஓய்வுபெற்ற கணக்காய்வாளர்)

யாழ்ப்பாணம், கந்தரோடையைப் பிறப்பிடமாக வும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி நாகராசா நேற்று (01.04.2014) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி - இரத்தினம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், சீனிவாசகம் - தங்கம்மா தம்பதி களின் மருமகனும் காலஞ்சென்ற காந்திமதியின் அன்புக் கணவரும், ஸ்ரீ ரங்கனின் (முகாமைத்துவ உதவியாளர், வடமாகாண விவசாயத் திணைக்களம்) அன்புத் தந்தையும் ஜெனனியின் அன்பு மாமாவும், ஹரி ணியின் அன்புப் பேரனும் நாகரத்தினம் (கண்டி) நாகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மகாலிங்கம், ஜெகநாதன், காலஞ் சென்ற மகேந்திரா மற்றும் கமலபூசணி, நாகேந்திரா, தெய்வேந்திரா, புஸ்பராணி, காலஞ் சென்ற ராஜேந்திரா மற்றும் ஜெயராணி, இந்திராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.04.2014) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2.30 மணிக்கு திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஸ்ரீரங்கம்" 111, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
தகவல்: நா.ஸ்ரீரங்கன் (மகன்), ஸ்ரீ.ஜெனனி (மருமகள்)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி சொக்கலிங்கம்



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.100, செல்வபுரம் வவுனிக்குளத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் Coventry இங்கிலாந்தினை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி சொக்கலிங்கம் கடந்த (28.03.2014) வெள்ளிக்கிழமை இங்கிலாந்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கார்த்திகேசு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னத்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சொக்கலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை பூரணம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை, பார்வதி, கார்த்திகேசு ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற பாலச்சந்திரன் (G.S. சிறாம்பியடி) மற்றும் மங்களேஸ்வரி (சுவிஸ்), குலேந்திரன் (சுவிஸ்), புவனேந்திரன்(U.K.), பஞ்சகெளரி (U.K.), சாந்தினி (U.K.), ருசீந்திரன் (U.K.), ஆகியோரின் பாசமிகு தாயும் இராஜராஜேஸ்வரி(இலங்கை), சந்திரலிங்கராசா (சுவிஸ்), நகுலேஸ்வரி (சுவிஸ்), கலாவதி (U.K.), புவனேந்திரராஜா (U.K.), சக்தீஸ்வரராஜா (U.K.), மயூறயனி (U.K.) ஆகியோரின் பாசமிகு மாமியும் பிரசன்னா, பிரசாத், பிரதாப், பிரதீப், சோபிகா, விக்னேஸ்வரன், ஜெயபவானி, ஜெயப்பிரதா, காலஞ்சென்ற பிறேம்நாத், விதுலன், தனுசன், கபிலன், கோபிகா, ரிஷிபா, கஜிபா, பிரவீணா, ஹரிசன், சாருஜன், சாருகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நிலா, அபி, துவாரகா, பாரதி, பானுஜன், மிதுனா, மேனகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.04.2014) திங்கட்கிழமை Coventry இங்கிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.: 00447402176851

**தகவல்:** குடும்பத்தினர்.

# முன்னணியில் கரவெட்டி ஓய்வூதிய நம்பிக்கை நிதியம்

*பகிரங்க ஓய்வூதிய நம்பிக்கை நிதிய சங்கங்களின் யாழ்.மாவட்ட தலைவர் பாராட்டு*

வடமராட்சி, ஏப்.2
பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்துக்கு பங்களிப்புச் செய்வதில் யாழ். மாவட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவின் ஓய்வூதிய நம்பிக்கை நிதியச் சங்கம் முன் னணியில் திகழ்கின்றது. இந் தச் சங்கம் நூறு வீத பங்களிப்பை வழங்கியுள்ளது என்று பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கங்களின் யாழ்.மாவட்டத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தெரிவித்தார்.

பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் க.கதிரமலை தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய மாவட்டத் தலைவர் மேலும் கூறியதாவது:-

இந்த நிதியமானது ஓய்வூதியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சங்கத்தில் இதுவரை இணையாத ஓய்வூதியர்கள் இணைந்து கொள்ள வேண்டும். ஓய்வூதியர்களின் நன்மைக்ருதியே நாம் செயற்படுகின்றோம்- என்றார்.

பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.சிவகுமார் பேசுகையில்;
தற்போது இந்தப் பிரிவில் ஆயிரத்து 351 ஓய்வூதியர்கள் ஓய்வூதியம் பெறுகின்றனர். அவர்களில் 356 பேர் மட்டுமே இந்தச் சங்கத்தில் இணைந் துள்ளனர். இந்தச் சங்கம் ஓய்வூதியர்களுக்கு பலவித நன்மைகளை வழங்கி வருகின்றது. அவற்றைப் பெற்றுப் பயன் அடைவதோடு சங்கமும் வளர்ச்சியடைய ஊக்குவிக்க வேண்டும். பிரதேச செயலகம் சங்கத் துக்கு எத்தகைய உதவிகளைவழங்க முடியுமோ அவற்றை வழங்கும் -என்றார். (வ-173)

# பொலிஸ் வாகனம் மோதியதில் மாணவியின் சைக்கிளுக்கு சேதம்

*கிளிநொச்சி மஞ்சள்கோட்டுப் பகுதியில்*

கிளிநொச்சி, ஏப்.2
மஞ்சள் கோட்டுப் பகுதியில் பொலிஸ் வாகனம் மோதியதில் மாணவி ஒருவரின் சைக்கிள் சிறு சேதங்களுக்கு உள்ளாகியது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-
கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் மாணவர்கள் மஞ்சள் கோட்டைக் கடந்து கொண்டிருந்த போது யாழ்ப்பாணதிலிருந்து வேகமாக வந்த பொலிஸ் வாகனமொன்று கடும் பிரேக் அடித்த போதிலும் வாகனம் மஞ்சள்கோட்டை தாண்டிச் சென்ற மாணவி ஒருவரின் சைக்கிளை மோதியதால் சேதம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7.50 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தையடுத்து கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரி அதிபர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார். பொலிஸ் வாகனத்தில் பயணித்த உயர் அதிகாரியும் பொலிஸ் நிலையத் துக்கு வருகை தந்து இனி வரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது எனத் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை கல்லூரி இயங்கும் நேரத்தில் கரடிப் போக்குச் சந்தியில் அதிகளவு பொலிஸாரைப் பணியில் ஈடுபடுத்துமாறு கல்லூரி அதிபரும், பெற்றோரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரில் பொது வாகவே மஞ்சள் கோடுகளை வாகனச் சாரதிகள் மதிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# மாணவர்களின் பெற்றோருடன் குருநகர் பேகன் ஒஸ்லோ அமைப்பினர் சந்திப்பு

குருநகர் பேகன்- ஒஸ்லோ அமைப்பால் நடத்தப்பட்டு வரும் கல்வி வகுப்புக்களில் கற்றுவரும் மாணவர்களின் பெற்றோர்களுக்கும், குறிப் பிட்ட அமைப்பினருக்கும் இடை யிலான சந்திப்பு கடந்த 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அந்த அமைப்பின் தலைவர் எஸ்.சிலுவைதாசன் தலை மையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும் யாழ்.சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், யாழ்.சென். சாள்ஸ் மகா வித்தியாலம் ஆகியவற்றின் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தச் சந்திப்பில் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் பங்குத் தந்தை வண பிதா தே.நேசராஜா அடிகளார், அருட் தந்தை வண. பிதா விஜின்ரஸ் அடிகளார், பேகன்- ஒஸ்லோ அமைப்பின் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-51)


## மரண அறிவித்தல்

### கனகசபாபதி சர்மா வரதலக்ஷ்மி



யாழ்ப்பாணம், சிவலிங்கப்புளியடியைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, கீரிப்பிளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது தென்னாபிரிக்க Johannesburg இல் வாழ்ந்து வந்த வருமாகிய கனகசபாபதி சர்மா வரதலக்ஷ்மி நேற்று கடந்த 31.03.2014 இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது இறுதிச்சடங்கு இன்று (02.04.2014) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் Johannesburg நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே.:0027839579781

தகவல்:
குடும்பத்தினர்.

சாவகச்சேரி அருள்மிகு அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயம்

ஓம் நமசிவாய அகண்டநாம ஜெப பிரார்த்தனை

உலக உயிர்களின் நன்மைக்காக சிவசங்கமர்கள் ஒன்று சேர்ந்து இன்று (02.04.2014) தொடக்கம் மூன்று தினங்கள் (புதன் வியாழன் வெள்ளி) காலை 6 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை மூன்று தினங்களும் 2 இலட்சம் மகா ஜெபத்தை செய்வதற்கு திருவருள் கிடைத்துள்ளது விரும்பிய சிவபக்தர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

(சி-13136) ஆலய தர்மகர்த்தாவும் உபயகாரர்களும்.

மலேசியாவில் உடனடி வேலைவாய்ப்பு

Veetech Golobal Company

Car Company helping Work's

வயது: 25 - 45
சம்பளம் : 1800 Rm +OT

தங்குமிடம் இலவசம்
மற்றும் மருத்துவம், உணவு
மலேசியாவின்
சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது
முக்கிய குறிப்பு இது (Working Visa)
உடனடியாக அணுகவும்
தொ.பே.: 0776632608, 0775829547

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.03.2014 அன்று
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத் தலைவர்
அமரர்

### கணபதி தங்கவேல்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03.04.2014) வியாழக் கிழமை காலை 8 மணியளவில் புனித கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (05.04.2014) சனிக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வட்டுக்கோட்டை தெற்கு
வட்டுக்கோட்டை, குடும்பத்தினர்.
(C13135)

## தரம் 5 மாணவர்களுக்கான ஓவியக் கட்டுரைப் போட்டி





தரம் 5 மாணவர்களின் ஓவியம் வரையும் திறனையும், கட்டுரை வரையும் திறனையும் மேம்படுத்தும் நோக்கில் இம் மாதம் முதல் சித்திரப் போட்டி ஒன்று ஒவ்வொரு மாதமும் 'ஒளி அரசி' எனும் மாதச் சஞ்சிகையால் நடத்தப்படுகின்றது.

**மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு 3,000/= பெறுமதியான பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.**

மேலதிக போட்டி விவரங்களுக்கு ஏப்ரல் மாத 'ஒளி அரசி'யை வாங்கி 65ஆம் பக்கம் பார்க்க. அத்துடன், தரம் 5 மாணவர்களின் உச்சப் புள்ளிகளைத் தீர்மானிக்கும் மேலதிக திறனை விருத்தி செய்யும் சிறப்புப் பயிற்சி பக்கங்களும் (4 பக்கம்) இலவச பிறந்த தின வாழ்த்துப் பகுதியும் 'ஒளி அரசி'யில் வெளிவந்துள்ளது. உங்களுக்கான ஒளிஅரசியை பத்திரிகை முகவரிடம் பெற்று அதிலுள்ள விபரத்தின்படி போட்டியில் பங்குபற்றி பரிசை வெல்லலாம்.

அனுசரணை

COLORCRAFT Lanka (Pvt) Ltd.

## அமைதியின் சொற்கள்

you want to pray?
Great.
Should the Prayer be
'Thank you'
மேலும் அறிந்து கொள்ளவும் இலவச டிவிடிக்களுக்கும் அழையுங்கள்0117250001, between - 3pm - 10pm
(46334)

## விண்ணக வாழ்வில் 31 ஆவது நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 15.03.1918
இறப்பு: 05.03.2014

திருமதி
### அமிர்தம் ஞானமுத்து

என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் (யோவான் 11:25)

எம் உயிர்களுக்கு எல்லாம் முகவரியாகி எம்மையெல்லாம் நல்வழிப்படுத்தி எமது மகிழ்வில் மனமது நிறைந்த அன்புத் தாயே சீவியத்தில் உம்மை நாங்கள் நேசித்தோம். மரணத்திலும் மறவோம். (04.04.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். 05.04.2014 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு மல்வம் திருக்குடும்ப ஆலயத்தில் அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

ஞானப்பிரகாசம் வீதி,
மல்வம் உடுவில்.

தகவல்: G.B.ஜெபரட்ணம் (மகன்),
J/150 மாதகல் கிராம சேவையாளர்.

# ஐக்கிய நாடுகளின் சர்வதேச விசாரணை நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும்

## த ஏஜ் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.2
இலங்கைக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் சர்வதேச விசாரணை இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் என்று த ஏஜ் பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து த ஏஜ் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையில் போர் நிறைவடைந்த காலப்பகுதியில் இருந்து, இறுதிப் போரின்போது இடம்பெற்ற உண்மை சம்பவங்களை வெளிப்படுத்துமாறு சர்வதேச நாடுகள் கோருகின்றன.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அரசு அதனைத் தொடர்ந்து நிராகரிப்பதுடன், இதனை ஒரு கௌரவப் பிரச்சினையாகவும் பார்த்து வருகிறது.

ஆனால் இந்த விடயத்தில் உண்மையான விசாரணை செய்யப்பட்டு, கடந்த கால உண்மைகள் வெளிக் கொணரப்படாத நிலையில் நிலையான சமாதானத் தையோ, மறுசீர மைப்பையோ ஏற்படுத்தி விட முடியாது.

**இலங்கை அரசு தாம் பொறுப்புக் கூற தவறியுள்ள நிலையில் அதனை மேற் கொள்ளும் பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபையிடம் இருக்கிறது.**

எனவே ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விசாரணையானது, இலங்கையில் இறுதி போர் வேளையில் இடம் பெற்ற உண்மைகளை வெளிக் கொண்டுவருவதுடன், அதனை இலங்கை அரசு முகம் கொடுக்கும் வகையில் செய்யப்பட வேண்டும். அப்படி செய்தால், ஐக்கிய நாடுகள் சபை இலங்கையின் இறைமையை மீறியுள்ளதாகக் கருதவும் முடியாது.

காரணம் இலங்கை அரசு தாம் பொறுப்புக்கூற தவறியுள்ள நிலையில் அதனை மேற்கொள்ளும் பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபையிடம் இருக்கிறது- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## வேலைத்திட்ட இடங்களில் அதிகம் பரவுகிறது டெங்கு

கொழும்பு நகரில் காணப்படும் பிரதான வேலைத்திட்ட பகுதி களில் அதிகம் டெங்கு நுளம்பு பரவுகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இவ்வாறு 126 இடங்களில் டெங்கு நுளம்பு பரவியுள்ளது என்று அமைச்சு சுட்டிக்காட்டி யுள்ளது.

இந்தநிலையை கட்டுப்படுத்த வென ஒவ்வொரு வேலைத் திட்ட பகுதியிலும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது என்று சுகா தார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.(ச)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தீர்மானம்

படும்படி இலங்கை யைக் கேட்டுக் கொள்கின்றோம் - என்று தெரிவித்துள்ளார் பிரிட்டன் வெளி விவகார அமைச்சர் வில்லியம் ஹேக்.

இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவால் முன்மொழியப்பட்ட தீர்மானத் துக்கு பிரிட்டன் இணை அனுசரணை வழங்கியிருந்தது. அது தொடர்பில் பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைத்துள்ள உத்தியோகபூர்வ கடிதத்திலேயே வில்லியம் ஹேக் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"இலங்கை விவகாரம் தொடர்பாக ஐ.நாவில் பிரே ரணை நிறைவேற்றப்பட்டமை சரியான முடிவே. இலங்கையில் உள்ள அனைத்துச் சமூகங்களினதும் ஆதங்கங்கள் குறித்து உரிய முறையில் கவனிப்பதற்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை, உரிய முறையில் இலங்கை அரசு பற்றிக் கொள்ள வேண்டும்.

கடுமையான செய்தி

இலங்கையின் அனைத்து மக்களுக்கும் சுபீட்சமான எதிர்காலத்தையும், நல்லிணக்கத்தையும், நிலையான தீர்வையும் பெற்றுக்கொள்வதற்கு, மக்களின் கடந்த கால ஆதங்கங்கள், கவலைகள் குறித்து விரைந்து கவனம் செலுத்தியாக வேண்டும் என்ற கடுமையானதும் முக்கியமானதுமான செய்தி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை மூலம் இலங்கைக்கு சொல்லப்பட்டிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் உள்ளூர் ஆதரவுத் தரப்புக்கள் உட்பட பல சுயாதீனக் குரல்களை, தான் செவிமடுத்துள்ளமையை சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுத்து, அதற்காக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வலுவான, சந்தேகத்துக்கு இடமில்லாத ஒரு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதன் மூலம் சர்வதேச சமூகம் வெளிக்காட்டியுள்ளது.

இலங்கையை நம்புகின்றோம் இந்தத் தீர்மானம் உரியமுறையில் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு பிரிட்டன் தொடர்ந்து உழைக்கும் என்பதை நாடாளுமன்றத்துக்கு உறுதியளிக்கிறேன். இந்தத் தீர்மானத்துக்கு முழு ஒத்து ழைப்பு வழங்கி, மக்களின் நலனுக்காக சர்வதேச சமூகத்துடன் ஒத்திசைவாக செயற்படும்படி நாங்கள் இலங்கையைக் கேட்டுக் கொள்கின்றோம். இலங்கையில் சம்பந்தப்பட்ட அனைத்து சமூகங்களினதும் எதிர்பார்ப்புக்களைக் கவனிக்கவும், பிணக்குக்கு மூல வேரான காரணங்கள் மற்றும் மனித உரிமைகள் விவகாரங்களை உரிய முறையில் கையாளவும், இலங்கை நல்லிணக்கத்தை நோக்கிய சரியான பாதையில் பயணிக்கவும் இந்தத் தீர்மானம் உதவும். இந்த வாய்ப்பை இலங்கை சரிவரப் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் நம்புகிறோம்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### புதுவருடத்தை

படும் இந்தப் புத்தாண்டு விழாவில் பங்கேற்க தெற்கிலிருந்து 200 கலைஞர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரவுள்ளனர். அதற்கேற்றால் போல் சகல பிரதேச செயலகங்களும் தமது பகுதியிலுள்ள கலைஞர்களை திரட்டி நாடகங்கள் மற்றும் கிராமிய கலை நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய வேண்டும் என்றும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் விழாவில் பாடசாலை மாணவர்களது நிகழ்வுகள், கலைஞர்களுக்கான கௌரவிப்புக்கள் மற்றும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் என்பனவும் நடைபெறவுள்ளன. ஏப்ரல் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு தொடங்கி மாலை 5 மணிக்கு நிகழ்வுகள் முடிவுறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5)

### சுகாதார

தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், சபைச் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அதில் டெங்கு வாரத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டது. அதன்போது கருத்துத் தெரிவித்துள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள்,

"வடக்கிலுள்ள சகல சபையினதும் சுகாதாரச் செயற்பாடுகள் முடங்கியுள்ளன. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களை மீளவும் பிரதேச சபைகளுக்கு இணைக்க வேண்டும் என்று கோரி சுகாதாரத் தொழிலாளர்கள் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதனால் டெங்கு ஒழிப்புச் செயற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்கள் பங்கெடுக்க முடியாதுள்ளது"- என்று தெரிவித்தனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர்,

"நாளை வியாழக்கிழமை, இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆராய வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது"- என்று தெரிவித்தார்.

நேற்றைய கலந்துரையாடல் அரை மணி நேரம் மட்டுமே நடைபெற்றது. (ற-5)

### சர்வதேச

இலங்கை வெளிவிவகார அமைச்சு.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரித்திருக்கும் நிலையில், குறித்த தீர்மானத்தை ஏற்று சர்வதேசத்துடன் இணைந்து செயற்பட இலங்கை முன்வர வேண்டும் என்று அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கோரியுள்ளன.

இதுகுறித்து வெளிவிவகார பிரதியமைச்சர் நியோமல் பெரேராவிடம் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜெனிவாவில் அரசியல் உள்நோக்கங்களுடன் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானத்தை திட்டவட்டமாக நிராகரித்துவிட்டோம். மனித உரிமை விடயத்தில் இலங்கை சாதகமான திசையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கின்றது. அது விடயத்தில் வேறு நிகழ்ச்சி நிரல்களைத் திணிப்பதற்கு இடமளிக்க முடியாது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் காத்திரமான முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. அதை மேலும் விரிவுபடுத்தி உள்நாட்டுப் பொறிமுறையைப் பலப்படுத்த வேண்டுமானால், சர்வதேச ஒத்துழைப்பையும், அமைப்புகளின் உதவி களைப் பெறுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்"- என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

### சொந்த

மையில் ஆசை காட்டியது. அது தொடர்பில் இராணுவத்திற்கும் மக்களுக்கும் இடையில் சில கட்டப் பேச்சு நடத்தப்பட்டது. ஆனால் அதில் இணக்கம் எட்டப்படாத நிலையில், சொந்த இடங்களில் மக்களை மீளக் குடியமர்த்த முடியாது என்று இராணுவம் கைவிரித்தது. அதற்குப் பதிலாக தற்போது நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களை வளலாயில் குடியமர்த்தும் மாற்றுத் திட்டம் முன்வைக்கப்பட்டது. விரும்புபவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று ஆசை காட்டப்பட்டது. எனினும் 200 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மட்டுமே வளலாய்குச் சென்று குடியேறச் சம்மதித்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அவர்களது சொந்த இடத்தில் சொந்தக் காணிகள் எவையும் இல்லை என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

விரும்பம் தெரிவித்துள்ள 200 குடும்பங்களையும் விரைவில் வளலாயில் குடியேற்ற யாழ். மாவட்டச் செயலகமும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு ஆகியன துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. (உ-5)

### ஐ.நா.

"உள்நாட்டுத் தேர்தலில் அரசு வெற்றிபெற்றாலோ அல்லது தோல்வியைத் தழுவினாலோ அது ஜெனிவாத் தீர்மானத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது. அரசியல் விடயங்களுக்கும், வெளிவிவகாரக் கொள்கை வகுப்புகளுக்குமிடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன என்பதை அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

ஆட்சிபீடமேறும் கட்சியொன்று சர்வ தேசத்துடன் சுமுக உறவைப் பேணுவதே சிறந்த வியூகமாகும். இதை விடுத்து சண்டித்தனம் காட்டுவது வெளிவிவகாரக் கொள்கையல்ல.

அதன்படி சர்வதேசத்துடனான இலங்கை அரசின் செயற்பாடுகள் தற்கொலைக் குண்டுதாரியின் செயற்பாடுகள் போன்றுதான் இருக்கின்றன. தற்கொலைக் குண்டுதாரி குண்டை வெடிக்கவைத்தால் அது அவருக்கும் பாதிப்பு; மற்றவர்களுக்கும் பாதிப்பு. இதேபோல்தான் அரசின் செயற்பாடுகள் நாட்டுக்கும் அரசுக்கும் பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

ஜெனிவா தீர்மானத்தை ஏற்றுத் தம்மால் நிறைவேற்றக் கூடிய வற்றை செய்வதற்கு அரசு முன்வர வேண்டும். 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல், ஊடகக் கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், போன்ற செயற்பாடுகளை அரசு நினைத்தால் ஒருமாத காலத்துக்குள் செய்து முடிக் கலாம்" - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

### மீன்பிடி

ளின் நலனுக்காவே தாம் பாஸ் நடைமுறையை மீண்டும் கொண்டு வருகிறார்கள் என்று படையினர் கூறினர் என்று மீனவர்கள் உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தனர்.

நீங்கள் ஒத்துழைப்பு வழங்குங்கள். உங்களின் பாதுகாப்புக் காகத்தான் இந்தப் பாஸ் நடைமுறை. இங்கிருந்து இந்தியாவுக்கும் அங்கிருந்து இங்குமாகக் கடலால் போக்குவரத்துச் செய்கிறார்கள். தங்கம் கஞ்சா என்பவற்றையும் கடத்துகிறார்கள். இவற்றையெல்லாம் தடுப்பதற்காகத்தான் மீண்டும் பாஸ் முறையைக் கொண்டு வருகின்றோம் என அந்தச் சந்திப்பில் படை அதிகாரி தம்மிடம் தெரிவித்தார் என்றும் மீனவர்கள் கூறினர்.

கடல் வழியாகப் பயங்கரவாதிகள் ஊடுருவப் போகிறார்கள் என்று மேலிடத்தில் இருந்து தமக்குத் தகவல் வந்ததால் தாம் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்திருக்கிறார்கள் என்று அரியாலையில் உள்ள படையினர் தம்மிடம் தெரிவித்தனர் என்றும் அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையே வடமராட்சிகிழக்குப் பகுதியில் உள்ள காவலரண்களில் கடற்படையி னருடன் சேர்ந்து இராணுவத் தினரும் கடந்த ஓரிரு நாள் களாகப் பணியில் ஈடுபட்டுள் ளார்கள் என்று அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (உ-ற-14)

### 'டெம்பஸ்ட்'

கலதாரி ஹோட்டலில் ஆரம்பமாகியுள்ளது.

அமெரிக்க பசுபிக் பிராந்திய கட்டளைத் தலைமையகம் மற்றும் இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு தலைமை அலுவலகம் ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக கூட்டுப் படைகளின் தளபதி ஜெனரல் ஜகத்ஜய சூரிய கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தியுள்ளார்.

எதிர்வரும் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் அமெரிக்கா, நியூசிலாந்து, நேபாளம், வியட்நாம், பங்களாதேஷ், கனடா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, ஜப்பான், தாய்லாந்து, மலேசியா, மொங்கோலியா, சிங்கப்பூர், மாலைத்தீவு மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 46 பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

ஆசிய பசுபிக் வலயத்தில் திடீர் என்று ஏற்படும் அனர்த்தங்கள் அல்லது அவசர தேவைகளின் போது நாடுகளுக்கிடையில் ஏற்படவேண்டிய அந்நியோன்ய செயற்பாடுகள் மற்றும் செயற்றிட்ட அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

நேற்றைய நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், அமெரிக்க பசுபிக் கட்டளை அதிகாரிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் விசேட அழைப்பாளர் கலந்து கொண்டனர்.(ற-5)

### முள்ளியவளை

உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

முல்லைத்தீவில் முறிப்புப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாலசந்திரன் விஜயரூபன் (வயது 28) என்ற குடும்பஸ்தரும், அவருடன் சதன் என்று அழைக்கப்படும் திருகோணமலையைச் சேர்ந்த மற்றுமொருவருமே கைது செய்யப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத்தின் போது ஒருவர் தப்பியோடிவிட்டார் என்றும் பொலிஸ் தரப்புத் தகவல்கள் குறிப்பிட்டிருந்தன.

மூன்று வாகனங்களில் சிவில் உடையில் வந்தவர்களாலேயே, இருவரும் கைது செய்யப்பட்டனர் என்றும் கைது செய்யப்பட்டமைக்கான எந்தவொரு ஆவணங்களும் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் மேலும் கூறப்படுகின்றது. அதனால் அவர்களைக் கைது செய்தது யார் என்று தெரியாத நிலையில் வவுனியாவிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்தியக் கிளையில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற-5)

### இந்திய

லில் 4 மீனவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் மருத்துமனைகளின் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து 468 விசைப்படகுகளுடன் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்ற போது கச்சதீவுக்கு அண்மித்த கடல் பகுதியில் நள்ளிரவு மீன் பிடியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 20 படகுகள் மீதும் மீனவர்கள் மீதும் சரமாரியான தாக்குதலை இலங்கைக் கடற்படையினர் நடத்தினர் என்று கூறப்படுகின்றது.

நள்ளிரவு நேரம் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் சம்பவத்தால் இந்திய மீனவர்களது வலைகளும் மீன் படி உபகரணங்களும் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் 5 இலட்சம் ரூபாவுக்கு மேல் தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கரை திரும்பியுள்ள மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-14)

### மீனவர்கள்

இந்த நிலையில் நேற்றும் இலங்கையில் இருந்து 13 படகுகளுடன் 58 மீனவர்களும் இந்தி யாவில் இருந்து 10 படகுக ளுடன் 17 மீனவர்களும் விடு விக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை நேற்று 78 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் இந்தியக் கடலோரக் காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ற-14)

## பாடசாலைகள் ஹொக்கிப் போட்டி யாழ்ப்பாணத்தில் இன்று ஆரம்பம்

வலி.வடக்கு ஏப். 2
இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் நடத்தப்படும் அகில இலங்கைப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் கோலாகல மாக இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

அகில இலங்கை மட்டத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் இம்முறை 48 பாடசாலைகளின் அணிகள் கலந்து கொள்ளவுள்ளதாக இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் செயலாளர் எம்.விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போட்டியில் 30 பாடசாலைகளின் அணிகள் கலந்து கொண்டதாகவும் இம்முறை அதிக எண்ணிக்கையான அணிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாணத்தில் போட்டிகளை நடத்துவதற்கு தென்னிலங்கைப் பாடசாலைகளின் முழுமையான ஒத்துழைப்பும் ஆதரவும் கிடைத்துள்ளமையால் மீண்டும் அதனைஇங்குநடத்துவதாகவும் அவர் கூறினார். (த-86)

# மன்னாரில் உதைபந்தாட்டப் போட்டிக்கு நடுவராக பெரும்பான்மை இனத்தவர்

## மாவட்ட லீக் கடும் கண்டனம்

மன்னார், ஏப்.2
மன்னார் பிரதேச செயலக மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அநுராதபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட சிங்களநடுவர்களைக்கொண்டு நடத்தப்பட்டமைக்கு மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் தமது கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மன்னார் பிரதேச செயலரும் மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியாளரும் இணைந்தே இதனைச் செய்துள்ளதாக மன்னார் லீக் குற்றஞ் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் பிரதேச செயலக மட்ட கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி கடந்த சனி,ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்தப் போட்டியை மன்னார் உதைபந்தாட்ட லீக்கை நடத்தித் தருமாறு உதவிப்பிரதேச செயலாளர் மற்றும் விளையாட்டு அதிகாரி ஆகியோர் எம்மிடம் கோரினர்.

இதற்கான ஒழுங்குகளை நாம் மேற்கொண்ட நிலையில் மன்னார் மாவட்ட செயலகத்தைச் சேர்ந்த விளையாட்டு அதிகாரிகள் தங்களின் சுயஇலாபத்துக்காக அதை தடுத்து நிறுத்திச் சிங்கள நடுவர்களைக் கொண்டு வந்து போட்டியை நடத்தியுள்ளனர்.

இந்த விடயம் தவறு எனவும், மாவட்ட நடுவர்களைப் பயன்படுத்துமாறும் கழகங்கள் கோரியவேளை அந்தக் கழகங்களை உதாசீனப்படுத்தி அவ்வாறு கதைத்தால் 5 வருடங்கள் உங்களைப் போட்டிகளில் இருந்து இடைநிறுத்துவோம் எனவும் அச்சுறுத்தியுள்ளனர்.

அச்சுறுத்தலுக்குப் பயந்தே கழகங்கள் விளையாடச் சம்மதித்தன. ஆனால் கிறீன்ட பீல்ட் கழகம் மட்டும் போட்டியில் பங்குபற்றாமல் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளது என்றுள்ளது. (த-56)

# டயமன்ஸ், கருணாகரன் அடுத்த சுற்றுக்கு

யாழ்ப்பாணம், ஏப்.2
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டங்களில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம்,வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழகம் என்பன வெற்றியீட்டி அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற்றுள்ளன.

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் அணிக்கு 7 நபர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.



நேற்றைய ஆட்டத்தின் ஒரு காட்சி

இதில் நேற்று இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகமும்,அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக 'பி' அணியும் மோதிக் கொண்டன. ஆட்டம் ஆரம்பமாகி முடியும் வரை டயமன்ஸ் அணியின் பக்கமே பந்து முழுமையான ஆதிக்கத்தில் இருந்தது. இடைவேளைக்கு முன்னர் டயமன்ஸ் அணி வீரர்களான ரஜீவ், பிரேம்குமார் ஆகியோர் தலா ஒரு கோலைப் போட்டு தமது அணியை முன்னிலைப்படுத்தினர்.

இடைவேளையின் பின்னர் ஆட்டம் ஆரம்பமானதும் டயமன்ஸ் அணி வீரர்கள் கோல் மழை பொழிவதிலேயே குறியாக இருந்தனர். இவர்கள் இடைவேளைக்குப் பின்னர் 4 கோல்களை அடித்து அசத்தினர். அவ்வணி சார்பாக நளின் 3 கோல்களையும், பிறேம்குமார் ஒரு கோலையும் அடித்தனர்.

ஆட்டம் முடிவடையும் வரை அல்வாய் நண்பர்கள் அணி வீரர்களால் கோல் எதனையும் போட முடியவில்லை. இதனால் 6:0 என்ற அடிப்படையில் டயமன்ஸ் அணி வெற்றிபெற்றது.

அடுத்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் வல்வெட்டி கருணாகரன் அணியும், நவிண்டில் கலைமதி 'ஏ' அணியும் மோதின. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இவ்வாட்டத்தில் ஆட்டம் ஆரம்பமாகி 12 ஆவது நிமிடத்தில் கருணாகரன் அணியைச் சேர்ந்த இளவரசன் தனக்கு கிடைத்த பந்தொன்றை மிகவும் நேர்த்தியாக கோல் கம்பங்களுக்குள் புகுத்தி கோல் ஒன்றைப் பெற்றார்.

இதனை அடுத்து இரு அணிகளின் ஆட்டத்திலும் சூடு பிடிக்கத் தொடங்கியது. இரு அணியினரும் கோல்களைப் போடுவதற்கு கடும் பிரயத்தனம் செய்தனர். ஆனால் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்படும் வரை மேலதிக கோல்கள் போடப்படாத நிலையில் 1:0 என்ற அடிப்படையில் கருணாகரன் அணி முன்னிலை பெற்றது.

இடைவேளையின் பின் இரு அணியினரும் அணியில் பல்வேறு மாற்றங்களை மேற்கொண்டு புது வியூகத்துடன் களம் புகுந்தனர். இரு அணியினரும் முன்னரை விட பன்மடங்கு வேகத்துடன் கோல் அடிப்பதில் முனைப்புக் காட்டினர். இச் சூழ்நிலையில் ஆட்டம் ஆரம்பமாகி 10 ஆவது நிமிடத்தில் கலைமதி அணி வீரர் பானுப்பிரியன் மிகவும் அருமையான கோல் ஒன்றைப் பெற்று 1:1 என்று ஆட்டத்தினைச்சமநிலைக்குக்கொண்டு வந்தார். இதனைத் தொடர்ந்து இரு அணியினரும் கோல்கள் போடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அது கைகூடவில்லை. இறுதியில் 1:1 என்ற அடிப்படையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

தொடர்ந்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் கருணாகரன் அணியைச் சேர்ந்த தர்சிகன், வஜி, சுதாகரன் மற்றும் வீந்தன் ஆகியோர் நான்கு கோல்களைப் பெற கலைமதி அணியைச் சேர்ந்த பானுப்பிரியன், விஜேந்திரன் ஆகியோர் மட்டுமே கோல் அடித்தனர். இதன்ால் 5:3 என்ற அடிப்படையில் கருணாகரன் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த ஆட்டம் ஒன்றில் தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் வருகை தராத காரணத்தால் பலாலி விண்மீன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

அடுத்து இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம், அல்வாய் பாரதி விளையாட்டுக்கழக 'பி' அணியை 7: 0 என்ற கோல்களால் தோற்கடித்தது. (த-400)

## வெற்றி பெற்ற அணிகள்

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலானஉதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மருதநிலா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈஸ்வரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

ஆட்டநேரமுடிவில் இரு அணியினரும் எது வித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றிதோல்வியைக் காண்பதற்காக 5சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் மருதநிலா விளையாட்டுக்கழக அணி 3:2 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்ஜிரா விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

ஆட்டநேரமுடிவில் இரு அணியினரும் தலா ஒரு கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றிதோல்வி காண்பதற்காக 5சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் அல்ஜிரா விளையாட்டுக்கழகஅணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## போட்டிகளுக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.2
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் வடமராட்சி பகுதிக்கு உட்புட்ட கழகங்களுக்கு இடையில் வலைப்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்டம் (செற்றப்) ஆகிய போட்டிகள் நடத்தவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வடமராட்சி பகுதிக்கு உட்பட்ட கழங்கங்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படி வங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக தலைவர் கேட்டுள்ளார். (த-400)

## அரியாலையில்-சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 2
95ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட மாட்டுவண்டிச் சவாரிச் சங்கத்தின் உதவியுடன் நோர்வே வாழ் அரியாலையூர் மயில்வாகனம் ஸ்ரீதேவா, தேவராசா குலேந்திரன் ஆகியோரின் ஆதரவுடன் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி 6ஆம் திகதி அரியாலை மத்திய விளையாட்டுக்கழக திறந்தவெளி மைதானத்தில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும். (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2
தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் தொண்டமானாறு விநாயகர் சனசமூக நிலைய முன்றிலில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணிமோதவுள்ளது.

7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணிமோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை பி.ப. 3.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஏப். 2
வவுனியா உதைபந்தாட்ட லீக் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலானஉதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் வவுனியாநகர சபை மைதானத்தில் இடம் பெற்றுவருகின்றன.

இன்று மாலை 4 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஈகிள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வடதாரகை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், ஏப். 2
அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 74ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள்,நிலைய சிறார் களுக்கான ஓட்டப் போட்டிகள் என்பன எதிர்வரும் 6ஆம் திகதி அராலி ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.2
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் 'உதயன்' பத்திரிகையும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் பருத்தித் துறை திக்கமுனை விளையாட் டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை பி.ப. 3.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் 'பி' அணியை எதிர்த்து டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை4.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக 'ஏ' அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# ரபேல் நடாலை வீழ்த்தி ஜோகோவிச் சாம்பியன்

அமெரிக்காவில் நடந்த சோனி ஓபன் ரென்னிஸ் போட்டியில், சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.
இறுதிப் போட்டியில் முதல்நிலை ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடாலுடன் மோதிய ஜோகோவிச் 6-3 என்ற கணக்கில் தனது முதல் செற்றைக் கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செற்றிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய அவர் 6-3, 6-3 என்ற நேர் செற்களில் வென்று மியாமி மாஸ்டர்ஸ் சோனி ஓபன் தொடரில் 4ஆவது (2007, 2011, 2012, 2014) முறையாகச் சம்பியன் கிண்ணத்தை தட்டிச் சென்றார்.
நட்சத்திர வீரர் நடால் 2005 இல் பெடரர் , 2008 இல் டேவிடென்கோ, 2011 மற்றும் 2014 இல் ஜோகோவிச் என இறுதிப்போட்டியில் கிண்ணம் வெல்லும்


நோவாக் ஜோகோவிச்

வாய்ப்பை 4 முறை நழுவவிட்டுள்ளார்.

***மகளிர் இரட்டையர் பிரிவு***

சோனி ஓபன் ரென்னிஸ் மகளிர் இரட்டையர் பிரிவில் சுவிஸ் நாட்டை சேர்ந்த அனுபவ வீராங்கனை மார்டினா ஹிங்கிஸ், ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த சேபைன் லிசிக்கி ஜோடி சம்பியன் பட்டம் வென்றது. இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் எகடரினா மகரோவா-எலினா வெஸ்னினா ஜோடியுடன் மோதிய ஹிங்கிஸ் ஜோடி 4-6 என்ற செற் கணக்கில் முதல் செற்றை இழந்து பின்தங்கியது. இரண்டாவது செற்றில் ஹிங்கிஸ் - லிசிக்கி இணை 6-4 என கைப்பற்றி 1-1 என சமநிலை ஏற்படுத்தியது. கடைசி செற்றில் அபாரமாக விளையாடிய ஹிங்கிஸ் ஜோடி 4-6, 6-4, 10-5 என்ற செற் கணக்கில் போராடி வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. (கு)


லூயிஸ் ஹமில்டன்

# மலேசியா போர்முலா 1 சம்பியனானார் ஹமில்டன்

கார் பந்தயங்களில் மிகவும் பிரபலமான போர்முலா ஒரு கார்பந்தயம் இந்த ஆண்டில் உலகம் முழுவதும் 19 சுற்றுகளாக நடத்தப்படுகிறது.
மலேசிய கிராண்ட் பிரீ பார்முலா ஒரு கார் பந்தயத்தில் மெர்சிடிஸ் அணி வீரர் லூயிஸ் ஹமில்டன் சம்பியன் பட்டம் வென்றார். 310.408 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்த பந்தயம் 56 சுற்றுகளை கொண்டது.
இந்த தொடரின் 2ஆவது சுற்றான மலேசிய கிராண்ட்பிரீ போட்டி செபாங் சர்வதேச ஓடுதளத்தில் நடந்தது. வழக்கம் போல் 11 அணிகளை சேர்ந்த 22 வீரர்கள் மிக வேகத்தில் காரை செலுத்தினார்கள்.
இதில் ஹமில்டன் 56 சுற்றுக்களை ஒரு மணி, 40 நிமிடம், 25.974 விநாடியில் கடந்து முதலிடம் பிடித்தார். 2008ம் ஆண்டு உலக சம்பியனான ஹமில்டன், மலேசிய போட்டியில் தனது முதல் வெற்றியை 8ஆவது முயற்சியில் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.
சக மெர்சிடிஸ் வீரர் நிகோ ராஸ்பெர்க் (+17.3 விநாடி) இரண்டாவதாக வந்தார். ரெட் புல் ரேசிங் ரெனால்ட் அணியின் நடப்பு உலகச் சம்பியன் செபாஸ்டியன் வெட்டல் (+24.5) மூன்றாவது இடம், பெர்ராரி அணி நட்சத்திர வீரர் பெர்னாண்டோ அலான்சோ (+35.9) நான்காவது இடம் பிடித்தனர்.
போர்ஸ் இந்தியா மெர்சிடிஸ் அணி வீரர் நிகோ ஹல்கன்பர்க் (+47.1) ஐந்தாவது இடம் பிடித்தார்.

“மற்றப் பந்து வீச்சாளர்கள் இந்தச் செய்கையில் சிறந்து விளங்கும்போது நான் மட்டும் ஏன் இதை தவிர்த்துவிட்டுப் பின் தங்கி இருக்க வேண்டும் எனவும் கூறினார்.”


அஷ்வின்

# பந்துவீச்சில் புது உத்தி

இந்திய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர் அஷ்வின் இனி முழுக்கை சட்டை அணிந்து பந்துவீசப் போவதாகத் தெரிவித்துள்ளார். இவர் மேற்கிந்தியத் தீவுகளின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைன் பாணியில் பந்து வீசப்படுவதாக பேசப்படுகிறது.
இது குறித்து மிர்புரில் ஊடகங்களுக்கு பேட்டியளித்த அஷ்வின், தனது பந்து வீச்சில் சில மாற்றங்களைக் கொண்டு வர விரும்புவதாகவும், இதற்காக முழுக்கை சட்டை அணிந்து விளையாட போவதாகவும் தெரிவித்துள்ளார்.
சர்வதேச கிரிக்கெட்டில் சில ஓப்பிரேக் பந்து வீச்சாளர்கள் சில புதுமைகளை கொண்டு வந்ததன் மூலம் பல முன்னேற்றங்களை அடைந்துள்ளதாகவும், மேலும் முழங்கையின் வளைவு சற்று கூடுதலாக இருந்தாலே அதிகமான நன்மைகள் கிடைப்பதாகவும், மற்றப் பந்து வீச்சாளர்கள் இந்தச் செய்கையில் சிறந்து விளங்கும்போது நான் மட்டும் ஏன் இதை தவிர்த்துவிட்டுப் பின் தங்கி இருக்கவேண்டும் எனவும் கூறினார்.
சுழற் பந்துவீச்சாளர்கள் பந்தை சுழற்றும் போது, முழங்கை அளவை கணக்கிடுவார்கள். இது 15 பாகை அதிகமாக இருந்தால் பந்து வீச்சாளர்களுக்கு தடை விதிக்கப்படும். இத்தகைய தடைகள் இருப்பினும் அஷ்வினின் இந்தக் கருத்து பலரையும் வியப்படையச் செய்துள்ளது. (கு)

# அரையிறுதி வாய்ப்பை இழந்தது இலங்கை மகளிர்

மகளிருக்கான உலகக் கிண்ண 20/20 கிரிக்கெட் தொடரின் அரையிறுதிச் சுற்றுக்கு இங்கிலாந்து அணி தகுதி பெற்றுள்ளது.
பி குழுவுக்கான போட்டியில் இலங்கை அணியை 7 இலக்குகளால் வெற்றிகொண்டதன் மூலம் இங்கிலாந்து அணி இந்த வாய்ப்பை பெற்றுக்கொண்டது. போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகள் இழப்புக்கு 85 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.
86 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 16 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை எட்டியது.
இதன்பிரகாரம் இந்தியா, இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் அரைஇறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறும் வாய்ப்பை இழந்துள்ளன. (கு)





டோனி

# டோனிக்கு சிக்கல்?

இந்திய அணியின் அணித்தலைவர் டோனிக்கு ராஞ்சி வருமான வரித்துறையிடம் இருந்து புது நெருக்கடி வந்துள்ளது.
அமரபல்லி குழுமத்தின் விளம்பரத் துதராக டோனி இருந்து வருகிறார். இந்நிலையில் அதன் தலைவர் அனில் சர்மா ரூபா 75 கோடி மதிப்புள்ள நான்கு காசோலையை டோனியிடம் வழங்கியுள்ளார்.
நிதி ஆண்டு 2011 - 2012 ஆம் ஆண்டை பொறுத்தவரை இந்தக் காசோலையும் கணக்கில் வரும் என்பதால் சிக்கல் எழுந்துள்ளது.
மேலும் அவரது மனைவி சாக்ஷி சிங் ராவத் அமரபல்லி குழுமத்தில் 25 சதவீத பங்குகளை வைத்திருக்கிறார்.
இது சமந்தமாக வருமான வரித்துறை டில்லி மற்றும் உத்திரப் பிரதேசத்தில் உள்ள அமரபல்லி குழுமத்தின் அலுவலகங்களைச் சோதனையிட்டதாகச் செய்தி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
ஊடகங்களின் கேள்விக்கு டோனி இது சமந்தமாக கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. இவரின் செய்தி தொடர்பாளர் தெரிவிக்கையில்: தனக்கு டோனியின் நிதி சமந்தமாக ஏதும் தெரியாது மேலும் அந்த காசோலை டோனி, அமரபல்லியின் மீது செய்யப்பட்டிருக்கும் முதலீடுக்காகப் பெறப்பட்டது என தெரிவித்துள்ளார். (கு)

# பரிதாபத்துடன் வெளியேறியது பாகிஸ்தான்



சர்வதேச 20/20 உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி பங்களாதேஷில் இடம்பெற்ற வருகிறது. இதில் நேற்று இடம்பெற்ற தீர்க்கமான போட்டியில் பாகிஸ்தானை 84 ஓட்டங்களால் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்தது மேற்கிந்தியத்தீவுகள்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிராவோ 46 ஓட்டங்களையும் சிம்மொன்ஸ் 31 ஓட்டங்களைப் பெற்றதோடு சமி 28 பந்துகளில் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் பெற்றார்.

அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணி 17.5 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்று 84 ஓட்டங் களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது. போட்டியின் ஆட்டநாய கனாக பிராவோ தெரிவு செய்யப்பட்டார். (த-400)

IIS புதிய தகவல் தொழில்நுட்ப பரிமாணத்துடன்...
யாழ் குடாநாட்டில் ....... IIS இடமிருந்து மட்டுமே..
புதிய பிரிவுகள் ஆரம்பம்
05.04.2014
* Certificate in Ethical Hacking
* Certificate in Android Mobile Apps Development
* Certificate in Telecommunication
* Certificate in System Development
* Certificate in Web Techniques
* Certificate in Engineering Drawing & AutoCAD
* Certificate in Computerized Accounting
14.04.2014க்கு முதல் பதிவுகளை மேற்கொள்ளும் அனைவருக்கும் பதிவுக்கட்டணம் இலவசம்
இரண்டு தசாப்தத்தை தொடும் இமாலய வெற்றியுடன் IIS இடமிருந்து
✓ அரச , தனியார் உத்தியோகத்தர்களுக்கான விசேட மாலைநேர வகுப்புக்கள். [மாலை 6:00 மணி – 8:30 வரை]
✓ கா.பொ.த(சா.த). கா.பொ.த(உ/த) மாணவர்களுக்கான ICT வகுப்புக்கள்.
IIS "கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS இல் இணைவதன் மூலம் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்"
100, Clock Tower Road , Jaffna. TP: 021 222 2831 | 077 666 16 06

உடன் தேவை
தனியார் கல்வி நிலையத்திற்கு அலுவலக உதவியாளர் (Clerk) (பெண்கள்) தேவை. மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.
T.P.: 0774696695
(உ13134)

வேலைவாய்ப்பு
1) விற்பனை பிரதிநிதிகள் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா) - ஆண்கள்.
2) விற்பனை ஊக்குவிப்பாளர்கள் - ஆண்/பெண் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா).
* நுகர்வோரிடம் நேரடியாகச் சென்று விற்பனையை ஊக்குவிக்க வேண்டும்.
* பகுதிநேரமாகவும் வேலை செய்யலாம்
* ஒரு நாளைக்கு 1000/= ரூபாவுக்கு மேல் கொடுப்பனவு.
தொடர்புகளுக்கு: 077 401 3887
(16322) (12.3.6)

- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -
Only Official FRENCH Centre
af பிரெஞ்சு மொழி கற்பதற்கு af Alliance Française de Jaffna
FRENCH அரசாங்கம் மற்றும் FRENCH EMBASSY ஆகியன அங்கிகரிக்கும் வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. திருமணம் மூலம் FRANCE, CANADA, SWITWZERLAND செல்பவர்கள், FRENCH கற்க விரும்புவோர் எமது அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES பெறுங்கள்.
புதிய வகுப்புகள் விரைவில்... உடன் பதிவுசெய்யுங்கள்...
61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
அரச தனியார் ஊழியர்கள், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் கூட இப்பயிற்சியில் இணைந்து மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 05.04.2014 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. காலை 11.30-01.00 (இடமில்லை)
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
குறிப்பு - முன்பதிவின் அடிப்படையில் எந்நேரமும் அனுமதிகள் நிறுத்தப்படும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்.
SAAMSON LANGUAGE SCHOOL 119, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 077 621 4567

கொழும்புப் பல்கலைக்கழகத்தின்
Bachelor of Information Technology
2ம் அரையாண்டிற்கான முதல் நாள் விரிவுரைகளை அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களிடமிருந்து இலவசமாக கற்றுக்கொள்ளுங்கள்.
BIT





முதல் நாள் விரிவுரை :- 06-04-2014
நேரம் :- மு.ப 8.30 - பி.ப 4.30

| Module | Lecturers |
|---|---|
| ❖Programming | Gajanan / Garigaraganapathy |
| ❖SAD | Thiviyarajah / Pirasath |
| ❖DBMS | Tharmmendra |
| ❖Maths | Sasikumar |

பதிவுகளுக்கு SMS to 077-9905611
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT Metro Campus - Jaffna
No. 137, K.K.S Road, Jaffna.
www.esoft.lk / Tel : 021 222 4142
HOTLINE : 077 309 9 308

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்.
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
Excellent Teacher's Panel & Individual Attention.
Jaffna Branch : NO. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel : 021 222 4550
Vavuniya Branch : NO. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpuliyamkulam, Vavuniya. Tel : 024 324 5287
Hotlines : 0777585913, 0777222422, 0714299935, 0777730074
Batch 1 : 05.04.2014
Batch 2 : 07.04.2014
Batch 3 : 15.04.2014
Batch 4 : 20.04.2014
கிழமை நாள்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன. அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

சுந்தர்சன் நிறுவனம் 34 ஆம் ஆண்டில் காலடி பதிக்கின்றது
Abans - Highest Sales Achievement 2013 & Winner of the Northern Province 2013
Singer - Gold Group Winner 2014 & A to Z - All Island Winner 2011 & 2012




சிறுவர்களுக்கான பல வர்ண மேசை, கதிரை
கண்ணாடியிலான சாப்பாட்டு மேசை, கதிரை
கணினி மேசை
LED மின் விளக்குகள்
மேலும் பல புதியவரவுகள்...
அன்பார்ந்த வாடிக்கையாள பெருமக்களே : எமது நிறுவனத்தின் முன்னேற்றத்தை விரும்பாத சில விஷமிகள் தமது குறுகிய இலாபத்திற்காக எமது வியாபார மேம்பாட்டினை கொச்சைப்படுத்தி வேண்டத்தகாத வதந்திகளை பரப்பி வருகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளால் எமது வியாபார செயற்திறன் வலுவிழந்து விடவில்லை. தொடர்ந்தும் வாடிக்கையாளர் சேவை திறம்பட நடைபெற்று வருகின்றது என்பதனை யாவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

இன்று மூன்றாம் ஆண்டில் கால்த்தடம் பதிக்கின்றது, யாழ் நகரில் திருமண அழைப்பிதழ்களில் தனித்துவம் வாய்ந்த நிறுவனம்



விவாஹாஸ்
"அதிகூடிய வாடிக்கையாளர்களைக் கொண்ட ஓரே நிறுவனம்"
எமது வெற்றிப் பாதையில் தோளோடு தோள் நின்று ஆதரவளித்த வாடிக்கையாளர்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்
எமது பெறுமதிசேர் வாடிக்கையாளர்களுக்காக...
24.03.2014 - 26.06.2014 வரை
5000/= மேல் கொள்வனவு செய்யுங்கள்! இந்தியாவிற்கு விமானத்தில் பறந்திடுங்கள்!!
FREE Ticket பரிசு மழை
1ஆம் பரிசு இந்தியாவிற்கான இரு வழிப் பயணச்சீட்டு 2ஆம் பரிசு இந்தியாவிற்கான ஒரு வழிப் பயணச்சீட்டு 3ஆம் பரிசு கண்டிக்கான இரு வழிப் பயணச்சீட்டு
244, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் மேலதிக தொடர்புகளுக்கு 021 221 9999

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# அன்பினால் உலகை ஆள்வோம்

ராஜராஜன்

அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்" என்று எவரோ கூறியது நினைவுக்கு வருகின்றது. அன்பு என்னும் கடல் பிரவாகித்துச் செல்லும்போது அதனைத் தடுப்பதற்குரிய வல்லமை எவருக்குமே இருக்க முடியாது.

நல்ல இதயங்கள்தான் உண்மையான அன்பு பிறக்கும் இடங்களாகக் காணப்படுகின்றன. இந்த இதயங்கள் நல்லவர்களிடத்தில் மட்டுமே இருக்க முடியும். வெறுப்பு, குரோதம், காழ்ப்புணர்வு, கோபம், வஞ்சகம் நிறைந்தவர்களிடத்தில் இதனைக் காணவே முடியாது. இவர்களின் இதயங்கள் அன்பைக் காணாத பாலைநிலங்களாகவே காட்சியளிக்கின்றன.

மனிதர்களிடம் மட்டுமல்ல, ஐந்தறிவு படைத்த மிருகங்களிடமும் அன்பு செலுத்தும் உயர்ந்த பண்பை நாம் காண முடியும். பசுவொன்று தான் ஈன்ற கன்றை ஒருகணம் காணாவிட் டால், அம்மா என உரத்த குரலில் கத்துவதும் அன்பின்வெளிப்பாடுதான். குரங்குகள் மரங்களின் மீது ஏறி கிளைக்குக் கிளை தாவும்போதும் தமது குட்டிகளைக் காவிச் செல்கின்றன. இவ்வாறு மிருகங்கள் அன்பை வெளியிடும் சந்தர்ப்பங்கள் பல காணப்படுகின்றன. அண்மையில் கூட தாய் யானையொன்று இறந்ததைப் பொறுக்க முடியாத அதன் குட்டி, தாயைச் சுற்றிச் சுற்றி வந்து அழுவதும், மண்ணை அள்ளிவீசுவதுமாக அவதியுள்ள நிகழ்வு பலரது நெஞ்சங்களையும் துடிதுடிக்க வைத் தது. தனது தாய் மீது கொண்ட தாளாத அன்பு காரணமா கவே அந்த யானைக் குட்டி அவ்வாறு நடந்து கொண்டது.

இளம் சிறார்களுக்கு நாம் கல்வி புகட்டும்போது அவர்களை அதட்டுவோமாயின் பயன் எதுவும் கிடைக்காது. மாறாக அவர்கள் கல்வியின் மீது வெறுப்புக் கொள்வதற்கே இது வழி வகுக்கும். இதைவிடுத்து பொறுமையுடன் அன்பையும் கலந்து நாம் கற்பிக்கும்போது அவர்கள் விருப்புடன் கல்வி கற்பதை அவதானிக்க முடியும். எம்மில் சிலர் எந்த வேளையிலும் சிடுசிடுப்புடன் காணப்படுவார்கள். தமது கண்களில் தென்படும் எவரையும் ஏதோ காரணம் கூறி வன் சொற் களால் வதைப்பதையே இவர்கள் வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். இத்தகையவர்களை நெருங்குவதற்கே ஏனையவர்கள் அஞ்சும் நிலையில் இந்தக் குணநலன் கொண்டவர்கள் தனிமையில் இருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள். ஆனால் ஏனையவர்களை அன்பினால் அரவணைப்பவர்களைச் சுற்றி எப்போதுமே ஒரு கூட்டம் காணப்படும். இது அன்புக்கு அடிமையான கூட்டம் என்று கூறத் தேவையில்லை.

வேறு சிலர் இதயம் நிறைந்த அன்பைக் கொண்டிருப்பார்கள். ஆனால் இதை எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதை அறியாதவர்களாக இருப்பார்கள். அறிந்திருப்பவர்களும் எங்கே அன்பை வெளிக்காட்டினால் மற்றவர்கள் மதிக்காமல் விட்டு விடுவார்களோ என்ற தேவையற்ற நினைப்புகளில் மூழ்கியிருப்பார்கள். இதனால் இவர்களும் மற்றவர்களால் வெறுத்து ஒதுக்கப்படுவார்கள். மிருகங்களைப் பொறுத்த வரையில் தமக்குப் பிடித்தவர்களிடத்தில் அன்பை வெளிக் காட்டுவதில் நாய்களுக்கு எப்போதுமே முதலிடம் உள்ளது. அன்பு மட்டுமல்ல நன்றியுணர்வும் இவைகளிடம் அதிகளவில் காணப்படும். பல தருணங்களில் தமது எஜமான்களின் உயிர்களை நாய்கள் பாதுகாத்துள்ளன. தனது எதிரிகளைக் கண்டால் வேகமாக எதிர்த்துப் போராடும் குணமுடைய நாய்கள், தமது விருப்பத்துக்கு உரியவர்களிடம் அன்பைச் செலுத்துவ தற்கு ஒருபோதும் தவறுவதில்லை. சில குடும்பங்களில் கணவன் மனைவிக்கு இடையில் எப்போதுமே சச்சரவு நிலவிக் கொண்டிருக்கும். இதனால் தமது பிள்ளைகளிடத்தில் கூட அன்பு செலுத்துவதற்கு இவர்களுக்கு அவகாசமும் கிடைக்காது. அவகாசம் கிடைத்தாலும் தமது மனதிலுள்ள கோபத்தைத் தமது பிள்ளைகள் மீதே காட்டு வார்கள். இதனால் அன்பையே காணாத அந்தப் பிள்ளைகள் எதிர்காலத்தில் மன இறுக்கம் மிக்கவர் களாகளது வக்கிரபுத்தி படைத்தவர்களாகவும் மாறிவிடுவார்கள். இளவயதில் தாம் தமது பெற்றோர்களால் புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கி வைக்கப் பட்டமை, இவர்களின் மனங்களில் எப்போதுமே ஒரு தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். இதனால் இவர்களும் மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்த இயலாத மன நிலைக்கு ஆளாகிவிடுகின்றனர். சில வேளை இவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களும் உருவாவதுண்டு.



நமது முன்னோர்கள் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறைமையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதால், ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தியதோடு, பாதுகாப்பான வாழ்க்கையை யும் அனுபவித்து வந்தனர். ஆனால் காலத்தின் மாற்றத்துக்கேற்ப இதிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கூட்டுக் குடும்பங்கள் கலைந்து தனிக் குடும்பங்களாக மாறியுள்ளதுடன் முதியோர்கள் குடும்பங்களிலிருந்து ஒதுக்கி வைக்கப்படும் நிலையும் உருவாகியுள்ளது. இதற்கு ஏற்றாற்போன்று முதியோர் இல்லங்களும் பெருகிக் காணப்படுகின்றன. முதியோர்கள் இந்த இல்லங்களில் தமது எஞ்சிய வாழ்நாள்களைக் கழிக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றனர். உறவுகளுடன் கொஞ்சிக் குலாவி மகிழ்ச்சியை அனுபவித்த இவர்கள் முன்பின் தெரியாதவர்களுடன் இருக்க வேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு ஆளாகின்றமை மாறாத சோகத்தை ஏற்படுத்தி வைக்கிறது. எவருக்கும் அவர்களது இளமைக் காலத்தைவிட முதுமைப் பருவத்திலேயே அன்புக்குரியவர்களின் அன்பும், ஆறுதலும் தேவைப்படுகின்றது. பணம், உணவு எல்லாமே இதற்கு அடுத்த இடத்தைத்தான் வகிக்கின்றன. ஆனால் அந்த முதியவர்களின் உறவுகள் இதை நினைப்பதாகவே தெரியவில்லை. ஏதோ கடமை முடிந்து விட்டது என்ற போக்கிலேயே அவர்கள் செயற்படுகின்றனர். எம்மைப் பெற்று, வளர்த்து ஆளாக்கிய அந்த அன்புத் தெய்வங்களின் கண்களில் நீரை வரவழைப்பது அந்த தெய்வத்துக்கும் பொறுக்காது.

இன்று பணமே எங்கும் ஆட்சி புரிகின்றது. அன்பு, பாசம், உறவு எல்லாமே இதைக் கிட்ட நெருங்க முடியாத நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றன. சொந்த உறவுகள் கூட பணத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றன அல்லது, அழிக்கப்படுகின்றன. வெறும் அன்பை எம்மீது சுமத்துவதில் பயனென்ன, பணம் இல்லாத இவர்களின் அன்பையும், பாசத்தையும் யார் எதிர்பார்த்தார்கள் என்ற ரீதியில்தான் உறவுகளின் சிந்தனைகள் நீண்டு செல்கின்றன. இதனால் அன்புக்கு உரிய மதிப்புக் கிடைப்பதில்லை.

ஏழ்மை நிலையிலிருந்த குசேலரும், கிருஷ்ண பரமாத்மாவும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் அந்தஸ்தில் மலைக்கும், மடுவுக்குமுள்ள வேறுபாடு இருவருக்குமிடையில் காணப்பட்டது. ஒருநாள் தனது நண்பரைக் காணவேண்டும் என்ற தவிப்பு குசேலரிடத்தில் எழுந்தது. ஆனால் வெறும் கையுடன் செல்லக் கூடாது என்ற எண்ணத்தில் சிறிது அவலை எடுத்து ஒரு துணியில் வைத்துக் கொள்கின்றார். வெகுதூரம் நடந்து சென்று கிருஷ்ணனின் மாளிகையை அடைகின்றார். அவரைப் பார்த்ததும் கிருஷ்ணன் ஓடோடி வந்து குசேலரைத் தழுவிக் கொண்டதுடன் எனக்கு என்ன கொண்டு வந்தாய் என்று வினவுகின்றார். குசேலர் தாம்கொண்டு வந்த அவலை அவரிடம் கொடுக்கின்றார். கிருஷ்ணனும் ஆவலுடன் அவலை உண்ணுகின்றார். தூய அன்பின் வெளிப்பாட்டுக்கு இதுவொரு சிறிய உதாரணம். நாமும் எமது இயல்புக்கு ஏற்ற வகையில் மற்றவர்களிடத்தில் அன்பைச் செலுத்துவோம். அன்பு என்பது கொடுக்கக் கொடுக்க குறையாதது. எமது இதயத்தில் தொடர்ந்து சுரக்கக் கூடியது. அன்பினால் எமது இதயங்கள் நனையும்போது நாமும் மகிழ்ச்சியுடனும் வளமாகவும் வாழ முடியும்.






திடீரென விக்கல் வருகிறது. தண்ணீர் குடித்ததும் காணாமற் போகிறது. அது எப்படி என்று சிந்தித்திருக்கிறீர்களா?


இந்த விக்கல், தும்மல், கொட்டாவி, பசி, பட்டினி, தூக்கம்... இதெல்லாம் எப்போது வரும் என்று தெரியாது. வந்தாலும் ஏன் என்று கேட்க முடியாது என்று 'முத்து' படத்தில் ரஜினி வசனம் பேசியது போல, விக்கல் எப்போது வரும் என்று யூகிக்க முடியாது. எமது உடலில் வயிற்றையும்; மார்பையும் இணைக்கும் பகுதிக்கு உதரவிதானம் என்று பெயர். இந்தப் பகுதியில் 'ப்ரெனிக் நெர்வ்ஸ்' (Phernic nerves) என்ற நரம்புகள் உள்ளன. இதேபோல 'டயாஃப்ரம்' (Diaphragm) என்ற தோல் போன்ற ஒரு தசையும் எமது மார்பகப் பகுதியில் உள்ளது.

ப்ரெனிக்ஸ் நரம்புகளில் திடீரென்று ஏற்படும் ஒருவித எரிச்சல் (irritation) காரணமாக டயாஃப்ரம் திடீரென்று வேகமாகச் சுருங்கும். அப்போது அதிகப்படியான காற்று நுரையீரலுக்குள் செல்கிறது. இதனால் டயாஃப்ரம் தசை இழுத்துக்கொள்கிறது. இதன் காரணமாக ஏற்படுவதே விக்..விக்.. என்ற ஓசையுடன் நாம் உணரும் விக்கல்.

விக்கலை நிறுத்த தண்ணீரையோ ஒரு பிடி உணவையோ விழுங்கும் போது மேற்சொன்ன செயற்பாட்டில் தடங்கல் (Distraction) ஏற்பட்டு ப்ரெனிக்ஸ் நரம்புகள் இயல்பு நிலைக்குத் திரும்புவதால் விக்கல் நின்றுவிடுகிறது.

# உலகில் 8 இறப்புகளில் ஒன்று வளி மாசடைவால் நிகழ்கின்றது

## WHO வெளியிட்டுள்ள அதிர்ச்சிப் புள்ளி விபரம்



2012 ஆம் ஆண்டு உலகம் முழுதும் சுமார் 7 மில்லியன் பொது மக்கள் வளி மாசடை வின் பக்க விளைவால் இறந்துள்ளதாகவும், இதில் அரைவாசிக்கும் மேற்பட் டோர் மூடப் பட்ட சமையல் அறை யின் அடுப்பில் இருந்து வெளியா கும் மாசடைந்த வாயுவினால் இறப் பைச் சந்தித்திருந்ததாகவும் உலக சுகாதார அமைப்பான உலக சுகாதார நிறுவனம் அதிர்ச்சிப் புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது.

மேலும் எமது சுற்றுச் சூழலில் உடல் சுகா தாரத்தைப் பாதிக்கும் ஒரே தனிப்பட்ட மிகப் பெரிய மாசடைவு, வளி மாசடைவே என் றும் WHO விவரித்துள்ளது. மேலும் உல களவில் ஆசிய நாடுகளி லேயே வீட்டுக்கு வெளி யேயும் உள்ளேயும் மிகப் பெரிய அள வில் வளி மாசடைவு ஏற்பட்டு வருகின் றது. மேலும் இந்த வளி மாசடைவு நேரடியாக வும், பல இடங்களில் மறைமுகமாகவும் மனிதனை மட்டுமன்றி ஏனைய உயிரினங் களையும் பாதிக் கின்றது. இந்த வளி மாச டைவு காரணமாக அதிகளவு மனிதர்கள் உயிரிழப்பது இருதய நோய், மாரடைப்பு, நுரையீரல் புற்று நோய், நாள்பட்ட நுரை யீரல் அடைப்பு ஆகிய நோய்களால் ஆகும்.

WHO அமைப்பின் இயக்குநர் மருத்து வர் மரியா நெயிரா வளி மாசடைவதைத் தடுப்பது குறித்துக் கருத்துத் தெரிவிக் கையில்,

'இன்றைய உலகளா விய சுகாதாரத் தைக் கணக்கெடுத்தால் அதில் வளி மாசடைவு பெரும் தாக்கத்தைச் செலுத்துகின்றது. குறிப்பிட்ட சில சிறிய நடவடிக்கைகள் கூட இதில் பெரிய விளைவை ஏற்படுத்தக் கூடியவை என்றார்.

இதேவேளை உல கில் சுமார் 3 பில்லி யன் பேர் கனிய எண் ணெய், விறகு, மற் றும் திறந்த அடுப்புப் முறை ஆகியவற் றைப் பயன்படுத்து கின்றனர்.

மேலும் இந்தியா வில் மட்டும் இந்தத் திண்ம நிலை எரி பொருள்களை 63% வீதமான மக்கள் பயன்படுத்துகின் றனர். இந்த எரி பொருள்களால் வளி மண்டலத்தை மாசு படுத்தும் வாயுக்கள் அதிகம் வெளியாகின் றன என்பது குறிப் பிடத்தக்கது. இதை விட WHO வெளி யிட்டுள்ள புள்ளி விவ ரத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடு களில் ஆண்களை விடப் பெண்களும் குழந்தைகளுமே வீட்டினுள்ளே ஏற் படும் வளி மாசடை வால் பாதிக்கப்படு கின்றனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை வீட் டுக்கு வெளியே வளி மாசடைவதில் அதிக செல்வாக்கு செலுத் துவது வாகனங்களி லுள்ள டீசல் எஞ்சி னும், தொழிற்சாலைக் கழிவுகளுமே என் றும் அந்த அறிக்கை யில் தெரிவிக்கப்பட் டுள்ளது.




# வாழ்வில் முன்னேற...



★வாழ்க்கை ஒரு சவால்; அதைச் சமாளி.
★வாழ்க்கை ஒரு பரிசு; அதைப் பெற்றுக்கொள்.
★வாழ்க்கை ஒரு சாகசம்; அதில் துணிவு காட்டு.
★வாழ்க்கை ஒரு சோகம்; அதை அடைந்துவிடு.
★வாழ்க்கை ஒரு கடமை; அதை முடித்துவிடு.
★வாழ்க்கை ஒரு விளையாட்டு; அதில் பங்கு கொள்
★வாழ்க்கை ஒரு துன்பம்; அதை எதிர்கொள்.
★வாழ்க்கை ஒரு புதிர்; அதற்கு விடை காண்.
★வாழ்க்கை ஒரு பாடல் அதைப் பாடிவிடு.
★வாழ்க்கை ஒரு வாய்ப்பு அதைப் பயன்படுத்து.
★வாழ்க்கை ஒரு பயணம்; அதைக் கடந்துவிடு.
★ வாழ்க்கை ஒரு வாக்குறுதி; அதைக் காப்பாற்று.
★வாழ்க்கை ஒரு காதல்; அதை அனுபவி.
★ வாழ்க்கை ஒரு வனப்பு; அதன் புகழ்பாடு.
★வாழ்க்கை ஒரு போராட்டம்; அதனுடன் போராடு.
★வாழ்க்கை ஒரு குழப்பம்; அதைத் தீர்த்துவிடு.
★வாழ்க்கை ஒரு இலக்கு; அதைத் தொடர்ந்துவிடு.
★ வாழ்க்கை ஒரு தெய்வீகம்; அதைப் புரிந்துகொள்.

# அதிக வேலை மூளைக்குப் பாதிப்பு



இன்றைய சமுதாயத்தில் சொந்தமாகத் தொழில் செய்பவர்களாக இருந்தாலும் சரி, அடுத்தவர்களிடம் வேலை பார்ப்பவர்களாக இருந்தாலும் சரி குறிப்பிட்ட ஓர் அளவில்தான் உழைக்க வேண்டும். வாழ்க்கையே உழைப்பு என்றால், அது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஒரு வாரத்துக்கு 40 மணி நேரம் தான் உழைப்புக்குச் செலவிட வேண்டும். உடல் உழைப்பை வெளிப்படுத்திச் செய்யும் வேலையாக இருந்தாலும், சிந்தித்துச் செய்யும் வேலையாக இருந்தாலும், இந்தக் கால அளவைத் தாண்டி ஒருவர் வேலை செய்வது அவருக்கு நல்லதல்ல என்கிறது இந்த ஆய்வு.

வாரத்துக்கு 40 மணி நேரத்தையும் தாண்டி வேலை செய்தால், அதனால் ஏற்படும் பாதிப்பு உடனடியாகத் தெரியாது என்று கூறுகிறது ஆய்வு. நடுத்தர வயதைக் கடந்த பின்புதான், இந்தப் பாதிப்பு உங்களுக்குத் தெரிய வரும். குறிப்பாக, மூளையின் சுறுசுறுப்பு குறைய ஆரம்பிக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

தினமும் அதிக நேரத்துக்கு வேலை செய்பவர்கள், எளிதில் சோர்வடைகின்றனர், மன அழுத்தத்துக்கும் ஆளாகின்றனர்.



# நண்பர்கள்
## நல்லவர்களா என்பதைக் கண்டறிவது எப்படி?

நல்ல நண்பர்களை உடையவர்கள், நீண்ட ஆயுளோடு, அதிக சந்தோஷத்துடன், கடினமான சவால்களை சுலபமாகச் சந்திப்பார்கள் என்று சமீபத்திய ஆய்வுகள் பல தெரிவித்துள்ளன.

நல்ல நண்பனுக்கும் கெட்ட நண்பனுக்கும் உள்ள வேறுபாடுகளை எப்படி அறிவது? நல்ல நண்பன், உங்கள் மன அழுத்தத்தைக் குறைக்க உதவி, உங்களது சுய-மரியாதையை மேம்படுத்தி, கஷ்ட காலத்தில் அதனை எதிர்கொள்ள உங்களுக்குத் தைரியத்தை அளிப்பான்.

ஆனால் தீய நண்பன் இவ்வாறான கஷ்டமான சூழ்நிலைகளில் உங்களைத் தவிக்க விட்டுவிட்டுத் தான் விலகிக் கொள்வான்.

யாரையெல்லாம் உங்களது உயிர் நண்பர்களாக நினைக்கிறீர்களோ, அவர்கள் எல்லாம், நீங்கள் எதிர்ப்பார்க்காத நேரத்தில் உங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்து உங்களைத் துயரத்தில் ஆழ்த்தி விடலாம்.

தீய நண்பர்கள் என்றால், உங்களது வாழ்க்கையை உணர்ச்சி ரீதியாகவும், மன ரீதியாகவும் உறிஞ்சி விடுவார்கள். அதனால் அவர்களுடனான உறவைத் துண்டிப்பதே சிறந்தது. உங்களது புத்திசாலித் தனத்தைப் பயன்படுத்தி தீய நண்பர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள். மேலும் முகத்தை மட்டுமே பார்த்து யாரையுமே நம்பி விடாதீர்கள்.எனவே உங்களது நண்பர்கள் தீய நண்பர்களா என்பதை கண்டு பிடிக்க சில அறிகுறிகள்:

**ஆதிக்கம்**

நண்பர்கள் என்றால் அன்பையும், பாசத்தையும் பரிமாறிக் கொள்வார்கள். ஆனால் உங்களது நண்பர் உங்களை எப்போதுமே ஆதிக்கம் செய்பவராக இருந்தால், அது தீய நண்பனுக்கான அறிகுறியாகும். உங்கள் நண்பன் தொடர்ச்சியாக உங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தால் அந்த நண்பனை அனுசரித்துக் கொண்டு அப்படி ஒரு நட்பை வளர்க்க வேண்டிய அவசியமில்லை.

**தர்மசங்கடத்தில் ஆழ்த்துவது**

கிடைக்கும் வாய்ப்புகளின்போது உங்கள் நண்பன் உங்களை அசிங்கப் படுத்தி மற்றவர்களின் முன்பாக உங்களைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தி விடுகிறாரா? அவர்களுடைய இந்த மனிதாபிமானமற்ற செயல்களை வைத்து அவர்கள் தீய நண்பர்கள் என்பதை அறிந்துக் கொள்ளலாம்.

மற்றவர்கள் மத்தியிலும் உங்களைக் கேவலப்படுத்துகிறாரா உங்கள் நண்பன்? உங்கள் தன்னம்பிக்கையை இழக்கச் செய்கிறாரா உங்கள் நண்பன்? இவைகள் அனைத்தும் தீய நட்புக்கான அறிகுறிகள்.

நீங்கள் உங்கள் நண்பனிடம் எப்போதுமே பேசுவீர்களா? ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள நேரம் ஒதுக்கி, உங்கள் இருவரின் வாழ்க்கையை பற்றி கலந்துரையாடுவீர்களா? ஒரு நண்பன் என்றால் உங்களுக்கு அதிக முக்கியத்துவத்தை கொடுத்து உங்கள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும்.

உங்கள் சந்தோஷங்கள், கஷ்டங்கள் அல்லது கருத்துகளின் மீது உங்கள் நண்பன் அக்கறை கொள்ளாமல் உங்களுக்காக நேரம் ஒதுக்குவதே இல்லையா? அப்படியானால் அது தீய நட்புக்கான அறிகுறி. இவற்றை வைத்து ஒரு தீய நண்பனை அடையாளம் கண்டு விடலாம்.

**கீழ்தரமாகப் பேசுவது**

உங்கள் நண்பன் உங்களுடன் கீழ்தரமாக நடந்து கொண்டு உங்களை எப்போதுமே மட்டம் தட்டிக் கொண்டே இருக்கிறாரா? அப்படியானால் தீய நண்பனுக்கான தெளிவான அறிகுறி இது. கீழ்த்தரமான நண்பன் மற்றவர்கள் மத்தியில் உங்களை எப்போதுமே கேவலப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். உங்கள் நட்பையும், நல்ல குணத்தையும் அவர்கள் தமது தேவையை நிறைவேற்றிக்கொள்ள இப்படிப் பயன்படுத்திக் கொள்வார்கள். உங்களது சாதனைகளைப் பற்றிக் கூடக் குறைவாக மதிப்பிட்டுப் பேசுவார்கள். தீய நண்பனுக்கான பொதுவான அறிகுறிகள் இவைகள்.

**பொறாமை**

நீங்கள் மற்றவர்களிடம் நட்புடன் பழகுவது உங்கள் நண்பனுக்கு பிடிப்பதில்லையா? நீங்கள் மற்ற நண்பர்களிடம் பேசிப் பழகுவதைப் பார்த்து, ஒரு தீய நண்பன் பொறாமைபடுவான். அதற்குக் காரணம் புது நண்பர்களுடன் பழகுவதை அவன் விரும்புவதில்லை. தீய நண்பனை அடையாளம் காண இதுவும் ஓர் அறிகுறி.

**ஊர்க்கதை பேசும் நண்பன்**

நீங்கள் இயல்பாக குணம் மாறாமல் இருப்பதையே ஓர் உண்மையான நண்பன் விரும்புவான். மேலும் உங்களைப் பற்றி நல்ல விதமாகவே பேசுவான். இந்தப் பாசம் மற்றும் நேர்மை நீங்கள் அருகில் இல்லாத போதும் இருக்க வேண்டும். நீங்கள் போன பிறகு உங்களைப் பற்றி மற்றவர்களிடம் கேவலமாகப் பேசக் கூடாது. ஒரு தீய நண்பனைக் கண்டுபிடிக்க இதுவும் ஒரு முக்கிய அறிகுறி.

உங்களுக்கு தீமையை விளைவித்து உங்களைப் பற்றித் தவறாகப் பேசும் எந்த ஒரு நண்பனையும் யாருமே நண்பனாக வைத்துக் கொள்ள விரும்பமாட்டார்கள். நண்பர்கள் என்றால் நல்லவர்களும் இருப்பார்கள், தீயவர்களும் இருப்பார்கள். உங்களுக்கு தீமை செய்யும் நண்பர்களை விட்டு விலகி இருப்பதே நல்லது.

> **“ யாரையெல்லாம் உங்களது உயிர் நண்பர்களாக நினைக்கிறீர்களோ, அவர்கள் எல்லாம், நீங்கள் எதிர்ப்பார்க்காத நேரத்தில் உங்களுக்கு நம்பிக்கை துரோகம் செய்து உங்களைத் துயரத்தில் ஆழ்த்தி விடலாம். தீய நண்பர்கள் என்றால், உங்களது வாழ்க்கையை உணர்ச்சி ரீதியாகவும், மன ரீதியாகவும் உறிஞ்சி விடுவார்கள். ”**






## காக்கா! வா!

கா..கா.கா.
காக்கா..வா! வா! வா!
கன்னம் கரிய காக்காவே!
கடிதெனப் பறந்து வா!
கடமையோடு சனி விரதக்
கறி சோறு உண்ணலாம் வா!..

குரலில் இனிமை இல்லாரையும்
காக்காக் கத்தல் கத்துகிறாயென்று
ஒப்பு உவமைக்கு உதாரணமாய்
செப்புகிறார் உன்னைக் காக்காவே!
கழிவைச் சுத்திகரிக்கும் தோட்டியே!
கடுப்பின்றி ஓடிவா! காக்காவே!

ஒற்றுமைக்கு உதாரணம் நீயாம்!
ஒப்பிட்டுப் பேசுகிறார் ஆறறிவாளர்.
ஒரு பயனுமில்லை இவர்
ஓசை மட்டுமே எழுப்புவார்.
ஒருபோதும் உன் போல்
ஒன்றாக இருக்கார் உலகிலே

*யோ. அபிசன்*



## ஏன் சிரிக்கிறாய்

ஒரு பண்ணையில் ஆண் கழுதையொன்றும், பெண் கழுதையொன்றும் வளர்ந்து வந்தன. ஆண் கழுதை பகலில் கடுமையாக உழைக்கும். பண்ணைக்குள் கொண்டு செல்ல வேண்டிய பொருள்களை முதுகில் சுமந்து செல்லும். மாலையில் தனது தங்குமிடம் வந்ததும் அங்கு கிடக்கும் காய்ந்த புல்லை மேய்ந்து பசியாறும்.

பெண் கழுதை எந்த வேலையும் பார்ப்பதில்லை. பசுமையாகக் கிடைக்கும் புல்லைத் தின்று விட்டு, தொழுவத்தில் தூங்கி எழும். மிகவும் மகிழ்ச்சியாக, வேலை பார்க்காமல் பொழுதைக் கழித்தது.

ஒருநாள் உழைத்த களைப்புடன் சோர்வாக ஆண் கழுதை வந்து சேர்ந்தது. களைப்பின் மிகுதியால் வந்தவுடனே படுத்தும் விட்டது. ஆண் கழுதை஝ப் பார்த்து பெண் கழுதை பரிதாபப்பட்டது. உன்னைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது! எனக் கிண்டல் செய்தது. என்ன செய்வது என் நிலை அப்படி, உழைத்தால் தான் முதலாளி விடுவார்! என்றது ஆண் கழுதை.

இதைக் கேட்டதும் பெண் கழுதை சிரித்தது. ஏன் சிரிக்கிறாய்? என்றது ஆண் கழுதை.

சிரிக்காமல் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நான் மட்டும் கஷ்டப்பட்டு வேலையா செய்கிறேன்! ஆண் கழுதை அதை ஆச்சரியத்துடன் பார்த்தது. ஆமாம்... நானும் இதைப் பற்றி உன்னிடம் கேட்க வேண்டும் என்று தான் நினைத்திருந்தேன். அதை முதலில் கூறு!

பண்ணையாள் வந்து உனது கயிற்றை அவிழ்த்து விட்டதும், உடனே நீ வேலை செய்யப் போய் விடுவாய். நான் அப்படிப் போய் விட மாட்டேன்!

பிறகு என்ன செய்வாய்?

அப்படியே படுத்திருப்பேன். நான் எழவில்லை என்றதும் சாட்டையால் நான்கு அடி அடிப்பான். பொறுத்துக் கொண்டு படுத்துக் கொள்வேன். பிறகு என்னை விட்டு விட்டுச் சென்று விடுவான்! என்றது பெண் கழுதை.

இவ்வளவுதானா! ஆச்சரியமாகக் கேட்டது ஆண் கழுதை.

ஆமாம்... நீயும் அதுபோல சண்டித்தனம் செய்து பார். உன்னையும் பண்ணையாள் விட்டுவிட்டுப் போய் விடுவான். எல்லாமே எமது கையில்தான் உள்ளது! என அறிவுரை வழங்கியது.

காலைப் பொழுது வேலைக்குச் செல்லும் நேரம் பண்ணையாள் வந்தான். வழக்கம் போல் ஆண் கழுதையைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன்றான். இன்று ஆண் கழுதை படுத்துக் கொண்டு சண்டித்தனம் செய்தது.

பண்ணையாள் சாட்டை எடுத்து அடித்தும் பார்த்தான். ஆண் கழுதை எழுவதாய்த் தெரியவில்லை. பண்ணையாள் பல விதங்களிலும் முயற்சி செய்து பார்த்து விட்டு, முதலாளியிடம் சென்றான்.

அய்யா! இந்த ஆண் கழுதை என்றுமில்லாமல் சண்டித்தனம் செய்கிறது! என்றான்.

சரி பரவாயில்லை. இன்றைக்கு ஆண் கழுதைக்கு ஓய்வு கொடுத்துவிடு. தினமும் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்து சும்மா இருக்கிற அந்தப் பெண் கழுதையை அடித்து இழுத்துப் போ! என்றார். பண்ணையாளும் வந்து ஆண் கழுதை சாப்பிட பசும் புல்லைக் கொண்டு வந்து போட்டான்.

பிறகு, பெண் கழுதையை இழுத்துச் சென்று வேலையில் ஈடுபடுத்தினான். கெட்டதைச் சொல்லிக் கொடுக்கப் போய் தன்னுடைய பிழைப்பே போய் விட்டதை எண்ணி மிகவும் வருந்தியது பெண் கழுதை.

*ர. ஆகாஷ்*

## புத்தக பிரபலங்கள்

- சாவுத் தண்டனை விதிக்கப்பட்டு தனக்கு நஞ்சு கொடுக்கப்படும் வரை படித்துக் கொண்டே இருந்தார். கிரேக்க சிந்தனையாளர் சாக்ரடீஸ்.
- தனது கழுத்தில் தூக்குக் கயிற்றை மாட்டும் வரை படித்தார். லிபியாவின் புரட்சியாளர் உமர்முக்தார்.
- தூக்கிலிடப்படும் நாளைக்கு முந்தைய இரவு முழுவதும் படித்துக் கொண்டிருந்தவர். தான் படித்த பக்கத்தின் மூலையை அடையாளத்துக்கு மடித்து வைத்து விட்டு மீண்டும் படிக்க வருவதைப்போல் நினைத்து தூக்கு மேடை ஏறினார் பகத்சிங்.



*ச. லக்சிகா, தரம் 9ஏ, சிவப்பிரகாச மகாவித்தியாலயம், சங்கானை*



## பூநாரை (Greater Flamingo)

பூநாரை (Greater Flamingo) என்பது நாரைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பறவையாகும். எமது வீடுகளில் வளரும் வாத்தின் பருமனுடைய இந்தப் பறவைக்கு நீண்ட முடியற்ற சிவந்த கால்களும், நீண்டு வளைந்த கழுத்தும், குறுகிய வளைந்த அலகும் இருக்கும். கால் விரல்கள் வாத்துக்கு இருப்பது போலவே சவ்வினால் இணைந்திருக்கும். நிமிர்ந்து நின்றால் ஒன்றரை மீற்றர் உயரம் இருக்கும். இப்பறவைகள் செந்நிறம் கலந்த வெள்ளையுடலும் கரு நிறமான இறக்கை ஓரமும் கொண்டவை. நிலத்திலும், உப்புத் தன்மை அதிகமுள்ள ஏரிகளிலும் கடும் வெப்பத்தையும் தாங்கி வாழும் பூநாரை, தமிழகத்திலுள்ள கோடியக்கரை வனவுயிரினங்கள், பறவைகள் சரணாலயத்துக்கு வரும் எண்ணற்ற பறவைகளில் மிகவும் அழகான ஒன்றாகும். இப்பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து உயரச் செல்லும் காட்சி மனதைக் கவரும் தன்மை கொண்டது.

பூநாரைகள் எளிதில் நீந்தக் கூடியவை. சற்று ஆழமான நீரில் இரை தேடும்போது இதன் வால் மட்டும் நீருக்கு வெளியேயும், உடல் முழுவது நீருக்குள்ளும் இருக்கும். இந்த முக்குளித்த நிலையிலேயே புழுக்களைப் பிடித்து உண்ணும். செங்கால் நாரைகள் வாத்துப் பறப்பது போன்ற அமைப்பிலோ அலையலையான நீண்ட சாய்வுக் கோடுகளாகவோ வேகமாகச் சிறகுகளை அடித்துப் பறந்து செல்லும் தன்மை வாய்ந்தவை. ஒடுங்கிய கழுத்தை நீட்டிப் பறக்கும்போது சிவந்த கால்களையும் சேர்த்துப் பின்னால் நீட்டிக் கொள்ளும். வழக்கமாக இவை உரத்து ஒலி எழுப்புவதில்லை. ஆனாலும் சில சமயங்களில் வாத்துகள் போன்று ஒலி எழுப்பக்கூடியவை. இரை மேயும்போது கூட்டத்தில் உள்ள அனைத்துப் பறவைகளும் தொடர்ச்சியாக மெல்லிய ஒலியை எழுப்புகின்றன.

பூநாரைகள் கூடுகட்டி, முட்டையிட்டு குஞ்சு பொரிக்கின்றன. இவற்றின் கூடு சேற்று மண்ணைக் குவித்து ஏற்படுத்தப்படுகின்றது. பூநாரை ஈரமான களிமண்ணால் கூடு கட்டும். ஈரமான களிமண்ணைக் உயரமாகக் கூப்பி வைக்கப்பட்ட கிண்ணம்போல் இதன் கூடு இருக்கும். சூரிய வெப்பத்தால் உலர்ந்து கெட்டியாக இதன் கூடு அடுப்பில் வைத்துச் சுட்டது போல நேர்த்தியாக இருக்கும் இது சுமார் 30 செ.மீ. உயரமிருக்கும். இனச் சேர்க்கை முடிந்து, இதன் உச்சியிலுள்ள குழிவில் சராசரியாக ஒன்று அல்லது இரண்டு முட்டைகள் இடும். முட்டையிட்ட பின் ஆண், பெண் பூநாரைகள் இரண்டுமே ஒன்று மாறி ஒன்று அடை காக்கும்.



## பொது அறிவு

1. உலகிலேயே முதன் முதலில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய நாடு?
   நியூஸிலாந்து
2. சுவாசத்தைக் கட்டுப்படுத்தும் பகுதி எது?
   மூளையின் முன்களப்பகுதி
3. புன்னகை நாடு என அழைக்கப்படும் நாடு எது?
   தாய்லாந்து
4. ஐம்பது நட்சத்திரங்களைக் கொண்ட தேசியக்கொடி எந்த நாட்டினது தேசியக்கொடி?
   அமெரிக்கா
5. மனிதனுக்கு அடுத்த படியாக அறிவுத்திறன் கூடிய விலங்கு எது?
   சிம்பன்சி
6. எந்தநாட்டு முத்திரையில் அந்த நாட்டின் பெயர் இருப்பதில்லை?
   இங்கிலாந்து
7. வீடுகளுக்கு இலக்கத்தை இடும் வழக்கத்தை முதன் முதலில் ஏற்படுத்திய நாடு எது? பிரான்ஸ்
8. சதுரங்க விளையாட்டின் தாயகம் எது? இந்தியா
9. சர்வதேச குடிதண்ணீர் தினம் எப்போது கொண்டாடப்படும்?
   மார்ச்-22
10. மனித உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி எது? ஈரல்


*கு. குமுதினி, தரம் 5பி, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி.*



# தேன் வேட்டையர்கள்

மனிதனின் நாவுக்கு தித்திக்கும் சுவையைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல், மருத்துவ ரீதியாகவும் பல்வேறு நலன்களை அள்ளித்தருகிறது தேன். அன்றாட வாழ்வில் உணவுகளுடன் சேர்த்து தேனை ருசிக்கும் மனிதன் இந்தத் தித்திப்பான தேன் எவ்வாறு எம்மைவந்து சேர்ந்தடைகின்றதுஎன்ற கதையை அவசியம்தெரிந்துகொள்ளத் தான் வேண்டும்.





தேன் வகைகளில் சுத்தமான தேன் என்று பல்வேறு கடைகளிலும், பல்வேறு இடங்களிலும்கூவிக் கூவிவிற்றாலும், உண்மையான தேன் என்றால் அது மலைத்தேன் தான். அதுவும் இந்தியாவில் தயாரிக்கப்படும் கலப்படமற்ற தேனாக இந்த தேனைத் தான் சொல்கிறார்கள்.

நேபாள் நாட்டைச் சேர்ந்த தேன் வேட்டையர்களால் தான், நாம் இந்தத் தேனைச் சுவைத்து மகிழ்கின்றோம். மத்திய நேபாளத்தின் இமயமலை அடிவாரத்தில் உலகின் பெரிய தேனீக்கள் காணப்படுகின்றன.

அங்குள்ள தேனீக்கள் சூரிய வெளிச்சம் அதிகம் இல்லாத செங்குத்தான மலைப் பகுதிகளில், மற்ற விலங்குகளிடமிருந்து பாதுகாப்பான இடங்களைத் தேர்வு செய்து கூடுகளை அமைக்கின்றன.

கஸ்கி மாவட்டத்தைச் சேர்ந்த மலை உச்சியில் பழங்குடி மக்கள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து ஆபத்தான கயிறுகள் மற்றும் தொங்கும் ஏணிகளைப் பயன்படுத்தி தேனைச் சேகரிக்கின்றனர்.

12-க்கும் மேற்பட்டவர்களாக இணைந்து செயல்படும் இவர்கள் தேனைச் சேகரிக்க 11,000 ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய வழக்கத்தையே இன்றும் தொடருகின்றனர்.

முதலில் பசுமையான இலைகளைச் சேகரித்து அவற்றை தீயிட்டுக் கரும்புகையை பரவச் செய்கின்றனர். கரும்புகையைத் தாக்குப் பிடிக்கமுடியாமல் தேனீக்கள் தங்களது கூட்டில் இருந்து வெளியேறுகின்றன.

அவ்வாறு தேனீக்கள் துரத்தப்பட்ட பின்னர் 'கட்டர்' என்றழைக்கப்படும் தேனை சேகரிப்பவர், பாதுகாப்பாக கட்டப்பட்டிருக்கும் 50 மீற்றர் உயரத்தில் உள்ள கயிறு ஏணி ஒன்றின் வழியே ஏறித் தேனைச் சேகரிக்கின்றார்.

தேனைச் சேகரிக்க 'டேங்கோஸ்' என்றழைக்கப்படும் இரு மூங்கில் குச்சிகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஏணியில் நிற்பவர் தேன் கூட்டை ஒரு நீண்ட மூங்கிலால் குத்துகிறார், இன்னொரு மூங்கிலால் கீழே விழும் தேன் துண்டுகளைக் கூடையில் சேகரிக்கிறார்.

தவறி விழும் தேன் கூடுகளை மலையின் கீழே நிற்கும் மற்றொருவர், தான் வைத்திருக்கும் கூடையில் சேகரிக்கிறார் அல்லது சிறுவர்கள் அதனை உண்டு மகிழ்கின்றனர்.

மூன்று மணிநேரப் போராட்டத்துக்குப் பின்னர் தன்னுடன் 20 கிலோ எடை கொண்ட தேனைக் கொண்டு செல்கிறார்.

இவ்வாறு சேகரிக்கப்படும் தேன் ஜப்பான், சீனா மற்றும் கொரியா போன்ற வெளிநாடுகளுக்கு பாரம்பரிய மருந்துத் தயாரிப்புக்காக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வசந்த காலத்தில் கிடைக்கும் சிவப்பு நிறத் தேன் அதிக லாபம் தருகின்றது, அது ஒரு கிலோ 30 பவுண்டுகள் வரை இருக்கும். ஆனால் மாறி வரும் பருவநிலையாலும், தேனீக்களின் எண்ணிக்கை குறைந்து வருவதாலும் பழங்குடியினரின் வாழ்வாதாரம் பாதிப்படைகிறது.

இதற்குத் தீர்வாக நேபாள அரசு,பழங்குடியினருக்கு பயன் தரும் வகையில் சர்வதேச சுற்றுலாவாசிகளை ஈர்க்க அன்னபூர்ணா பகுதிக்குச் செல்லும் சுற்றுலாவாசிகள் தேன் சேகரிப்பை பார்வையிட ஆயிரம் அமெரிக்க டொலர் அறவீடு செய்கின்றது.

குறுகிய கால லாபம் பெறும் வாய்ப்புள்ளதால் பழங்குடியினரும் அதனைப் பயன்படுத்தி கொள்கின்றனர். எனினும், சுற்றுலாவாசிகள் தங்களுடன் கொண்டு வரும் நவீன மலையேறும் கருவிகளால் மலைப் பிரதேசத்தில் உள்ள சுவர்ப் பகுதிகள் பாதிப்படைகின்றன. மேலும், தேன் ஏற்றுமதியில் அரசின் தலையீட்டாலும், தேனீக்கள் அழிவை நோக்கிச் செல்வதாலும் நேபாளப் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளது!

# சொக்க வைக்கும் அல்ப்ஸ்

ஐரோப்பாவில் மிகவும் புகழ் பெற்றது அல்ப்ஸ் மலை. அல்ப்ஸ் மலை என்பது தனிப்பட்ட ஒன்றல்ல, மத்திய ஐரோப்பாவிலுள்ள மலைக் கூட்டங்களே அல்ப்ஸ்.

பல மில்லியன் கணக்கான ஆண்டுகளாக உருவான அல்ப்ஸ் மலையை, மேற்கு-மத்திய மற்றும் கிழக்கு பகுதிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றனர்.





அல்ப்ஸ் மலைத்தொடர் 1,200 கிலோமீற்றர்கள் (750 மைல்) நீண்டு அமைந்துள்ளது. இது கிழக்கில் ஆஸ்திரியா முதல் சுலோவேனியா வரையும், தெற்கே இத்தாலி, மொனாக்கோ, மேற்கே சுவிற்ஸர்லாந்து, லெய்செஸ்டீன், ஜேர்மனி, பிரான்சு வரையும் பரந்து காணப்படுகிறது. இந்த எட்டு நாடுகளையும் 'அல்பைன் நாடுகள்' என்று அழைப்பர்.

அல்ப்ஸின் மிகவும் உயரமான மலையான மொன்ட் பிளாங்க் 4,808 மீற்றர் உயரமானது. இது பிரான்ஸ்-இத்தாலி எல்லையில் அமைந்திருக்கிறது. மாண்ட் பிளாங்கைச் சுற்றி 80 மைல் அகலத்துக்கு அல்ப்ஸ் மலை விரிந்து கிடக்கிறது.

இவ்வளவு நீளமான தொடரானாலும், அல்ப்ஸ் கடக்க முடியாத மலையல்ல, இடையிடையே ஏராளமான பள்ளத்தாக்குகள், கணவாய்கள் உள்ளன.

அல்ப்ஸ் மலையில் அதிகமான ஏரிகளும் உள்ளன. ஜெனிவா, கான்ஸ்டன்ஸ், கார்டா, லூசர்ன், சூரிச் மாகியோர், கோமா இவையெல்லாம் பிரபலமான ஏரிகள்.

மேற்கு ஐரோப்பாவில் ஓடும் பல முக்கிய நதி களின் பிறப்பிடமும் இந்த அல்ப்ஸ் மலைப் பிராந்தியம் தான்.இந்த நதிகள் அருகருகே உற்பத்தியானாலும் இவை வெவ்வேறு கடல்களில் சங்கமமாகின்றன.

அல்ப்ஸ் மலைப் பிராந்தியத்தில் வாழும் மக்கள் விவசாயம் செய்தும் துணி வர்த்தகம் செய்தும், சுற்றுலாத்துறை மூலமும் பிழைக்கின்றனர்.

ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மக்கள் மலை ஏறவும், பனிச்சறுக்கல் விளையாடி மகிழவும், வனப்பைக் கண்டுகளிக்கவும் அல்ப்ஸ் மலையை நோக்கிப் படையெடுக்கின்றனர்.



உருளை மரங்கள் இல்லாததால், பழங்குடியின மக்களால் டொல்பின்களை வேட்டையாட முடியவில்லை. தாவரங்களும் மற்ற அனைத்துப் பயிர் வகைகளும் அழிந்ததால், உணவு உற்பத்தியே இல்லாமற்போனது. அதனால் பெரும் எண்ணிக்கையானோர் இறந்தனர்.

# ஈஸ்டர்தீவில் மக்கள் அழிந்தது எப்படி?

ஈஸ்டர் தீவு, தென் அமெரிக்கா நாட்டுக்கு அருகே உள்ள ஒரு குட்டித் தீவு. 17 ஆம் நூற்றாண்டில் இந்தத் தீவு ஐரோப்பியர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தத்தீவு 37 அடி உயர மிகப் பிரம்மாண்டமான சிலைகளுக்குப் பெயர் போனது. இந்தத் தீவு ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண் டது. தற்போழுது இந்தத் தீவிலே ஒரு மரம் கூடக் கிடையாது. ஒரு வகையான புல் வகை மட்டுமே உள்ளது. மொத்தம் 60 இற்கும் மேற்பட்ட 200 தொன் எடை கொண்ட பிரம்மாண்டமான சிலைகள் இருக்கின்றன. இத் தீவு கண்டுபிடிக்கப்பட்ட புதிதில், இந்தச் சிலைகள் எல்லாம் எவ்வாறு வெவ்வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன என்பது புரியாத புதிராக இருந்தது.


இந்தத் தீவில் கி.பி. 200 ஆம் ஆண்டில் 2000 மக்கள் வசித்ததாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. ஆனால், இன்றோ வெறும் இருநூறுக்கும் குறைவான மக்களே வசிக்கின்றனர். 2000 மக்கள் கி.பி. 200 ஆம் ஆண்டிலே வசித்தால் இப்பொழுது அதற்கும் அதிகமாக மக்கள் வசிக்க வேண்டும் அல்லவா? மக்கள் தொகை குறைவதற்கான காரணம் என்ன? மற்றும் எவ்வாறு இந்தச் சிலை களை தொழில் நுட்ப வசதி எதுவுமின்றிக் கொண்டு சென்றனர்? என்ற கேள்விகள் ஆராய்ச்சியாளர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தின.

கேள்விக்கு பதில் தேடும் விதமாக, அந்தத் தீவில் தொல்பொருள், தாவரவியல் ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். அதிக மரங்களும் உயிரினங்களும் அந்தத் தீவில் முன்னர் இருந்தன என்பதைக் கண்டறிந்தனர். புவியைத் தோண்டி ஆராய்ந்த போது, அதிக விதைகள், பறவைகள் மற்றும் வேறு பல உயிரினங்களின் எச்சங்களும், தொன்மங்களும் கிடைத்தன.



அவை எல்லாவற்றையும் விட உருளை வடிவிலான மரம் ஒன்றின் விதையும் கிடைத்தது. இன்று அந்த மரம் இவ்வுலகில் இல்லை. அவற்றின் வழித் தோன்றலான, சில மரங்களும், அந்த மரத்தின் குடும்ப மரங்களும் உள்ளன. எவ்வாறு உருளை மரம் காணாமற்போனது? பல வகை உயிரினங்களுக்கு என்ன நடந்தது? என்பது விஞ்ஞானி களுக்கு மிகப் பெரிய அதிர்ச்சியை அளித்தது. பல்வேறு ஆய்வு முடிவுகளை மேற்கொண்ட பின், சில உண்மைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

ஈஸ்டர் தீவில் வாழ்ந்த பழங்குடியினர் டொல்பின் மீன் களை விரும்பி உண்டனர். கடலின் ஆழப் பகுதியில் தான் டொல்பின்கள் கிடைக்கும். ஆழப்பகுதியில் மீன் பிடிப்பதற்காக உருளை மரங்களை வெட்டி, கட்டு மரம் செய்வதற்குப் பயன்படுத்தினர். டொல்பின் கறியின் சுவை காரணமாக, அதிக கட்டுமரங்கள் செய்தனர். அதிகமான கட்டுமரங்கள் தேவைப்பட்டதால் நிறைய மரங்களை வெட்டினர்.



நாகரிகத்தின் உச்சமாக கலைகள் வளர ஆரம்பித்தன. ஈஸ்டர் தீவு மக்கள் சிற்பக் கலையில் கை தேர்ந்து விளங்கினர். அவர்கள் மிகவும் பிரம்மாண்டமான சிலைகளைச் செய்தனர். அவர்கள் செய்த சிலைகளின் எடை 200 தொன்னுக்கும் மேலாக இருந்தது. சிலைகளை தீவின் எல்லையோரங்களில் நிறுவினர். சிலைகளை நகர்த்திச் செல்வதற்கு அவர்கள் உருளை மரங்களை வெட்ட ஆரம்பித்தனர். மனிதப் பேராசை காரணமாக, அளவு தெரியாமல் உருளை மரங்களை வெட்டினர். உருளை மரங்கள் மீண்டும் இனப்பெருக்கம் செய்து பெருக முடியாத அளவுக்கு வெட்டிச் சாய்த்தனர். அந்தத் தீவில், ஒரு கால கட்டத்தில் உருளை மரங்களே இல்லாமற் போனது.

உருளை மரங்கள் அழிந்தபின், அந்தத் தீவில் இருந்த ஆறு பறவை இனங்கள் அழிந்து போயின. அவை அழிந்த பின் தான் தெரிந்தது அந்தப்பறவை இனங்கள் அனைத்தும் உருளை மரங்களைச் சார்ந்து இருந்தன என்பது. பறவை இனங்கள் அழிந்தபின் தீவில் இருந்த தாவரங்கள் எல்லாம் அழிந்து விட்டன. பறவைகள் உண்டு போட்ட பழத்தில் இருந்த விதைகளினால் தான், பெரும்பாலான செடி, கொடிகள் மற்றும் தாவரங்கள் வளர்ந்தன. தாவரங்கள் இனப் பெருக்கத்துக்குக் காரணமான, பறவை இனங்கள் அழிந்ததால் அனைத்துத் தாவரங்களும் அழிய ஆரம்பித்தன. தாவர இனங்களை நம்பி வாழ்ந்த அனைத்து உயிரினங்களும் அழிய ஆரம்பித்தன.

உருளை மரங்கள் இல்லாததால், பழங்குடியின மக்களால் டொல்பின்களை வேட்டையாட முடியவில்லை. தாவரங்களும் மற்ற அனைத்துப் பயிர் வகைகளும் அழிந்ததால், உணவு உற்பத்தியே இல்லாமற்போனது. உணவுத் தட்டுப்பாடு நிலவியது. இதையடுத்து ஏற்பட்ட பசி, பட்டினியாலும், உணவுக்கு ஏற்பட்ட சண்டையாலும் மக்கள் நிறையப் பேர் இறந்தனர்.


இங்கு ஓர் உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். உருளை மரங்களை பழங்குடியின மக்கள் உணவுக்காக பயன்படுத்தவில்லை. உணவுக்காக பயன்படாத் ஒரு மரத்தை வெட்டியதாலே, ஒரு தீவில் மனித இனம் அழிந்தது. நாம் இன்று வாழும் வாழ்க்கையால், எவ்வளவு மரங்களை அழித்துக் கொண்டிருக்கின்றோம், அதன் மூலம் எவ்வளவு பிரச்சினைகள் வரும் என்பதை உணர்த்துவதற்காகவே இந்தத் தகவல்.

# நீங்கள் புறக்கணிக்கப்படுபவரா?

மற்றவர்கள் நம்மை எப்படி எடைபோடுகிறார்களோ, அதைப்போலவே நாமும் நம்மை எடை போட்டால், எமது திறமையை வெளிக்கொண்டு வர முடியுமா! எமது ஆற்றல்களை பற்றி அடுத்தவன் சொல்லும் அபிப்பிராயங்களை நினைத்துக் கொண்டிருந்தால் சிறிதேனும் முன்செல்ல முடியுமா! பயனற்றவன், வீணானவன் என்று புறக்கணிக்கப்படுகிறவர்கள் அதை வெறியாக, வைராக்கியமாக வைத்துக் கொண்டால் நாளை ஏதாவது ஒரு கதவு அவனுக்காக திறக்கப்படுவது நிச்சயம்.

ஒருமுறை புறக்கணிக்கப்பட்டால் இனி போதும் இந்த ஓவியமோ, விளையாட்டோ, கவிதையோ முதல் முறையே நிராகரிக்கப்பட்டு விட்டன. இனி போதும் இது நமக்கு ஆகாது என்று ஓரங்கட்டினால் அங்கேயே உங்கள் திறமைகளெல்லாம் செத்துவிடும். எத்தனை முறை விழுந்தாலும் எழுந்திருப்பேன் என்ற உறுதி வேண்டும். சிறு தோல்விகளையோ, அவமானங்களையோ தாங்கிக்கொள்ள முடியாமல் ஒடி ஒளிக்கின்றவர்கள் என்றும் தன்னை தாழ்வாக நினைத்து பல விடயங்களை கோட்டை விட்டுக் கொண்டே இருப்பர்.

ஒரு சிறு துணிவு இல்லாமையால் பல வாய்ப்புகளை நாம் இழந்து விடுகிறோம், துணிவில்லாமல் கோட்டை விட்ட விடயங்களை நினைத்து பாருங்கள், அதில் சிறு துணிவு மட்டும் இருந்திருந்தால், எதையும் இழந்திருக்க மாட்டீர்கள். ஒரு விஷயத்தை செய்ய ஆரம்பிக்கும் வரையிலும் அதை செய்வதற்கான துணிவோ, ஆர்வமோ வருவதில்லை. செய்ய ஆரம்பித்த பின்னர்தான் இவளவு நாள்களாக இது ஏன் தோன்றவில்லை என்று நினைப்பீர்கள். எனவே சிறு துணிவு இல்லாமையாலேயே பலர் புறக்கணிக்கப்பட்ட அதே இடத்தில் இன்னும் கிடக்கிறார்கள்



ஒருமுறை
புறக்கணிக்கப்பட்டால்
இனி போதும் இந்த
ஓவியமோ,
விளையாட்டோ,
கவிதையோ முதல்
முறையே
நிராகரிக்கப் பட்டு
விட்டன. இனி
போதும் இது நமக்கு
ஆகாது என்று
ஓரங்கட்டினால்
அங்கேயே உங்கள்
திறமைகளெல்லாம்
செத்துவிடும்.

யாரும் எம்மை நம்பிக்கையோடு, தைரிய மூட்டி வாழ்த்தி அனுப்ப வேண்டிய அவசியமில்லை. அதைவிடவும் வலிகளையும், அடிகளையும், அவமானங்களையும் சுமந்து சென்றே எம்மால் வெற்றிபெற முடியும். துன்பங்கள் வருவதனால்தான் இன்பங்களை முழுமையாக அனுபவிக்க முடிகிறது. புறம் தள்ளப்படுவதாலே வெற்றி இலக்கை அழுத்தமாக பிடித்துக்கொள்ள முடியும். ஆரம்பமே வாழ்த்தும், வரவேற்புமாக இருந்தால் பல சூட்சுமங்களைத் தெரிந்து கொள்ளத் தவறி விடுவோம்.

ஒட்டு மொத்த மனிதர்களும் உங்களைப் புறக்கணித்தாலும் பரவாயில்லை. ஆனால் ஒரே ஒரு மனிதர் மட்டும் உங்களை புறக்கணிக்காமலிருந்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம், அந்த ஒரே ஒரு மனிதர் நீங்களே தான். எத்தனை பேர் அணிவகுத்து வந்து புறக்கணித்தாலும், இறுதி வரையிலும் உங்களை நீங்கள் புறக்கணியாதிருங்கள், ஒட்டு மொத்த மனிதர்களும் ஒருநாள் உங்களை திரும்பிப் பார்ப்பார்கள்.



# உணர்ச்சிகள் என்னும் புதிர்

சிலருக்கோ தாங்கள் கோபக்காரன் என்று விளிக்கப் படுவதில் ஒரு கர்வம். அவர்களுக்குக் கோபம் என்பது கௌரவம் சார்ந்த விடய மாகப் பதிவாகி யிருக்கிறது. இயல்பாக இருப்பதாகத்தான் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், பதற வைக்கும் நிகழ்வுகளும் இவர்களாலேயே நடக்கின்றன.

இவையெல்லாம் புதியவை அல்ல. கற்காலத்திலிருந்தே எம்மிடம் இருக்கும் பழக்கம் தான். ஆனால் நாகரிகமும் பண்பாடும் வளர்ந்த இன்றைய காலகட்டத்திலும் இதெல்லாம் நடப்பது ஏன்? இந்தக் குணங்களுக்கான வேர்கள் என்ன? இவை எப்படி உருவாகி வளர்ந்து கிளை பரப்புகின்றன?

**உணர்ச்சிகளின் வேர் எது?**

காதல், காமம், கோபம், வெட்கம், வேதனை, பொறாமை, தாய்மை, அன்பு, ஆவேசம், அபிநயம், நட்பு, நக்கல், எரிச்சல், எள்ளல், துள்ளல் ஆகிய உணர்ச்சிக் குவியல்களுக்கெல்லாம் அடிப் படை அறிவியல்தான். மனம் என்னும் மாயக்கிடங்கில் உற்பத்தி யாகும் இந்த உணர்வுகளை வெளிப்படுத்தும் விதங்களில் தீர்மான மாகின்றன வாழ்வின் பயணங்கள். இவை எப்படி உருவாகின்றன என்பதைப் பற்றி சிந்தித்தால் அவற்றைக் கையாள்வது எளிதாகும். உணர்வுகளைக் கையாளத் தெரிந்துகொண்டால் வாழ்வை இனிதாக்கலாம். நோய்கள் உட்பட வாழ்க்கையில் நாம் சந்திக்கும் சகல பிரச்சினை களையும் எமது அணுகுமுறையின் மூலம் எளிதாக்கலாம்.

ஒருவரைப் பார்த்தவுடனே மூளையின் Pleasure centreஇல் (கிளர்ச்சி மையம்) Dopamine (டோபமைன்) என்கிற வேதிப்பொருள் பெருக் கெடுத்து சுரக்கத் தொடங்கினால் அதன் பெயர் காதல் ஈர்ப்பு. அதற்காக டோபமைன் என்பதைக் காதல் சுரப்பி என்று எடுத்துக்கொள்ள முடியாது. காதலுக்கு என்று தனிச் சுரப்பி எதுவும் இல்லை. அது ஒரு பரவசச் சுரப்பி. சுமாரான கோகைன் போதைப் பொருளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் பரவச நிலையைக் காதல் வயப்படும்போது டோபமைன் ஏற்படுத்துகிறது.

காதலில் தோல்வி என்னும் எதிர் நிலையில் டோபமைன் முற்றி லுமாக வறண்டுவிடுவதுடன் ஏற்கெனவே சுரந்து கொண்டிருந்த செரடோனின் (Serotonin) என்கிற வேதிப் பொருளின் அளவும் மிகக் குறைந்துவிடும். இது மனச்சோர்வை ஏற்படுத்தும். இந்த மனச்சோர்வுதான் விபரீதங்களுக்கு வழி வகுக்கிறது. இந்த விபரீ தங்களில் ஒன்றுதான் காதலித்தவரையே அழிக்க நினைப்பது.

காதலை Passionate என்கிறது உளவியல். அதாவது, கட்டுக்கடங்காத, மிக அதிகப்படியான விருப்பம் அல்லது காதல். இவ்வகை காதலின் கட்டுமானத்தை, காதல் மீதான வாழ்க்கைக் கட்டுமானத்தை முன்னதாகவே அந்த நபர் தீர்மானித்துவிடுகிறார். அதன் எல்லைகள், கோட்பாடுகள், விருப்பு வெறுப்பு கள், ஊடல், கூடல் அனைத்துமே விதிமுறை களாக முன்னதாகவே அந்த நபரின் மூளையில் வரையறுக்கப்பட்டு விடுகின்றன. சிறப்பு இராணுவச் சட்டம் போன்றதொரு மூளை நரம்பு மண்டல அமைப்பியல் அது.

காதலிக்கும் இருவருக்கும் இப்படியான மனநிலை அமைந்தால் அந்தக் காதலில் விபத்துநேரும் வேளையில் அவர்கள் உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள். ஒருவ ருக்கு மட்டும் அமைந்தால் அதீத ஆபத்துத் தான். இதில் ஒருவர் பிரிய நேரும்போது அவர் இல்லாத உலகத்தை மற்றொருவரால் கற்பனை செய்ய இயலாது. அதீத தனிமை மற்றும் வெறுமை உணர்வு ஏற்படும். காதல் என்னும் மெல்லிய உணர்வு, அங்கு அதற்கு எதிரான கொலை உணர்வாக மாற்றம் எடுத்து, காதலித்தவரையே அழிக்கத் துணி கிறது. ஆனால், காதலும் ஓர் வேதி வினையே என்கிற உண்மையை ஆழமாகவும் தெளி வாகவும் உணர்ந்தால் இதுபோன்ற சூழல்கள் நேரும்போது விபரீத முடிவுகள் எடுக்கத் தோன்றாது. கட்டுக்கடங்காத ஈடுபாட்டைக் குறிக்கும் Passionate என்பதைப் பார்த்தோம். Compassionate என்னும் உணர்வும் இருக்கிறது.

அறிவுபூர்வமான தெளிவு, அன்பு, பரஸ்பர மரியாதை, நம்பிக்கை, பாசம், நெகிழ்வு, விட்டுக்கொடுக் கும் தன்மை இவையே Compassionate காதலின் அம்சங்கள். ஆசைக்குப் பதில் நெகிழ்வும் மரியாதையுள்ள ஈடுபாடும் இருபாலருக் கிடையே வளர்ந்தால் காதலாலோ காதல் தோல்வியாலோ விபரீதங்கள் நிகழாது.



சொல்ல வேண்டிய வேளையில், நீங்கள் சொல்ல வந்த வார்த்தையை சொல்ல முடியாமல் தவிக்கின்றீர்களா? இப்பொழுது ஆங்கிலத்தில் விசேடத்துவம் பெற்ற நிபுணர்கள் மூலம் இதற்கு நீங்கள் நிரந்தர நிவாரணம் பெற முடியும். ரூ.800/- மாத்திரம் செலுத்தி விரைவான, வலியற்ற எமது ஆங்கில பரிசோதனையினை மேற்கொண்டு பரிந்துரைக்கும் பாடநெறியை பின்பற்றுங்கள். ஆரோக்கியமான ஆங்கிலத்திற்கு British Council க்கு பிரவேசியுங்கள்.

49 ... கொழும்பு 3 | T +94 (0)11 7521 521
88/3 ... கண்டி | T +94 (0)81 2222 410
70 ... யாழ்ப்பாணம் | T +94 (0)77 3407 145

Apex Business Academy
+94 (0)41 2229 555, +94 (0)91 2232 755

E info.lk@britishcouncil.org

BRITISH COUNCIL

www.britishcouncil.lk

(C/13084)



## தொழில்வாய்ப்பு வழிகாட்டிக் கருத்தரங்கு

நீங்கள் க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவரா / சித்தியடையாதவரா ? பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றும் தெரிவு செய்யப்படாதவரா ?

**மன்னார் மாவட்ட மாணவர்களே!**
**உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!!**

மன்னார் நலன்புரி சங்கம் - இங்கிலாந்தின் அனுசரணையுடனும் மன்னார் பமீலியன் உளநல புனர்வாழ்வு மையத்தின் ஆதரவுடனும் நடத்தப்படும் "தொழில்வாய்ப்பு வழிகாட்டிக் கருத்தரங்கு"

திகதி :12 சித்திரை 2014
நேரம் :காலை 9மணி - மாலை 4மணி
இடம் :பமீலியன் உளநல புனர்வாழ்வு மையக் கருத்தரங்கு மன்றம்

பின்வரும் மாதிரியைப் பின்பற்றி உங்கள் விண்ணப்பத்தை 10.4.2014 இக்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
திட்டத் தொடர்பாளர், பமீலியன் உளநல புனர்வாழ்வு மையம்
தலைமன்னார் வீதி, மன்னார்.

பெயர் : ...............................
முகவரி : ...............................
தொ.பே. : ...............................
பெறுபேறு: ...............................

(C/13121)

உங்களது சுய விவரக் கோவை மற்றும் சான்றிதழ்களையும் கருத்தரங்கிற்கு எடுத்துவரவும்.

மேலதிக தகவலுக்கு 023 2222938 / 0770395814 / 0777276230

# பிரச்சினைக்கு இடமே இல்லை

இன்றைய இளைஞர்கள் அறிவியல், தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளில் வெகுவேகமாக முன்னேறி வருகின்றனர். பல்வேறு திறமைகளை கைவசம் கொண்ட அவர்களுக்கு தங்கள் சொந்த பிரச்சினைகள் மட்டும் பூதாகரமாக இருப்பது ஏன்? இன்றைய தலைமுறையை சிக்கலுக்குள்ளாக்கும் கேள்வி இதுதான்.

நவீன தலைமுறையினருக்கு தங்களது பிரச்சினைகளை பெற்றோர்களிடம் ஏன் வெளிப்படையாக தெரிவிக்க முடிய வில்லை? இதற்கு என்ன காரணம்? அப்படியே திக்கித்திணறி தெரிவித்தாலும் கூட, அவை பெரும்பாலும் தோல்வியில் தான் முடிகின்றன. இதற்கு என்ன தான் காரணம்? பெற்றோர்களி டம் இன்றைய இளைய தலைமுறையினர் தங்களுக்குள்ள பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதற்குள் ஒருவித பதற்றம் வந்து தொற்றிக் கொள்கிறது. தீர்ப்பு தங்களுக்கு சாதகமாக அமையாமல் போய் விடுமோ என்ற பயத்தில்தான் அந்த பதற்றம் ஏற்படுகிறது.

அந்த மிதமிஞ்சிய எதிர்பார்ப்பில், தாங்கள் சொல்ல வந்த பிரச்சினைகளை மறந்து எதைஎதையோ தவறாகச்சொல்லி விடுகிறார்கள். அதன் பின்னர், பெற்றோர்கள் தங்களுக்கு சாதகமாக பதில் சொல் வார்கள் என்று பிள்ளைகள் எதிர்பார்த்தால், அவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சுகிறது. அதேபோல், பிள்ளைகள் சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்லி விட்டார்களா? அல்லது சொல்ல வந்த விஷயத்தில் எதையாவது மறைக்கிறார்களா என்று பெற்றோர்களும் உணர்ந்துகொள்ள வேண்டும்.


பொதுவாக, இந்த மாதிரியான நெருக்கடிகள் குறித்து இளைய தலை முறையினர் யோசிப்பதே இல்லை. காரணம், அவர்களுக்கு 'தாங்கள் தான் எல்லாவிதத்திலும், பெற்றோர்களை விட சிறந்தவர்கள். இப்போது உள்ள அறிவியல் சாதனங்கள் அவர்களது பெற்றோர்களது இள வயதுக் காலத்தில் இருந்ததில்லை. அதை நாம் தானே பயன்படுத்துகிறோம், அதனால் 'எமக்குத் தான் எல்லாம் தெரியும்' என்ற அதிகப் பிரசங்கித்தனமான எண்ணமும் ஒரு காரணமே.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதென்றால், தங்கள் பிரச்சினைகளை எவ்வாறு பெற்றோர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்றே அவர்களுக்கு தெரிவதில்லை. உங்களது பெற்றோர்களது அனுபவங்கள் உங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்பதை நம்புங்கள். அதனால் உங்கள் பிரச்சினைகளைத் தயங்காமல், எதையும் மறைக்காமல் வெளிப்படையாக எடுத்துக் கூறுங்கள். அப்போது தான் முழுமையான தீர்வு கிடைக்கும்.

சொல்ல விரும்பும் பிரச்சினையை அவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் சுருக்கமாக எடுத்துக் கூறுங்கள். என்ன பிரச்சினை? எங்கு நடந்தது? அதற்கு யார் காரணம்? நீங்கள் என்ன முடிவு எடுத்திருக் கிறீர்கள்? நீங்கள் எதிர்பார்க்கும் முடிவு என்ன? என்பது போன்ற அடிப்படையான தகவல்களை உங்கள் பெற்றோர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்.

உதாரணத்துக்கு நீங்கள் காதல் திருமணம் செய்து கொள்ள ஆசைப் படுகிறீர்கள். அதை உங்கள் பெற்றோரிடம் தயங்கித் தயங்கி தெரிவிக்கும் போது அவர்கள் மறுத்து விடுகிறார்கள். நீங்கள் திருமணம் முடிந்தால் போதும் என்ற அப்போதைய சந்தோஷத்தை எதிர்பார்க்கிறீர்கள். ஆனால், உங்கள் பெற்றோரோ, 'பிள்ளைகளுக்கு எந்த விதத்திலாவது தீங்கு நேர்ந்து விடுமோ?' என்று பயப்படுகின்றனர். அதனால் தான், அவர்கள் மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

பிரச்சினைகள் தலைமுறை இடைவெளியிலோ, அல்லது தகவல் தொடர்பு இடைவெளியிலோ வருவதில்லை. நம்மிடம் தான் உள்ளன. பிரச்சினைகளை எவ்வாறு எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதைத் தெளிவாக புரிந்து கொண்டால் போதும். தெளிவு உள்ள இடத்தில் பிரச்சினைக்கு இடமே இல்லை.



தங்கள் பிரச்சினை களை எவ்வாறு பெற்றோர்களுக்கு புரிய வைக்க வேண்டும் என்றே அவர்களுக்கு தெரிவதில்லை. அவர் களுடைய அனுபவங்கள் உங் களது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும் என்பதை நம்புங்கள். அதனால் உங்கள் பிரச்சினை களைத் தயங்காமல், எதையும் மறைக் காமல் வெளிப்படையாக எடுத்துக் கூறுங்கள்.




# சாமானியர்களின் முகங்கள்

கற்கால மனிதன் கரித் துண்டுகளைக் கொண்டு, விலங்குகளின் எலும்புகளைக் கொண்டு, தான் பார்த்ததில், தன்னைப் பாதித்த காட்சிகளைக் குகை களுக்குள் ஓவியமாகத் தீட்டினான். மனிதன் முதன்முதலில் கைக்கொண்ட கலை வடிவம், ஓவியம் தான் எனலாம். மொழி பிறப்பதற்கு முன்பே இந்த வடிவம் தோன்றியிருக்கக் கூடும். தொடக்கத்தில் கோடுகளால் வரையப்பட்ட இந்தக் கலை வடிவம், பல்வேறு வடிவங்களாக முன்னேற்றம் கண்டுள்ளது.



வான்காவின் முதல் ஓவியம்

இன்று கொண்டாடப்படும் எண்ணெய் பெயிண்டிங் போன்ற நவீன ஓவியத்தின் பிறப்பிடம் ஐரோப்பாதான். குறிப்பாக நெதர்லாந்து இந்தக்கலையில் சிறந்து விளங்கியுள்ளது. உலகின் புகழ் பெற்ற ஓவியர்களுள் பலரும் டச்சுப் பின்னணி உடையவர்களாக இருந்துள்ளனர். அவர்களுள் முக்கியமானவர் வின் சென்ட் வான்கா. இவரது The starry night; Almond Blossoms; போன்ற பல ஓவியங்கள் இன்றும் ஓவிய ரசிகர்களுக்கு வியப்பூட்டிக் கொண்டிருப்பவை.

வான்காவின் முதல் ஓவியமாகக் கருதப்படுவது அவரது The Potato Eaters (உருளைக் கிழங்கு சாப்பிடுபவர்கள்)'. இது 1885ஆம் ஆண்டு வரையப்பட்டது. இந்த ஓவியம் உருளைக் கிழங்கைச் சாப்பிடும் எளிய விவசாயிகளைச் சித்திரிக்கிறது. அது வரை ஓவியங்களில் சித்தரிக்கப்பட்ட முகங்களுக்கு மாற்றான மனித முகங்களைச் சித்தரிக்கவே வான்கா விரும்பினார். பொது வாகப் பார்ப் பதற்கு அழ கற்ற முகங்கொண்ட எளிய மனிதர்களிடம் உள்ள இயல்பான அழகை அவரால் சித்தரிக்கவும் முடிந்திருக்கிறது.

ஆனால் அந்த ஓவியம் பெரிதாக அங்கீகரிக்கப்படவில்லை. இன்று உலகின் தலை சிறந்த ஓவியங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் இந்த ஓவியம் அன்று பெரிதாகக் கவனிக்கப்படவில்லை.

இந்த ஓவியத்தில் ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பம் சித்திரிக்கப்பட்டுள்ளது: மூதாட்டி ஒருவர், ஒரு பெண், ஒரு ஆண், இளம் பெண்ணொருவர், ஒரு சிறுமி. ஐந்து பேரும் உணவு மேசையில் அமர்ந்திருக்கிறார்கள். உணவான உருளைக் கிழங்குத் துண்டுகள் அரையிருளில் இருக்கின்றன.

அவர்கள் அனைவரின் கைகளும் உழைப்பால் இறுகிப் போய் உள்ளன. ஒளியில் தெரியும் அவர்களது பாதி முகங்களில் எண்ணற்ற உணர்ச்சிகள். மீதிப் பாதி முகங்கள் இருளில். நின்றபடி இருக்கும் சிறுமியின் முதுகுப் பக்கத்தையும் இருள் போர்த்தியுள்ளது.

ஜன்னல், விட்டம், சுவரில் தொங்கும் படமும், கடிகாரமும் எல்லாமும் இருளால் மூடப்பட்டுள்ளன. அவர்கள் அமர்ந்திருக்கும் அறை எங்கும் இருள் நிறைந்து கிடக்கிறது. அவர்களின் தலைக்கு மேலே உள்ள எண்ணெய் விளக்கின் சிறிய வெளிச்சம் மட்டும் அந்த அறையில் கசிந்துகொண் டிருக்கிறது.

அந்த அறையில் இருந்த விலக்க முடியாத இருட்டை சாசுவதமாக மாற்றிவிட்டார் வான்கா.